ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

சுதேசமித்திரன்

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி" "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் பண்பு பாராட்டு முலகு" "நாடொப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—கூ. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவவரு ஆடிமீ உஎஉ (11-8-35) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—கூ.

தோத்திரம்.

இந்திரசா லங்கனவு கானலின் நீ ரெனவுலகம் எமக்குத் தோன்றச்
சந்ததமுஞ் சிற்பரத்தா லழியாத தற்பரத்தைச் சார்ந்து வாழ்க
புந்திமகி முறநாளுந் தடையறவா னந்தவெள்ளம் பொலிக வென்றே
வந்தருளுங் குருமௌனி மலர்த்தாளை யனுதினமும் வழுத்தல் செய்வாம்.

—தாயுமான சுவாமிகள்.

கூட்டுறவியக்கம்.

(பாடநூல்களியற்றல்)

(கோழும்பு, சகிராக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பண்டிதர், திரு. மு. நல்லதம்பி அவர்கள்.)

தண்டமிழ் புரக்குந் தகைமலி புலமையிர்!
பண்டைப் பனுவற் பயன்றெரி மாண்பினிர்!
இறையருள் தெரிக்கு நிறைமொழி யந்தணிர்!
தமிழ்ச்சுவை மாந்திய தவத்தினிர்! சிறந்த
5 கருத்தினை யுடையிர்! கலைத்துறை போயினிர்!
தூய்ந்தமி ழாலுரை தொடுத்திடு வளத்தினிர்!
மறபுலம் பெயர்க்குந் திறனளி படைத்தனிர்!
நடுநிலை பிறழாது நாணம் வீடாது
தமிழன் யானெனத் தலையெடுத் தயராது
10 புதுப்பணி குயிற்றிடும் புகழ்சால் நெறியினிர்!
மதலையர்ப் பயிற்றி மண்ணிய மணியென
வுலகுக் களிக்கு முயரொழுக் குடையிர்!
எண்ணிற் சிறந்திர்! எழுத்தின் வல்லிர்!
பண்ணின் மிகுந்திர்! பாட்டினி னல்லிர்!
15 உளநூ லுடனூ லுரைக்கும் பெரியிர்!
நிலநூல் வானநூல் நெறிப்பட வறிந்திர்!
வரலாறு பிறழாது வாய்மையி னுரைப்பிர்!
இயலா றியம்பு மெழிலிர்! நுங்கள்
அடியினை தொழுதனெ னறைகுவென் கேண்மின்!
20 செவ்விய முறையிற் செழுநூ லளப்பில
எவ்வெக் நாட்டினு மெவ்வெக் கலையினும்
எழுந்து திகழ்தலை யாங்காண் டும்மே:
ஈழத் திந்நா ளெத்தனை புதுநூல்
நல்லன வென்ன நயந்தன வெழுந்தன?
25 பள்ளிச் சிறார்கைப் படுநூ லவற்றுள்
ஈழத்து நெறிதழீஇ யெழுந்தன வெத்தனை?
யாமென்று மறியா இடர்ச்சொற் கோட்டி
அயனூட்டு நூல்க ளடுப்பன கண்டுகண்
டென்னே வாளா விருந்தன மியாங்கள்?
30 பன்னூட் டகத்தும் பயனறி வாராப்
பண்டைப் பனுவல்கள் கிண்டிக் கிண்டி
யுலக நுகர்க்திட வுதவினர் பலரால்,
நுண்மதி கொளுத்தி விண்ணின ரிவரெனப்
புகழ்செறி பனுவல்கள் புதுக்கினர் பலரால்,
35 எட்டாச் சேய்மையி னியாத்தன கண்டு
முட்டா மொழியிற் பெயர்த்தனர் பலரால்,
ஒருவ ரறிந்தன ஒருவ ரறியார்,
ஒருவர்க்கு வாய்ப்பன ஒருவர்க்கு வாயா,
உலகிய லிதுவே உண்மையு மிதுவே;
40 யாவரு மியைந்தன மிவையிவை யெமக்கெனக்
கைவரு நெறியி னெவ்வொரு துறையினு
மிக்கனந் திரண்டு வீறுகொண் டெழுந்து
நன்னூல் பலப்பல நாட்டுகம் வம்மின்!
நுண்ணிய ராகி நூல்பல வெழுதித்
45 திண்ணிய ராயினர் மண்மிசைப் பலரால்,
'நெடுநீர் மறவி மடிதுயி' லுடைமையாற்
கற்றன பிறர்க்குக் காட்டா ராகி
வெற்றுடம் பழித்தவர் மிகமிகப் பலரால்;
கற்றன பாழ்படக் காலம் போக்கி
50 நற்றிறந் தொலைத்தல் நன்றோ விளம்புதிர்!
அழுக்காறு வேண்டா அடாப்பகை வேண்டா,
அன்பின் பிணிப்பால் அல்லல்கள் தீண்டா,
கூட்டுற வான்மே னாட்டினர் செல்வ
மீட்டினர் புகழுடம் பிருத்தினர் விளங்கல்
55 கேட்டுங் கேட்டுங் கிளர்ச்சி யின்றி
நாட்டினில் வறிதே நாமயர்ந் திருத்தல்
புகழுடம் பழிக்குமஃ தான்று
58 மிகையுடை யார்க்கு நகையுந் தருமே.

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டு விசாரணை—1.

காரைதீவுக் கத்திக்குத்து வழக்கு

"அண்ணன் தம்பியைக் கொல்ல எத்தனம்."

முதலாவது வழக்கு.

(நமது நிருபர்.)

யாழ்ப்பாணம் 7.

இவ்வருடத்தின் இரண்டாம்முறை கூடும் சங்கைபோந்த சுப்பிறீம் கோடு இன்று காலை 12 மணியளவில் கூடியது. சங்கைபோந்த நீதியரசர் திரு. எல். எம். மாட்டினேஸ் அவர்கள் நீதாசனத்தின் உரிமையாளரானார். அரசியற்றலைவர் திரு. ஈ. ரீ. டைசன் அவர்கள் தமது கடமையை நிறைவேற்றினர். மரியாதைகள் யாவும் வழமைபோல் நடைபெற்றன. திரு. எச். டபிள்யு. லப்றுய் அவர்கள் நீதியரசரது அந்தரங்க காரியதரிசியாகவும், திரு. டபிள்யு. ஜே. பெரைரா அவர்கள் றிஜிஸ்ரார் ஜெனரலாகவும், முதலியார் ரீ. வேலாயுதம் அவர்கள் தமிழ் மொழிபெயர்ப்பாளராகவும், முதலியார் எச். ஸி. வைத்யரெத்தினா அவர்கள் சிங்கள மொழிபெயர்ப்பாளராகவும், திரு. நிகால் குணசேகரா அவர்கள் முடிக்குரிய நியாயவாதியாகவும், திரு. ஸி. கனகசபை அவர்கள் ஸ்ரோன் நிருபராகவும் தத்தமது ஆசனங்களிலமர்ந்தனர். இம்முறை டாப்பில் 17 வழக்குகள் காணப்படுகின்றன. அவற்றுள் கொலை வழக்குகள் 10; பெண்சோர வழக்குகள் 2; கொலைசெய்ய எத்தனித்த வழக்குகள் 2.

யாழ்ப்பாணம் சுப்ரீங்கோட்டில் நீதியரசர் திரு. L. M. மாட்டினெஸ் முன்பாகவும், ஆங்கிலம்பேசும் ஜூரிக்கனவான்கள் முன்பாகவும் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்—ஊர்காவற்றுறைப்பகுதி—காரைதீவு மேற்கில் அவ்வூர்வாசியாகிய (1) கணபதிப்பிள்ளை-கந்தையாமீது சென்ற ஏப்ரல்மாதம் 2-ந் திகதிபன்று அவ்வூர்வாசியும் சொந்தத் தம்பியுமாகிய கணபதிப்பிள்ளை-அம்பலவாணர் என்பவரைக் கத்தியாற்குத்திக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும் (2) வேலாயுதர்-நாகமுத்து என்பவர்மீது மேற்கூறிய செயலுக்கு உடந்தையாகவிருந்து உதவிசெய்ததாகவும் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி திரு. நிகால் குணசேகராவும் எதிரிகளின் சார்பாக நியாயதுரந்தரர் திரு H. R. ஆரியகுட்டியின் அனுசரணையின்பேரில் நியாயவாதி திரு. எஸ். கந்தையாவும் பிரபல நியாயவாதி திரு. எஸ். தம்பு துரைசுவாமியும் விவாதித்தார்கள்.

முதலாவதாக ஊர்காவற்றுறைப் பகுதி டிஸ்திறிக் மெடிக்கல் ஆபீசர் டாக்டர் L. D. டோல் அவர்கள் சாட்சியங் கூறினார்.

இரண்டாவதாகக் காயமடைந்தவராகிய கணபதிப்பிள்ளை-அம்பலவாணர் சாட்சியாக விசாரணைசெய்யப்பட்டார். அப்போது அவர் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"நான் கல்யாணம் முடித்தவன். எனக்கு மனைவி இருக்கிறாள். 1-ம் எதிரி எனது சொந்தச் சகோதரனே. அவரும் தனது மனைவியுடன ஏறக்குறைய $\frac{1}{4}$ மைல் தூரத்திற்கு அப்பால் இருக்கிறார். எங்களது தாயார் என்னுடனேயே இருக்கிறார். நான் பசறையென்னுமூரில் வியாபாரம்செய்து வருகின்றேன. நான் எனது சொந்த ஊராகிய காரைதீவி லில்லாதிருக்கும் போது எனது தாயாரும் எனது மனைவியுமே எனது வீட்டிலிருப்பார்கள். நான் இருக்கும் காணியில் 2 வீடுகள் இருக்கின்றன. 2-ம் எதிரி மருமகன் முறையானவர். அவர் அண்ணனாகிய எதிரியின் மனைவி மூலமாகவே எனக்குச் சொந்தமானார். கடந்த சித்திரைமாதம் 2-ந் திகதியன்று நடைபெற்ற சம்பவம் நினைவிலிருக்கின்றது. கோவளத்துக்குப் போகும்வழியில் உள்ள கிராமச்சங்க றோட்டிலே சரியாக 6, $6\frac{1}{2}$ மணியளவில் நான் மலவிமோசனஞ் செய்யும்வண்ணம் போகும்போது 1-ம் 2-ம் எதிரிகளைக் கண்டேன். அவ்விடம் எனது அம்மான் ஆறுமுகத்தின் வீட்டிலிருந்து 160 அடி தூரமிருக்கும். நான் எதிரியைச் சந்தித்ததும், "என்னைப்பற்றிக் குற்றமாகப் பொலிஸ் விதானையிடம் சொன்னாயோ" எனக் கேட்டேன். (1-ம் எதிரி அன்றையதினம் 4-மணியளவில் விதானையிடம் சொன்னதாக என்னிடம் பின்னேரம் 6 மணியளவில் ச. க. முருகேசுவினுடைய கடையில் பொலிஸ் விதானை கேட்டார்.) எனது வீட்டின் கதவை நான் பூட்டிக்கொண்டதாகவும், திறப்பை நானே வைத்திருப்பதாகவும் 1-ம் எதிரியிடம் எனது தாயார் முறையிட 1-ம் எதிரியே விதானையிடம் கூறினார். விதானை அன்றையதினம் என்னைச் சந்தித்தபோது திறப்பைப்பற்றிக் கேட்கவில்லை. என்னிடம் விதானை சொன்னபோது, அம்மாதிரியானவ் என்மீது வழக்கு வைக்கட்டும்எனச் சொல்லிவிட்டுச் சாமான் வாங்கிக்கொண்டு போய்விட்டேன். நான் இருக்கும் வீடும் வளவும் எனக்குச் சொந்தமானதே. எனது தாயார் எனக்கே எழுதித் தந்துவிட்டார். விதானை என்னைக் கேட்டபோது 1-ம் எதிரி அவ்விடத்திலில்லை. நான் எதிரியைக் கண்டதும் விதானைக்கு என்ன சொன்னாய் எனக் கேட்க எதிரி கிட்ட வந்து உனக்குச் சொல்லத்தான் வேணுமோ என்று சொல்லியவண்ணம் எனது கழுத்தை 2 கையாலும் பிடித்து என்னைக் கீழே வீழ்த்தினான். எதிரியும் கீழே வீழ்ந்தான். நான் கீழாகவும் எதிரி மேலாகவும் இழுபறிபட்டோம். பின்னர் எதிரி எனது கன்னத்தில் இருந்துகொண்டு கத்தியால் குத்தினார். அத்தருணத்தில் 2-ம் எதிரி எனது குண்டியில் இருந்து அமத்தினார். உடனே நான் ஐயோவெனக் கத்தினேன். அச்சத்தம் கேட்ட ஆறுமுகம் (பெண்கொடுத்த மாமன்) அவ்விடம் வந்தார். 1-ம் எதிரி குத்திவிட்டோடிவிட்டதாகவும் 2-ம் எதிரி அப்படியே இருந்ததாகவும் வரும்போதே சொல்லிக்கொண்டு வந்தார். பின்னர் சண்முகம் சரவணமுத்து அங்குவந்து 2-ம் எதிரியைப் பிடித்தார். ஏறக்குறைய $\frac{1}{2}$ மணித்தியாலத்தின் பின் விதானையைச் சந்தித்தேன். எனது அம்மானே என்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக, இடைவழியில் விதானையைச் சந்தித்து அவரது வீட்டுக்குக் கொண்டுபோனதின்மேல் வாக்குமூலங்கொடுத்தேன். 2-ம் எதிரி அங்கு வரும்போது 3 போத்தல்கள் நிறைந்த சாராயத்தை ஓர் உமலில் கொண்டுவந்தார். என்னுடன் சண்டைக்கு வரும்போது அவற்றை வேலியில் சாத்திவிட்டே வந்தார். நான் ஆஸ்பத்திரியில் 25 நாட்கள்வரைஇருந்தேன். காயங்களுள் 2 காயங்கள் சரியாக மாறுவதற்கு முன்னரே ஆஸ்பத்திரியிலிருந்து புறப்பட்டேன்."

சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்தபோது கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"எனது தாயாருக்குக் கண்ணில் சுகமில்லாமலிருப்பது எனக்குத் தெரியாது. நான் இச்சம்பவம்நடைபெறுவதற்கு ஏறக்குறைய 10 நாட்கள் முன்னரே அம்மான்வீட்டில் வசித்துவந்தேன். தாயாரின் கண்ணுக்குப் போடும் மருந்து நான் பூட்டிய அறையினுள் இருந்ததோவென எனக்குத் தெரியாது. நான் எனது தாயாருக்கு அடிக்கவில்லை. அவ்வீட்டின் கதவைப் பழுதுபடுத்தவுமில்லை. எனது தாயாருக்கு அவ்வளவில் சீவியஉரிமை இருக்கின்றது. அக்காணியை நான் தற்சமயத்தில் ஈடுவைத் திருக்கிறேன்."

இதன்பின்னர் காயமடைந்தவரின் மாமனாகிய கந்தர்-ஆறுமுகம் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"காயமடைந்தவர் எனது மகளையே மணமுடித்தவர். அந்நாட்களில் நான் சுகமில்லாமலிருந்தமையால் இது நடைபெறுவதற்கு ஐந்து ஆறு நாட்கள் முன்னராகவே எதிரியும் மனைவியும் எனது வீட்டில் வசித்துவந்தார்கள். பொழுதுபடும் நேரத்தில் ஐயோ "என்னைக் குத்துகிறார்கள்எனக் கூக்குரல்கேட்டதும் நான் ஓடிப்போனேன். போனபோது முதலாம் எதிரி முதுகில் குத்திய கத்தியை இழுத்துக்கொண்டு ஓடினார். 2-ம் எதிரியும் காயமடைந்தவனை அமுக்கிக்கொண்டிருந்தார். அங்குவந்த சரவணமுத்து என்பவர் 2-ம் எதிரியைப் பிடித்து விதானை வருமளவும் அவ்விடத்திலேயே நிற்கும்படி சொல்லிவிட்டுப் பொலிஸ் விதானையிடம் சென்றார். 2-ம் எதிரி 1-ம் எதிரியின் வீட்டுப்பக்கமாகவே சென்றார். நானும் பொன்னம்பலமும் வேறுமாட்களுமாகக் காயமடைந்தவனைத் தூக்கிச்சென்றோம். அந்நாட்களில் நான் சின்னமுத்து என்னும் வருத்தத்தினால் பீடிக்கப்பட்டிருந்தேன்."

இச்சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்ததின்மேல் சண்முகம் சரவணமுத்துவை விசாரணைசெய்யப்பட்டது. அதன்மேல் காரைதீவு மேற்குப் பொலிஸ்விதானை கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

"இந்துசாதன"மும் தேவ தூஷணமும்.

கத்தோலிக்கரின் கண்டனம்.

தேசாதிபதிக்கு மனு.

(நமது நிருபர்.)

யாழ்ப்பாணம் 7

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் "இந்துசாதனம்" என்னும் பத்திரிகை தேவதூஷணை செய்ததாகவும், சனங்களுள் பகைமையை வளர்க்கக் கூடிய விதையை விதைத்ததாகவும், அதற்கேற்ற வழிவகைகள் கையாளப்படவேண்டுமெனவும் அரசாட்சியாரை வேண்டிக்கொள்ளுமோர் நிர்ணயம், சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணம் பரிசுத்த மாதா கோயிலிற் கூடிய கத்தோலிக்கரின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் அநேக கிறீஸ்தவ ஆடவர்களும் பெண்மணிகளும் சமுகமா யிருந்தார்கள். திரு. பீ. மோசேஸ் J. P. அவர்கள் தலைமை வகித்தார். திரு. கொஸ்மஸ் டபிள்யு. டி. அல்வினிஸ் காரியதரிசியாகத் தெரியப்பட்டார்.

நிர்ணயம்

"சத்தியவேத பாதுகாவலன்" பத்திராதிபர் திரு. ஏ. ஞானப்பிரகாசமவர்கள் பின்வரும் நிர்ணயத்தைப் பிரேரிக்க திரு. என். எம். வன்னியசிங்கம் அனுவதித்தார்.

"சென்மேரிக் கோயில் கத்தோலிக்கரைக்கொண்ட இக்கூட்டம், 1935-ம் ஆண்டு யூலைமீ 15உ வெளியிடப்பெற்ற தமிழ்ப் பதிப்பு "இந்துசாதன"த்தில் "ஆத்மாவின் விலை" என்னும் தலையங்கத்தின் கீழ்எழுதப்பெற்ற விஷயம் கிறீஸ்து சமயத்தின் மீதும், குருமார்மீதும், பிரதானமாகச் சமயம்தோன்றுவதற்குக் கர்த்தாவாயுள்ள தேவன்மீதும் வம்பத்தனமான தூஷணையைக் கொண்டதென்று கண்டிப்பதுடன் இது சமயத்துவேஷத்தையும் ஒற்றுமைப் பங்கத்தையும் விளைக்கக் கூடியதாயிருத்தலால் அதி சீக்கிரத்தில் இதுவிஷயமாக ஏற்ற வழிவகைகள் கையாளவேண்டுமென அரசாட்சியாரைத் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகின்றது."

இந்த நிர்ணயத்தைக்கொண்ட மனுக்கள் பதில்தேசாதிபதிக்கும், உள்நாட்டு மந்திரிக்கும், பொலிஸ் தலைவருக்கும் மாகாணத்தலைவருக்கும், இந்துசாதனப் பத்திராசிரியர்க்கும், கத்தோலிக்க ஒற்றுமைச் சங்கத்துக்கும், பிஷப்புக்கும் அனுப்பப்பட வேண்டுமெனவும் நிர்ணயிக்கப்பட்டது. வேறும் அநேகவிடங்களில் இதுபோன்ற கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன.

சிட்டுக்குருவி சத்தினால் செய்யப்பெற்ற
மின்சார லேகியம்
சாப்பிடுங்கள்
ஒரேவேளையில் குணந்தரும்
48 நாள் டின் 1க்கு ரூபா 5-0-0. வி. பி. வேறு
இனாம்! — வியாபாரிகள் பரீட்சிக்க சாம்பிள் டின் இனாம்!
எம். முகம்மது யூசுபு வைத்தியசாலை,
பரங்கிப்பேட்டை, (Porto Novo.)
கொளும்பு ஏசண்டு:
ச. இ. காதர் மெய்தீன், 39, ஓல்ட் பிட்சர்ஸ் ஸ்ரீட், கொளும்பு.
[(10) 14-7-35—12]

பத்திரக்கிரயம்
இலங்கை, இந்தியா, பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு ,, அணா 1.
மலாய்நாட்டுக்கு ,, காசு 5.

ஈழகேசரி

விளம்பரவிகிதம்
முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
,, அரைக்கலம் ,, 4-00
,, காற்கலம் ,, 2-50
அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு.

தொகுதி—கூ. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஹு ஆடிமீ உஎஉ (11-8-35) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—கூ.

எங்கு பார்த்தாலும் யுத்தகோலமே!

உலக யாத்திரையிற் கண்ட காட்சி

காந்தியடிகள்மீது யாவர்க்குமுள்ள ஆர்வம்.

(Dr. J. தாஸ்)

நான் உலகின் பிரதம நாடுகட்குச் சென்று அவ்வூர்களின் நிலையைச் சிறிது நோக்கினேன். நான் தரிசித்த நாடுகளுட் சில சீனா, யப்பான், அவுஸ்திரேலியா, நியூஜிலண்டு, ஐக்கிய அமரிக்கா (U.S.A.) கனடா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் முதலிய ஐரோப்பியநாடுகள் என்பனவுமாகும். நான் அந்நாடுகளில் நன்கு கவனித்த ஒரு விஷயம் உளது. உலகத்தில் சமாதானம் உறுதியடைவது ஒருபோதும் கூடாத காரியம் என்பதே. யுத்தம் எப்போது ஆரம்பிக்குமென்றுசொல்ல வியலாதாகின்றது. எங்குபார்த்தாலும் யுத்ததளபாடங்களை அதிகரிப்பிப்பதில் பல்வேறு சாதியினரும் கண்ணும் கருத்துமாக நிற்கின்றனர். யுத்தக் கிளர்ச்சி பொதுவாக இத்தாலி, யப்பான், ஜேர்மனி என்னும் நாடுகளில் அதிவேகமா யிருக்கக்கண்டேன். மேலும் இத்தாலியின் யுத்தப் பைத்தியத்தை விரித்துரைப்பினும் அடங்காது. அங்கே ஒவ்வொரு வித்தியாசாலை மாணவனும் யுத்த மயமடையப் பெறுகிறான். சண்டைக்காலத்தில் யுத்தம் செய்யும்விதம் மிகவும் விசேஷமாகக் கற்றுக்கொடுக்கப்படுகின்றது. யுத்த விஷயத்தில் தலையைப்போட்டுடையாது மிகச் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் வாழ்பவர் சுவீடன், நோர்வே என்னுந் தேச வாசிகளே. இந்நாட்டவர் மற்றைய ஐரோப்பிய வல்லரசினர் போல் யுத்தங்களில் தம்மை மாட்டிக்கொள்வதில்லை. இப்போது உலகின் நிலையை நோக்கின் இன்றைக்கோ நாளைக்கோ இன்னுஞ் சில நாட்களின்பின்னோ எப்போதாவதுபெரிய கொடிய யுத்தம் கட்டாயம் ஏற்படும்போலிருக்கிறது. ஒரு பரிதாபமான விஷய மென்னவென்றால், விஸ்தீரணத்தில் சிறியன வாகினும் மிக அதிகாரமும் பெலமும் படைத்த பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, இங்கிலாந்து, யப்பான் என்னும் நாடுகள் சனத்தொகையிலும், விஸ்தீரணத்திலும் பன்மடங்கு கூடிய சீனா, இந்தியா முதலிய நாடுகளைச் சிறிதும் மதிக்கின்றனவில்லை. ஐரோப்பாவின் நடுப்பகுதியிலுள்ள சிறிய நாடுகளும் அதிகம் ஆதிக்கத்தையுடையனவாயிருக்கின்றன. பெலனற்ற சாதியினரும் நாட்டவரும் துரும்பாகத்தானும் மதிக்கப்படுகின்றாரில்லை. ஆனால் பொதுவாக எல்லா நாடுகளினும் சமாதானத்தை விரும்பும் கட்சியினரும் சமய பரிபாலகரும் இருப்பது பெரிய ஆறுதலைக் கொடுக்கும். இத்தாலியர், யப்பானியர், ஜேர்மனியர் என்னும் மூன்று சாதியினரும் சீர்திருத்தமடையாத நாடுகளைத் தம்வசப்படுத்தி அந்நாடுகளைப் பரிபாலிப்பது தமது பெரிய கடமை என எண்ணுகின்றனர்.

யப்பானியர் பொதுவாக எல்லாத் துறையிலும் அதிகம் விருத்தியடைந்த ஓர் சாதியினர். மிக்க தேர்ச்சியும் ஒழுங்கும் அங்கே பொதுவாக அமைந்திருக்கக் காணலாம். உயர்ந்த தேசிய நோக்குடையவர். அளவிறந்த தேசாபிமானமும் அவர்கட்குண்டு. உலகத்திலுள்ள வல்லரசினர் யாவரும் தமக்கு மாறானவர்கள் என யப்பானியர் எண்ணுவதால் அவர் தமது யுத்தத்தில் மிகக் கவனமும் ஆர்வமும் உடையவராயிருக்கின்றார். சீனாது நாட்டினையும் தமது ஆதிக்கத்துக்குள் கொண்டுவர முயலகின்றனர்.

சீனதேசம் இப்போது அடைந்த முன்னேற்றம் சன்-யாற்-சென் என்பவரின் அரிய தொண்டின் பயனேயாகும். அவரின்றேல் சீனா தற்போதைய நிலையை ஒருபோதும் அடையவியலாது. இப்போது சீனாவின் அரசியல் நான்கின் நகரிலிருந்து நடத்தப்படுகின்றது. அவ்வரசினர் எப்படியினும் யப்பானியர்க்குச் சிறிதும் பணிவதில்லையெனத் துணிவுடன் வாதாடி நிற்கின்றனர்.

இங்கிலாந்துவாசிகள் பொதுவாக நேர்த்தியானவர். அந்நியர் மீது அதிகம் பட்சம்காட்டி நிற்பவர். இவ்வளவுகாலம் இந்தியா பிரிட்டிஷார் ஆளுகையிலிருந்தும் பொதுவாகப் பிரிட்டிஷார்க்கு இந்தியாவைப்பற்றி ஒன்றுந் தெரியாதென்றே கூறவேண்டும். இந்தியா பொதுவாக நாகபாம்புகளும், யானைகளும் நிறைந்த நாடென்பதே பிரிட்டிஷாரின் அபிப்பிராயம். பெண்கள் இந்தியாவில் வீட்டினைவிட்டு வெளிக்கிளம்புவதில்லை. கல்வி கற்றோர் மிகச்சிலர்என்பதும் அவர் கருத்து. நான் இங்கிலாந்தில் வசிக்கும் காலத்தில் இந்தியா மிகப்பெரிய நாகரிகம் கைவரப்பெற்ற நாடெனப் பிரிட்டிஷார்க்கு விளங்கவைத்தேன்.

சமயம், கல்வி, ஓவியம், சிற்பம், சங்கீதம் என்பனவற்றில் இந்தியாவடைந்துள்ள மேனிலையை அவர்கட்கு நன்கு எடுத்துரைத்தேன். உலகத்தவர் யாவரும் இந்தியாவினைப் பெரிதாக மதிக்கச்செய்த பெருமை மகாத்மா காந்தியடிகட்கே உரித்துடையதாகும். நான் எங்கு சென்றாலும் எங்கு பிரசங்கஞ் செய்தாலும என்னைப் பொதுவாகக் காந்தியடிகளைப்பற்றிப் பேசும்படி கேட்பார்கள். அவரது வாழ்க்கையை அவதானித்து நிற்போர் கோடிக் கணக்கானோர் உளர். எவ்விஷயத்தைக் குறித்துப் பிரசங்கஞ்செய்ய நான் முற்பட்டபோதும் காந்தியடிகளைப்பற்றிக் கூறாது விடுவதென்பது ஒருபொழுதும் இயலாதகாரியம்.

உலகத்தில் பொதுவாக எல்லாம் துக்ககரமாக இருப்பதைக் கண்டு நாம் அதைரியப்படவேண்டியதில்லை. இவ்வித பரிதாபநிலை ஏற்பட்டதற்குப் புதினப் பத்திரிகைகள்தான் காரணமெனச் சிலர் கூறுகின்றனர். இக்காலத்தில் உபயோகமற்றனவும் வாசித்தற்கு ஏற்றனவு மல்லாத விஷயங்கள் அநேகமாகப் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன. கொலைகள், கல்யாணக் குழப்பங்கள், களவுகள் என்பனவற்றைக் குறித்த விஷயங்கள் உலகத்தின் ஓரந்தலையிலிருந்து மற்றந்தலைக்குச் சிறிது நிமிடத்துள் பரப்பப்படுகின்றன. விஷயங்களுக்கு முகவசனங்கள் எழுதும் விதமோ யாவர்க்கும் பரபரப்பை உண்டாக்குந் தன்மையனவா யிருக்கின்றன. பத்திரிகைகள் தமது கடமையை உரியவழியில் பொதுசனநலத்தைநாடி இயற்றிநிற்பது மிக அவசியம். இரு வல்லரசினர்க்கிடையில் சச்சரவைக் கிளப்புவதிலும் பத்திரிகைகள் மிகப் பேர்பெற்றவையாகும். இவைகளை நன்கு நோக்கிப் பத்திரிகைகள் நடத்தப்படில் பெரு நன்மையாயிருக்கும்.

தனித்தமிழ் இனித் தலையெடுக்குமா?

தமிழாசிரியகலாசாலைகளில் ஆங்கிலம்!

வறியவர் கற்கவேண்டாமாம்

[நுணாவில், திரு. க. கணபதிப்பிள்ளை அவர்கள்]

பல்லாண்டுகளாச் சிறப்புற்றோங்கிய நந்தண்டமிழ் மொழியானது, சில காலங்களா யதை யாதரிப்பாரிலாமை யாதியாங் காரணங்களாற் றளர்வெய்தியிருப்பப் பிற்றை ஞான்று பாரதி முதலாம் பல்கலைக் குரிசில்கள் நந்தாய்ப்பாஷையில், யாவரும் அபிமானமுடையவர்களாய் இருக்கவேண்டும்! நாம் தமிழர்களென்பதை நன்குணர வேண்டும்! நாம் தண்டமிழ்ச் செல்வியை நன்குகற்ற பின்னரே மற்றைய கல்விகளிலும் புகுதல் வேண்டும்! புகுந்து மற்றைய பாஷைகளி லுள்ள நன் சொல்களை நம் மொழியிற் பெயர்த்தல் வேண்டும் எனப் பக்தி ரசம் நனி சொட்டச் சொட்டச் சொற்பொழி வாற்றியும், கீதங்களாக்கியும், இறந்துபட் டொழிந்தனபோக மற்றைய பனுவல்களை அச்சேற்றியும், அரிய பெரிய தொண்டாற்றியதையும், ஆற்றுகின்றமையையும் அறியாதார் தமிழ் நிலவரைப்பி லிலரெனக் கூறன் மிகையாகா.

அரசாட்சியாரும், கல்விப்பகுதியாரும், தாய்ப்பாஷை விருத்திக்கெனச் செய்யும் அரிய பெரிய காரியங்களை நாம் ஒருபோதும் மறக்கக்கூடியதாயுமில்லை. ஆயினும், நம் தாய்ப்பாஷையைக்கற்போர்க்குக் கற்பிக்குந் தொழிலும், நொத்தாரிஸ் பதவியுமே உரிமையுடைத்தாயிருந்தும் இப்போது கற்பிக்குந்தொழில் தனிமையை எய்திவிட்டதெனக் கலங்கியிருக்கின்ற சமையத்திலே யதற்கு மிடையூறு?

தமிழாசிரிய கலாசாலைகளிலும் ஆங்கிலமாம்

தற்போது ஆசிரிய கலாசாலைகளிற் பயிற்சிபெறும் ஆசிரியர்கள் ஆசிரிய தராதரப்பத்திர பரீட்சையிற் சித்தியடைந்தவர்களாய், அன்றேல், ஆங்கிலத்தில் சீனியர்பரீட்சையிலும், அல்லது அதற்கு மேற்பட்ட பரீட்சைகளிலும் தமிழும் ஒரு பாடமாகச் சித்தியடைந்தவர்களாய் இருத்தல் வேண்டும் என்பது கல்விப்பகுதியார் கிடக்கை. ஆனால், ஆசிரிய கலாசாலையார் பிற்கூறியவர்களைப் பயிற்றுவது இலேசென்றும், பிறகியாயங்களும் கூறி, அவர்களைத் தெரிவு செய்கிறதற்கேற்றவாறு கூறுகின்றார்கள் எனத் தமிழபிமானிகள் கூறுகின்றார்கள். அரசாட்சியார் ஆசிரிய பிரவேச பரீட்சை (உ-சி-வ)யிற் சித்தியடைந்தோர் மூன்றுவருடம் ஆசிரிய கலாசாலையிற் பயிற்சி பெறற்கு யோக்கியதையுடையரென உத்தரவு செய்த இவ்வரிய சந்தர்ப்பத்தில், தமிழபிமானிகளும் சிரத்தை செய்யாது விடுவார்களா? என்னே மனப்பான்மை யிருந்தவாறு! ஆசிரியகலாசாலை அதிபராதியோரே இவ்விஷயத்திற் சிரமமெடாதுவிடில் யார்தாமென்செய்வது? இனிமேற் பாரதம் முதலாமிலக்கியங்களும் தொல்காப்பியம் முதலாமிலக்கணங்களும் கூட ஆங்கிலத்திற் கற்பிப்பார்கள் போலும்.

இனி, நாட்டுக் கல்விமுறைகளை யூட்டும் தமிழ்ப்பாடசாலைகளிற் பயிலும் மாணவர்களை, பெற்றார் ஆங்கிலபாடசாலைகட்கனுப்பிச் சீனியர் பரீட்சையைச் சித்தியடையச் செய்து ஆசிரியகலாசாலைகட்கனுப்புவது சுலபமெனக் கருதித் தஞ்சிறாரை மூன்றும் வகுப்புடன் ஆங்கிலபாடசாலைகட்கனுப்பிப் பொருளிலாமை காரணத்தால் அஃதும் நிறைவேற்ற வியலாது, நடுக்கடலிற் பாய்மரம் முறிந்த கப்பலேபோற் பரிதபிக்கும் சிறாரைப்பார்த்து, "என்செய்வேனை. உன் தலைவிதிவசத்தால் எனக்குப் பிள்ளையாய்ச் சனித்தாயே!" என்று கூறியிரங்க நேரிடும். இனித் தமிழ்க்கல்வி கற்பிக்குந் தமிழ்க் கழகங்கள் மூன்றாவது வகுப்பிற்கு மேலும் வைத்து நடாத்தப்பட வேண்டுமா? என்பதை ஆங்கிலங்கற்ற மாணவரையே விரும்பும் ஆசிரிய தமிழ்க் கலாசாலை அதிபர்கள் யூகிக்கவில்லைப்போலும்.

புத்தம் புதிய முறைகளையெல்லாம் புகுத்தும் தமிழாசிரிய கலாசாலையாரின் கொள்கைகளை நோக்குமிடத்து, காலகதியில் ஆரியதிராவிடபாஷாபிவிருத்திச் சங்கமும், தமிழிலேபிறந்து, தமிழிலே வளர்ந்து, தமிழையே பேசியுங் கற்றும் வருபவர்களை விடுத்து, தமிழ்க்கலைபயிலாது ஆங்கிலத்தையே கற்று விட்டிருப்போரை வலிந்தீர்த்துப்பண்டிதப் பட்டத்தையுஞ் சுமத்துமோவெனத் தனித்தமிழ் கற்கும் மாணவ ரேக்குறுகின்றார்கள்.

ஒருவன் அறத்தைச் செய்தால் அவ்வறம் அவன் பிறப்பை நீக்கும்.

ஆப்த வாக்கியங்கள்

புத்தகங்கள்

பொதுசனங்களின் பொருட்டு ஏற்படும் வாசிகசாலைகள் பெருநன்மையைக்கொடுப்பனவாயினும் அரிய போதனைகளை அடக்கிய நூல்களை நாம் தேடி வைத்திருக்க வேண்டும். உபயோகமற்ற விஷயங்களுக்கு வீணே செலவுசெய்யும் பணத்தை நூல்கள் விலைக்கு வாங்குவதற்கு உபயோகிப்பின் எப்போதும் நாம் புதுப்புது நூல்களை வாசிக்கக் கூடியதாகும். நிரந்தரமான உபயோகத்தைக் கொடாதநூல்களும் விலைக்கு வாங்கப்படலாம். அப்புத்தகங்கள் எங்கள் மேசையிலிருப்பின் அவைகளைக் குறித்து எமது நண்பர்களுடன் உரையாடக் கூடியதாகும். அவைகள், ஒரு பெட்டி இனிப்பிலும், படக்காட்சிக் களிப்பிலும் கூடிய உபயோகத்தைக் கொடுக்கின்றன. வாசித்தபின் இப்புத்தகங்களை வைத்தியசாலைக்குக் கொடுப்பின் அங்கே நோயாளர் வாசிப்பதற்கு உபயோகமாகும்.

* * *

பரிகாசமும் பகையும்

அதிதீவிரமூளை வன்மைசெய்யும் கொலை மற்றவர்களைப் பரிகாசம்செய்தலே. ஒருவரின் இருதயம் செய்யும் கொலைக்குற்றம் பகைப்பதே. பரோபகார தர்மம் என்னும் பெருங்குணம் எப்போதும் ஆத்மசக்தியுடையதாகின்றது. மேற்கூறியனவற்றிற்கு அது நேர்விரோதமானது. அதை வளர்ப்பின் அது பரிகாசம், பகையென்பனவற்றை முற்றாக அழித்துவிடும்.

* * *

சமயம்

நகரின் வீதிகளிலும், மைதானங்களிலும் கலைஞானத்தைப் பேசச் செய்தவர் தாமேயென்று சோக்கிறெற்றிஸ் என்னும் கலைக்ஞானிசொல்லுகின்றார். தற்காலத்தில் சமயபோதனைகள் மூலைகட்குள் விடப்படுகின்றன. அதை நாம நாளாந்தரசீவியத்தில் அனுட்டிக்கூடியதாக்கவேண்டும். சமயமே எங்கள் முயற்சியாக வேண்டும். எங்கள் முயற்சி சமயமாக வேண்டும்.

* * *

சக்தி

நீ என்ன செய்யப் போகின்றாயென மற்றவர்க்கு எடுத்துரைக்கவேண்டியதில்லை; அதைச் செய்வாயாக.

நீ அடைய விரும்பியதைப் பெறும்வரையும் இடைவிடாது கூடியளவு முயற்சிசெய்வாயாக. அதற்கேற்ற தகுதியும் மற்றைய உபகரணமும் இருப்பின் செய்து முடித்தற்கு என்ன தடை?

* * *

இப்போதே

சிவரில் நாட்டப்பட்டிருக்கும்நாழிகை வட்டம் என்ன சொல்லுகின்றது. "இப்போதே" என்கின்றது. புத்திமான் கூறும் பொன்மொழி யாது? "இப்போதே" என்பதே வீவேகிகள் கொண்டுசெல்லும் வெற்றிக்கொடி யாது? "இப்போதே" என்பதே. இதை நாம் எப்போதும் மறவாது அப்போதைக்கப்போது செய்யவேண்டியதைச் செய்து முடிப்போமாக.

* * *

வரப்போவன

இனி வரவிருப்பன யாவும் மனிதனது கையிலிருக்கின்றன வென்பதை அவன் உணர்கின்றானில்லை. சும்மா வாழ்வதா தமது கடனென்பதை அவனே முடிவு செய்யும் பொறுப்புடையன். உண்மைச் சீவியத்தை நாடிச் சிறிது முயலவேண்டாமா வென்பதையும் அவனே முடிவுசெய்ய வேண்டும்.

* * *

கவலைகள்

பொருட்செல்வத்தைச் சேகரிக்க முயல்வோரைக் கவலைகள் சூழ்ந்துகொள்கின்றன. அவை அவர்கட்கு நித்திரையை வரவிடா. ஆறுதலைக்கொடா. இடைவிடாத் துயரத்தையும் வருவித்தே நிற்கும்.

* * *

உண்மைப்பெரியார்

ஓர் உண்மைப் பெருமகன் கடவுளின் அடியான்; உலகில் பெரியாராக இருப்பான்; தன்னில் நம்பிக்கையுடையவனாவான்; தூயவழியில் சேறுதலே அவன் தொழிலாகும்; நூல்களைக் கற்றலே அவன் இளைப்பாறும் முறை; தான் திருப்பியடைதலே ஆறுதலாகும்; மோட்சத்தைநாடிச் செல்லும் வழியில் உலகத்திற்கும் வரவேண்டியவனானான். அவன் விரைவாகச் செல்கின்றான். அவன் வழிசெல்லும்போது மற்றவர்கட்கும் இன்பத்தைக் கொடுக்கிறான். அவன்தான் உண்மைநிலையைக்கண்டவன்.

* * *

ஏழு பெரிய பிழைகள்

(1) மற்றையோரை நசித்துக் கொண்டே ஒருவன் முன்னேறுகின்றானெனல்.
(2) திருத்த அல்லது முற்றாக மாற்றவியலாத விஷயங்களை நினைந்து நினைந்து விகாரமடைதல்.
(3) நாம் ஒரு விஷயத்தைச் செய்துமுடிக்க வியலாதிருந்தால் அது மற்றையோராலும் முடிக்கவியலாதெனப் பிடிவாதமாகக் கூறல்.
(4) நாம் சரியென எண்ணியவற்றை மற்றையோரும் நம்பிப் பின்பற்ற வேண்டுமென விரும்பல்.
(5) உயர்ந்த இலக்கிய நூல்களைக் கற்று மனத்தினை விருத்தி செய்யாது விடுதல்.
(6) பெரிய ஒரு காரியம் செய்து முடிப்பதை இலக்காகக் கொண்டு நிற்கும் போது அற்ப விஷயங்களிலும் மனத்தை விடல்.
(7) பணத்தைச் சிறிது சிறிதாக மிச்சம் பிடிக்கும் பழக்கத்தை விருத்தி செய்யாதிருத்தல்.

கதைப்பகுதி.

உத்தம மனைவி.

(திரு. பொன். குமாரவேற்பிள்ளை.)

(முற்றொடர்.)

'காதல் மணம்என்பது ஒத்த குலமும் கல்வியும் ஒத்தவயதும் ஒத்த உணர்ச்சியும்உடைய தன்னேரில்லாத் தலைவனும் தலைவியும் பிறர் கொடுப்பவும் அடுப்பவுமின்றித் தெய்வத்தாற் றாமே யெதிர்பட்டு மணத்தலாகும். இங்ஙனமின்றி அச்சமும் பேடிமையும் அடிமைச்சிறுமதியும் நிறைந்து ஆண்மையும் அன்பும் அறிவும் குறைந்து ஏழைகளை ஏமாற்றி வயிறுவளர்ப்பதே கடனாகக் கொண்டியங்கும் பேதைகட்கெல்லாம் காதல் மணம் எங்ஙனம் அமையும்? இஞ்ஞான்று உணவு தேடவும் உத்தியோகம் தேடவும் உடைக்காகவும் அணிக்காகவும் காதலை வாயில் வைத்துக்கொண்டு திரிவோர் பல்லோராவர். கோடிக்கொன்றெனச் சொல்லத் தகுந்தபடி உண்மையன்பின் வழிவந்த காதல்மணம் நிகழுவதும் உண்மையே. ஆனால் இக்கால வஞ்ச ஆடவர்கள் காதல் கூறிப் பெண்ணுலகத்தைக் கெடுக்கின்றனர். நல்ல குலத்தில் உதித்தவள் ஒருத்தியை மணந்து தன் குலத்தை உயர்த்த விரும்பும் சாதிப்பற்று மிக்குடைய ஒருவன் காதல் கூறியே அவள் கடைவாயில் சேர்கின்றான். தன் தந்தை தாயர் பட்டகடனைத் தீர்த்துத் தன் குடியைச் செப்பமாக்க விரும்புமொருவன் ஓர் செல்வந்தனின் புதல்வியின் காலைப்பிடித்துக் காதல்பாடித் தொழுகின்றான். இவர்கள் தாங்கள் நாடியன பின்னொருகால் அற்றுப் போமேல் தங்களை நம்பிய பெண்களை அந்தரத்தே விடுத்துக் காதற் பயிர் நடவேறிடந் தேடுவர். 'உள்ளூரப் பூச்சியரித்துக் குழலாயிருக்கும வாழ்ககை' என்றார் எங்கள் பாரதியார். "அவருக்குப் பல்லாயிரம் வணகம்" என்றாள் நீலாம்பிகை.

"நீர் காதல் மணத்தை மிகவும் வெறுக்கின்றீர் என்பது உமது பேச்சினின்றும் புலனாகின்றது" என்றார் அவ் ஆடவர்.

"யான் காதல் மனத்தை வெறுப்பவளல்லள். தெய்வமெனக் கும்பிடுபவள். ஆனால் காதல் கூறி ஏமாற்றுபவர்களை வெறுக்கின்றேன்" என்றாள் நீலாம்பிகை.

"ஆகா! மாசற்ற காதல் மணத்தையே நீர் நாடிநிற்கின்றீர்" என்றார் அவ் ஆடவர்.

"உங்கள் ஊகிப்பு பிழையானது. 'அருளிலார்க் கவ்வுலகமில்லை' எனவும், 'பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை' எனவும், கூறிய வள்ளுவநாயனார் ஓரிடத்தில் 'அருள் என்னும் அன்பீன் குழவி, பொருளென்னும் செல்வச் செவிலியா லுண்டு' எனவும் கூறுதலை நுணுகி நோக்கின் பொருளிலார்க்கு இவ்வுலக இன்பமுமில்லை அவ்வுலக இன்பமுமில்லை என்பது நன்கு போதரும். என்னோடு கூடிவாழ விரும்புபவன் எவனேயாயினும் எனக்கு நன்கொடையாக நூறாயிரத்துக்குக் குறையாதளிப்பின் அவனோடு கூடி வாழ ஒருப்படுவேன்" என்றாள் நீலாம்பிகை.

"நீர் கூறுவது விந்தைமிக்கதாயிருக்கின்றது. ஒரு பெண்ணுக்கு நூறாயிரம் நன்கொடை கொடுத்து மணம் செய்யச் சுயமரியாதையுடைய எவனும் முன்வரான். ஆனால் கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியு மைம்பொறியும் உம்மிடம் ஒருசேர விளங்கக் காணும் இன்பநிலை உணர்ந்த இளைஞர்கள் ஒருப்படவும் கூடும். நற்பெண்டிரின் இயல்பறிந்தோர் இக்காலத்தரியர். மக்களின சீர்கேட்டைக் கண்டு வெதும்பிய உள்ளம் உம்மை இங்ஙனம் கூறச் செய்கின்றதன்றி உமது உள்ளக்கிடக்கை இதுவன்று. உம்முடைய வாய்மொழி மெய்ம்மொழியேல் நீர் என்னைக் கடந்து அப்பால் ஒரு அடிகூட எடுத்துவைத்தல் முடியாது" என்றார் அவ் ஆடவர்.

"ஒரு இலட்சம் ரூபாயை எனக்கு நன்கொடையாக அளிக்க உங்களால் முயுமானால் உங்களைக் கடந்து செல்ல எனக்கு அவசியமில்லை" என்றாள் நீலாம்பிகை.

"நீலா, நீ கூறுவது உண்மைதானோ?" எனச் சற்று மயக்கத்துடன் வினவினார் அவ் ஆடவர்.

"ஆம், ஆம்" என்றாள் நீலாம்பிகை.

"நீலா, உன்மீது எனக்கெழுந்த ஆசையை நான் அடக்கவேண்டியதில்லை. நீ என் ஆசையின் கனியானாய். நூறாயிரம் ரூபாயை இன்றே தருவேன்" என்றார் அவ் ஆடவர்.

நூறாயிரத்திலும் தாங்கள் என்னைப் பெரிதென மதிப்பதானால் யான் தங்களுக்குரியவளே" என்றாள் நீலாம்பிகை.

"நல்ல அலுவலை நல்ல நாளிலே செய்தல் வேண்டும். இன்று செவ்வாய்க்கிழமை. சனிக்கிழமை யாவற்றையும் ஒழுங்குசெய்வோம்" என்றார் அவ் ஆடவர்.

"சனிக்கிழமை மாலை ஆறுமணிக்குச் செல்லும் புகைவண்டியில் நாம் கொழும்புநகர் செல்லவேண்டும். அன்று மூன்று மணியளவில் இவ்விடத்தில் என்னை நீங்கள் சந்தித்தல் வேண்டும்" என்றாள் நீலாம்பிகை.

"அப்படியானால் அதிகாரிகளிடம் விடுதலை பெற்றே யான் வரல் வேண்டும்" என்றார் அவ் ஆடவர்.

"ஓகோ! உங்களைப்பற்றி ஒன்றுமேயறியாது எவ்வளவுதூரம் வந்துவிட்டேன் பார்த்தீர்களா? உங்கள் வரலாற்றைச் சற்றுக் கூறுங்கள்" என்றாள் நீலாம்பிகை.

"காதல் கூறும் கயவன் என என்னை எள்ளாதீர். இதுதான் உண்மையான காதல் மணம். உமது வரலாற்றைக் கொஞ்சமும் அறியாதே உம்மை யான் காதலித்தேன். பின்னர் நீர் எனது வரலாற்றை அறியாதே என் விருப்பத்துக் கிணங்கிவிட்டீர். இதுவே தெய்வக்காதல்! இதுவே தெய்வக்காதல்!" என்றார் அவ் ஆடவர்.

"யான் தேடிய செல்வமும் நீங்கள் தேடிய காதல்மணமும் ஒருங்கேயடைந்து நம் இருவரையும் பேருவகையுட்டிளைக்கச்செய்ததற்காகத் திருவருளை வழுத்துகின்றேன். இது கிடக்க, உங்கள் வரலாற்றைக் கூறுங்கள்" என்றாள் நீலாம்பிகை.

"என் ஊர் மங்கலபுரம்; என் தந்தையார் அவ்வூரிற் செல்வந்தராய் வாழ்ந்த கதிரவேற்பிள்ளை; என்பெயர் ஏரம்பமூர்த்தி; என்தொழில் சிவபுரம் நிலஅளவைப்பகுதியில் எழுத்தாளர்வேலை; மாதவேதனம் இருநூறுரூபாய்" என்றார் ஏரம்பமூர்த்தி.

"தாங்கள் எவ்வித உயர்ந்த உத்தியோகம் பார்ப்பினும் அதற்காக நாமிருவரும் பிரிந்திருக்க முடியாது. தாங்கள் இன்றே உத்தியோகத்தினின்றும் விலகவேண்டும். எனக்குக் கூடியவேதனம் கிடைக்கின்றமையால் யான் விலகுவது புத்தியாகாது" என்றாள் நீலாம்பிகை.

"உனக்காக இந்திரபதவியைத்தானும் யான் உதறித்தள்ளச் சித்தமாயிருக்கின்றேன்" என்றார் காமவிகாரக் கலக்கமடைந்த ஏரம்பமூர்த்தி.

"நான் சிவபுரம் பெண்கள் கல்லூரித் தலைமை ஆசிரியையின் இல்லத்திலேயே தங்கியிருக்கின்றேன். நானும் அவ் அம்மையாரும் வேறு சில மாணவிகளுமாகச் சில கிராமங்களைப் பார்க்கப் புறப்படுகின்றோமாகையால் சனிக்கிழமைக்கு முன்னர் என்னை ஈண்டுக் காணவியலாது. சனிக்கிழமை மாலை மூன்றுமணிக்கு இங்கு உங்களைக் காத்துக்கொண்டிருப்பேன்" எனக்கூறி எழுந்து நடந்தாள் நீலாம்பிகை. ஏரம்பமூர்த்தியும் தன்னில்லம் நோக்கி நடந்தார்.

ஏரம்பமூர்த்திக்கு அவருடைய சொந்தப்பணமும் மனோன்மணியிடம் பறிமுதல்செய்த பணமுமாக ஒரு லட்சரூபாய் சிவபுரம் வங்கியிலுண்டு. அவர் அப்பணத்துக்குரிய வங்கிப் புத்தகத்தை நீலாம்பிகையின் பேருக்குமாறுதல்செய்து சனிக்கிழமைமாலை கடற்கரையை அடைந்தார். நீலாம்பிகை முன்னரேவந்து காத்துக்கொண்டிருந்தாள். அவளைக் கண்டபின்னர்த்தான் ஏரம்பமூர்த்திக்குச் சித்தம்தெளிந்தது. "காலம் நீடித்ததற்கு மன்னிக்கவேண்டும்" எனக் கூறியவண்ணம் வங்கிப் புத்தகத்தை அவளிடம் கொடுத்தார்.

"ஐந்தரைமணிக்குப் புகைவண்டி நிலையத்துக்கு வரவேண்டும்" எனக்கூறி விரைந்து நடந்தாள் நீலாம்பிகை.

ஐந்தரை மணியாயிற்று. ஏரம்பமூர்த்தி புகைவண்டி நிலையம் சென்று தன் பிறவிப்பயனைத் தேடினார். மணி ஆறாயும் நீலாம்பிகையைக் காணாது அவர் கலங்கவேண்டியவரானார். "அந்தோ! என் அன்பின் செல்வம். என்னைக்காணாது கடற்கரை நோக்கிச் சென்றனளோ! அங்கு மென்னைக்காணாது தவிப்பளே! மக்கள் அதிகமாக நடமாடும் இப்புகையிரத நிலையத்தில் இன்னவிடத்தில் நிற்றல் வேண்டும் என அன்றுகூறாதபேதமை என்னைச் சார்ந்ததே! எவ்வளவு கற்றவளானாலும் சிறுபெண்தானே! ஐயகோ! என் கண்மணியே! எங்கெல்லாம் அலைகின்றனையோ!" என எண்ணியவராய்க் கடற்கரை நோக்கி நடந்தார் ஏரம்பமூர்த்தி. (தொடரும்)

அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம், புறத்த புகழு மிலை.

திரு. டி. எஸ். சேனாநாயக்கா எழுதி வெளியிட்டிருக்கும்

"விவசாயமும் தேசாபிமானமும்."

படித்த வாலிபர் பயன்படுத்துவாராக

—o—

உணவுப் பொருள்களின் தற்போதைய நிலைமை.

விவசாயிகள் கடனின்றி வாழ வழி.

கமத்தொழில் நிர்வாகசபையின் முயற்சி.

வங்கி விசாரணையின் பலாபலன். பழைய கடன்கள் தீர்க்கும் முறை.

(கொழும்பு நிருபர்)

கொழும்பு, ஆகஸ்ட் 8.

திரு. டீ. எஸ். சேனாநாயக்கா எழுதி முடித்திருக்கும் 'விவசாயமும் தேசாபிமானமும்' என்னும் புத்தகம் சமீபத்தில் வெளி வருமெனத் தெரிகிறது. இதன் முக்கிய பகுதிகளை, 'டெயிலி நியூஸ்' பத்திரிகை 15 அத்தியாயங்களாகப் பிரித்து சென்ற இரண்டு மாதங்களாகப் பிரசுரித்து வந்தது. கடைசி அத்தியாயம் நேற்று வெளியாயிருக்கிறது.

திரு. சேனாநாயக்கா ஒரு விவசாயி. பல வருடங்களாக விவசாய விஷயங்களில் சிரத்தையெடுத்து வந்தவர். சென்ற நான்கு வருடங்களாக விவசாய மந்திரியாகக் கடமை பார்த்து வருகிறவர். எனவே இவர் விவசாயத்தைப் பற்றி அதிகாரத்துடன் பேசக் கூடியவர். இவர் கூறும் யாவற்றையும் அப்படியே எல்லாரும் அங்கீகரிக்க வேண்டியதில்லை. ஆனால் இவருடைய புத்தகம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் சிரத்தையுள்ள ஒவ்வொருவருடைய கவனத்தையும் பெறவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. இப்புத்தகத்தின் சாராம்சத்தை "ஈழகேசரி" வாசகர்களுக்கு எடுத்துக் கூறுவதே இக்கடிதத்தின் நோக்கம்.

முதலாவதாகத் திரு. சேனாநாயக்கா தமது புத்தகத்துக்குக் கொடுத்திருக்கும் பெயர் கவனிக்கத்தக்கது. விவசாயத்தைப் பொறுத்தவரையில் தேசாபிமானிகளின் கடமை என்னவென்பதை இவர் இப்புத்தகத்தில் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். இலங்கை, விவசாயத் துறையில் முன்னேற வேண்டுமானால் தேசாபிமானம் வாய்ந்த படித்த வாலிபர்கள் அத்துறையில் ஈடுபட வேண்டுமென்பது இவருடைய கருத்து.

வாலிபர் மனத்தில் இப்புத்தகம் உணர்ச்சியையும் உற்சாகத்தையும் விளைக்கக் கூடியதாகவிருக்கிறது. ஆனால் இவ்வுணர்ச்சியையும் உற்சாகத்தையும் விளைவிப்பவை வெறும் வார்த்தைகளல்ல. பின் அவை யாவையெனில் தகவல்களும் புள்ளி விபரங்களுமே. திரு. சேனாநாயக்காவுக்குத் தகவல்களுக்கும் புள்ளி விபரங்களுக்கும் உயிர் கொடுக்கும் சக்தியுண்டு. இலங்கையின் பண்டை நிலைமையும் இதர நாடுகளின் தற்போதைய நிலைமையும் சுருக்கமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. உள்ளத்தில் உணர்ச்சியை விளைவிப்பதுடன் திரு. சேனாநாயக்கா நின்றுவிடவில்லை. அதைத் தேசத்தின் நன்மைக்காக எவ்வாறு உபயோகிக்கலாமென்பதையும் அவர் விளக்கியிருக்கிறார்.

இப்புத்தகம் இலங்கையின் தற்போதைய நிலைமையையும் அதை எவ்வாறு நிவர்த்தி செய்யலாமென்பதையும் விரிவாக எடுத்துக் கூறுகிறது. விவசாய நிர்வாக சபையாரின் வேலைத் திட்டம் என்னவென்பதும் அவர்கள் ஏற்கனவே என்ன செய்திருக்கிறார்களென்பதும் இதில் அடங்கியிருக்கின்றன.

திரு. சேனாநாயக்கா, இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள பல நிபுணர்கள் எழுதியிருக்கும் புத்தகங்களையும் அறிக்கைகளையும் ஆதாரமாகக் கொண்டே இப்புத்தகத்தை எழுதியிருக்கிறார். இவர் முக்கியமாக இலங்கை வங்கி விசாரணைச் சபையின் அறிக்கைக்குக் கடமைப்பட்டிருக்கிறார். "இலங்கையின் அடுத்த ஐம்பது வருட அபிவிருத்தியின் சரித்திரம் எழுதப்படும் பொழுது வங்கி விசாரணைச் சபையின் தலைவர் சேர். ஸொராப்ஜி பொச்கன் வாலா அவர்களின் சேவைக்கு இந்நாட்டினர் பெரிதும் நன்றியறிதலுடையவர்களாக இருப்பார்கள்" என்று அவர் வரவு செலவு திட்டப்பேச்சின்போது கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போதைய நிலைமை

இலங்கையின் தற்போதைய நிலைமையைப் பற்றித் திரு. சேனாநாயக்கா கூறுவதாவது:

இலங்கையில் போதிய உணவு பொருள்கள் உற்பத்தி செய்யப்படவில்லை. இந்நாட்டு நிலப்பரப்பில் இருபதிலொருபங்கே உணவுப் பொருள் உற்பத்திக்காக உபயோகிக்கப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து வரும் உணவுப்பொருள்கள் தடைப்படுமானால் நாம்பட்டினி கிடக்கவேண்டிவரும்.

சாதாரண மற்றக் காலங்களிற் கூட உணவு நியாயமான முறையில் இலங்கையில் பங்கிடப்படவில்லை. சிலர் அதிகமும் சிலர் கொஞ்சமும் பெறுகிறார்கள்.

நம்மிடமிருக்கும் சொற்ப உணவும் சில தருணங்களில் வீணாக்கப்படுகிறது. ஏராளமான சனங்களுக்குப் போதிய உணவு கிடைப்பதில்லை. கிடைத்தாலும் அது சரீர சுகத்துக்கு அவசியமான சத்துக்களை உடையதாகவிருப்பதில்லை.

சொந்தமாக நிலம் வைத்திருக்கும் ஏழைகளின் தொகை வெகு சொற்பம். நிலம் வைத்திருப்பவர்களும் தங்களுடைய தேவைக்குப் போதிய நிலம் வைத்திருக்கவில்லை மேலும் அவர்கள் தங்கள் நிலத்திலிருந்து வருடம் முழுவதற்குந் தேவையான ஊதியத்தைப் பெறவில்லை. விவசாயத்துடன் அவர்கள் வேறு தொழில்களிலும் ஈடுபடுவது அவசியம். சில மாகாணங்களில் சனநெருக்கம் அதிகமாகவிருக்கிறது. காடுகள் சுக வாழ்வுக்கு ஏற்றவையாகவிருக்கவில்லை.

படித்தவர்கள் கிராமங்களை விட்டிறங்கி நகரங்களிற் போய் வசித்து வருகிறார்கள். இதன் பயனாகக் கிராமங்களில் விவேகம் வாய்ந்த தலைவர்கள் இல்லை. மழை குறைவான இடங்களில் பயிர்ச் செய்கைக்குப் போதிய தண்ணீர் வசதிகள் இல்லை. கோடை காலத்தில் குளங்கள் வற்றி விடுகின்றன. பண்டைக்கால விவசாய முறைகள் அனுட்டிக்கப்படுகிறபடியால் சிரமத்துக்கு ஏற்ற பயன் கிடைப்பதில்லை. ஆடு மாடுகளும் கோழிகளும் நல்ல முறையில் வளர்க்கப்படவில்லை.

படித்தவர்களிற் பலர் வேலையற்றுத் தவிக்கிறார்கள். கைவேலையின் கௌரவத்தை இவர்கள் இன்னும் உணரவில்லை. இவர்கள் நாட்டின் செல்வத்தை அதிகரிப்பதற்குப் பதிலாக அதை அழித்து வருகிறார்கள்.

வெளியூர்களுக்கு அனுப்பக்கூடிய அளவு பொருள்களைக் கிராமவாசிகள் உற்பத்தி செய்யவில்லை அப்படி உற்பத்தி செய்பவர்களும் அவைகளைத் தாங்கள்பட்ட கடனுக்காக கடைக்காரரிடம் கொடுத்து விடுகிறார்கள்.

கிராமங்களில் தொழிலாளருக்கு போதிய கூலி கிடைப்பதில்லை.

நிர்வாகசபையின் முயற்சி

மேலே கூறப்பட்டிருக்கும் நிலைமையை நிவிர்த்திசெய்வதற்காக விவசாய நிர்வாக சபையார் பின்வரும் முயற்சிகளைச் செய்திருப்பதாக திரு. சேனாநாயக்கா கூறுகிறார்.

குடியானவர்களும் நடுத்தர வகுப்பினரும் சுலபமானமுறையில் முடிக்குரியநிலத்தைப்பெறுவதற்குரியவழி நிர்வாகசபை ஏற்படுத்தி யிருக்கிறது. மின்னேரியா போன்ற பகுதிகளில் சனங்கள் போய்க் குடியேறிப் பயிர்செய்ய வேண்டுமெனவிரும்பி அதற்கான ஏற்பாடுகளைச் சபை செய்திருக்கிறது. பயிர்ச் செய்கைக்குந் தண்ணீர் வசதி ஏற்படுத்துவதற்காகப் பெரிய நீர்நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கிராமங்களிலுள்ள குளங்கள் இந் நீர்நிலையங்களுடன் தொடுக்கப்படும். புதிய விவசாய முறைகளைக் கையாளும்படி கமக்காரருக்குப் போதனைசெய்யப்படுகிறது. சிறந்த கருவிகளைச் செய்யும் முறைகளும் அவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன.

ஆடுமாடுகளுக்கு ஏற்படும் நோய்களைத் தீர்ப்பதில் நிர்வாகசபை அதிக கவனம் காட்டிவருகிறது. நல்ல சாதி ஆடுமாடுகளையும் கோழிகளையும் வளர்க்கும்படி கிராமவாசிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. கூட்டுறவுமுறையால் ஏற்படும் நன்மைகளும் அவர்களுக்கு எடுத்துக்காட்டப்படுகின்றன. விவசாயப் பொருள்களை நல்லவிலையில் விற்பனை செய்வதற்கு வசதி ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒரு புதிய அரசாங்கப்பகுதியை நிர்வாக சபையினர் ஏற்படுத்தி யிருக்கின்றனர்.

சில பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக வெளிநாடுகளிலிருந்துவரும் பொருள்கள்மீது அதிகதீர்வை விதிக்கப்பட் டிருக்கிறது.

ஆனால், விவசாயத்துறையில் முன்னேற்ற மேற்படவேண்டுமானால் இன்னும் பலவேலைகள் செய்யப்படவேண்டியிருக்கின்றன. திரு. சேனாநாயக்கா அரசினரின் வருங்கால வேலையைப்பற்றிப் பல சிபார்சுகள் செய்திருக்கிறார்.

கடன்வசதி

விவசாயிகளிற் பெரும்பாலார் கடனாளிகளாக விருப்பதால் அவர்களுடைய கடனைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென திரு. சேனாநாயக்கா கூறுகிறார். வங்கி விசாரணைச்சபையார் இதுவிஷயத்தில் கூறிய யோசனையை இவர் ஆதரிக்கிறார். இந்தயோசனை வருமாறு:—

அரசினர் $3\frac{1}{4}$ அல்லது 4 வீத வட்டி கொடுத்து ஒரு கோடி அல்லது இரண்டுகோடி ரூபாய் கடன்வாங்கவேண்டும். ஒவ்வொரு டிஸ்திரிக்கிலும் ஒரு சமரசச்சபை நியமிக்கப்படவேண்டும். இச்சபைகள் கடனாளிகளுக்கும் கடன் கொடுத்தவருக்கும் இடையில் ஒரு சமரசமான ஏற்பாட்டைக் கொண்டுவருவதற்கு முயற்சி செய்யவேண்டும். சமரசச்சபை குறிப்பிடுந் தொகையை ஏற்பதற்குக் கடன்கொடுத்தவர்கள் சம்மதிக்கும் பட்சத்தில் அரசினர் அத்தொகையைக் கடனாளிக்குக் கடனாகக் கொடுக்க முன்வரவேண்டும். பழைய கடனுக்காக எந்தக்காணி ஈடுவைக்கப்பட்டிருந்ததோ அந்தக் காணியையே ஈடாகப் பெற்றுக்கொண்டு அரசினர் இந்தப் புதியகடனைக் கொடுக்கவேண்டும். கடனாளிகள் புதிய கடனை 20 வருட காலத்திற்குள் 6 வீத வட்டியுடன் தீர்த்துவிட வேண்டும்.

தென்னந்தோட்டங்களை ஈடாக வைத்து வாங்கப்பட்ட கடன்களின் வட்டியை $6\frac{1}{2}$ அல்லது 7 வீதமாகக் குறைக்க வேண்டுமென்று வங்கி விசாரணைச்சபை செய்த சிபார்சையும் திரு. சேனாநாயக்கா ஆதரிக்கிறார்.

மேலே கூறப்பட்டவை பழைய கடன்களைப்பற்றியவையாகும். ஆனால் விவசாயிகள், விவசாய அபிவிருத்தியில் ஈடுபடவேண்டுமானால் அவர்கள் இனிமேலும் கடன்படவேண்டிவரும். இந்த வருங்காலக்கடன்களைக் குறைந்த வட்டியில் விவசாயிகள் பெறும்படி செய்வதற்காகத் திரு. சேனாநாயக்கா சில யோசனைகளைக் கூறியிருக்கிறார். இக்கடன்களை "நீண்ட தவணைக் கடன்" என்றும் "குறுகிய தவணைக் கடன் என்றும் அவர் இரு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்.

புதிய நிலங்களை வாங்குவதற்காகவும் பழைய நிலங்களில் சீர்திருத்தம் செய்வதற்காகவும் வாங்கப்படும் கடன்கள் "நீண்ட தவணைக் கடன்" என்று கருதப்படும். இக் கடனைத் தீர்ப்பதற்கு விவசாயிகளுக்கு நீண்ட காலம் பிடிக்கும்.

பயிர்ச்செய்கை, அறுவடை முதலிய தேவைகளுக்காக வாங்கப்படும் கடன் "குறுகியதவணைக் கடனு" கக் கருதப்படும். இக்கடனை விவசாயிகள் சொற்பகாலத்தில் தீர்த்துவிடக் கூடியதாயிருக்கும்.

நீண்டதவணைக் கடன்வாங்க விரும்புவோருக்கு அரசாங்க நிலஅடமான வங்கி உதவிசெய்யவேண்டுமென திரு. சேனாநாயக்கா சிபார்சுசெய்கிறார். ஆனால்விவசாயிகளுக்குப் போதிய பணவசதி யளிப்பதற்கு இவ்வங்கியின் தற்போதைய விதிகள் தடையாகவிருக்கின்றன. எனவே இவ்விதிகள் விரைவில் திருத்தப்பட வேண்டுமெனத் திரு. சேனாநாயக்கா கூறுகிறார்.

"குறுகிய தவணைக்கடன்" விஷயத்தில் அவ்வப் பகுதிகளிலுள்ள ஐக்கியநாணய சங்கங்களை விவசாயிகள் உபயோகப்படுத்த வேண்டுமென்று திரு. சேனாநாயக்கா கூறுகிறார்.

குடியேற்றப்பகுதியி லுள்ளவர்களுக்குச் சில விசேஷ வசதிகள் அளிககவேண்டுமென்று அவர் கூறுகிறார். ஆனால் வங்கிவிசாரணைச் சபையின் யோசனையின்பயனாகப் புதிதாக ஏற்படவிருக்கும் வங்கி ஸ்தாபிக்கப்பட்டபின்னே இவ்வசதிகளை அவர்களுக்கு அளிக்கமுடியும். எனவே அவர்களுக்கு அரசினரால் நேரே பண உதவி அளிக்கப்படுமெனத் திரு. சேனாநாயக்கா கூறுகிறார்.

கூட்டுறவு இயக்கம் வியாபார வசதிகள் முதலியவை சம்பந்தமாகவும் திரு. சேனாநாயக்கா பலசிபார்சுகளைச் செய்திருக்கிறார்.

Notice of Sale.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 7747

புத்தூர் தெற்கு நவக்கிரி தம்பர்-விசுவலிங்கம், வழக்காளி.

அச்சுவேலி தெற்கு நவக்கிரி வல்லிபுரம்-சின்னையா, எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின். 7747-ம் இலக்கவழக்கில் 1935ம் வருஷம் ஆடி மீ 26-ந் தேதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணிகள். 1935-ம் ஹு புரட்டாதி மீ 4-ந்உ புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிகள் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி, புத்தூர் தெற்கு இறை குருட்டுக்கலட்டி தோட்டம் நிலபரப்பு 11 எல்லைகிழக்கு யொழுங்கையும் கீழ்க்காணும் இரண்டா மாதமும், வடக்கு நல்லதம்பி-சந்திரசேகரத்தின் ஆதனம். மேற்கு கனகசபை-முத்துக்குமாருவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு நல்லதம்பி-சிவப்பிரகாசத்திற்குரிய ஆதனம். இதனடங்கலும் இதற்குத் தெற்குப் புறமாகவுள்ள கிணற்றில் இதற்குரிய பங்கும் வழி வாய்க்காலுரித்தும்.

2. ஷை இறை குருட்டுக் கலட்டியும் மறு பிரிவுகளும் நிலபரப்பு 40. வடலிகளும், எல்லை கிழக்கு கந்தன்-வேலனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு சேனாதிராயர்-நல்லதம்பிக்குரிய ஆதனம். மேறகு சேனாதிராயர்-நல்லதம்பிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும், கையொழுங்கையும். மேற்கூறிய முதலாமாதனமும் தெற்கு மாரிமுத்து-வேலுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதன் அடங்கலில் சொரியலாய் அரைவாசியும்.

3. ஷை இறை. குருட்டுக்கலட்டி தோட்டம். நிலப்பரப்பு 90. எல்லைகிழக்கு மாரிமுத்து-வேலுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு சேனாதிராயர்-தம்புவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு வல்லிபுரம்-சின்னையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு காசியர்-மயிலுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதனடங்கலில் சொரியலாய் $\frac{1}{8}$ பங்கு.

யாழ்ப்பாணம் 9-8-35 } வே. க. சின்னத்தம்பி கொம்மிஷனர்

(21) 11-8-35—1

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 7746

புத்தூர் தெற்கு நவக்கிரி தம்பர்-விசுவலிங்கம், வழக்காளி.

ஷை இறை, (1) நல்லதம்பி-சந்திரசேகரம், (2) சேனாதிராயர்-நல்லதம்பி, (3) நல்லதம்பி பெண் வள்ளியம்மை, எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 7746 ம் இலக்க வழக்கில் 1935ம் ஹு ஆடி மீ 27-ந் திகதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணிகள் 1935 ம் ஹு புரட்டாதி மீ 5-ந் உ வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிகள் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர் தெற்கு இறை குருட்டுக்கலட்டி தோட்டம் நிலப்பரப்பு 7 கிணறும். தென்னைகளும் எல்லைகிழக்கு கையொழுங்கையும் கீழ்க்காணும் மூன்றாமாதனமும், வடக்கு மயில்வாகனம் பெண் பாறுபதிப்பிள்ளைக்கு உரியஆதனம், மேற்கு கனகசபை முத்துக்குமாருவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு சேனாதிராயர் முத்துக்குமாருவுக்கும் பங்காளருக்குமுரியஆதனம். இதனடங்கலும் கிணற்றில் பங்கும் மறுபங்காளருக்குரிய வழிவாய்க்காலுரித்தும்.

2. ஷையிறை குருட்டுக்கலட்டிதோட்டம் நிலப்பரப்பு 4. எல்லை கிழக்கு கையொழுங்கையும் கீழ்க்காணும் ஆதனமும், வடக்கு மயில்வாகனம் பெண் பாறுபதிப்பிள்ளைக்குரிய ஆதனம், மேற்கு கனகசபை முத்துக்குமாருவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு வல்லிபுரம் சின்னையாவுக்குரிய ஆதனம். இதனடங்கலும் முதலாங் காணியிலுள்ளகிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

3. ஷையிறை குருட்டுக்கலட்டி தோட்டம் மறுபிரிவுகளும் நிலப்பரப்பு40. எல்லைகிழக்கு கந்தன் வேலனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு சேனாதிராயர் நல்லதம்பிக்குரிய ஆதனம், மேற்கு சேனாதிராயர் நல்லதம்பிக்குரிய ஆதனமும் மேற்கூறியஆதனங்களும், தெற்கு மாரிமுத்து வேலுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதனடங்கலில் சொரியலாய் $\frac{1}{8}$ பங்கு.

யாழ்ப்பாணம் 9-8-35 } வே. க. சின்னத்தம்பி கொம்மிஷனர்

(22) 11-8-35—1

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோடு.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"சம்பவம் நடைபெற்றவன்று சரவணமுத்து என்பவர் என்னிடம் வந்து கூறினர். (வாசிக்கப்பட்டது) நான் எழுதியதன் பின் அவருக்கு வாசித்துக் காண்பித்தேன். அதன்பின்பே அவர் கையெழுத்து வைத்தார். பின்பு நான் குறித்த இடத்திற்குச் செல்லும்போது வழியில் எனது வீட்டுக்குக்கிட்டுமானமாகவே ஆறுமுகம், பொன்னுத்துரை முதலியவர்கள் தூக்கிக்கொண்டுவரக் காயமடைந்தவரைக் கண்டேன். பின்னர் வீட்டுக்குக் கொண்டுசென்று காயமடைந்தவனதும் மனைவியினதும் ஆறுமுகத்தினதும் வாக்குமூலங்கள் பதிவுசெய்தேன். அதன்மேல் மாமனுடனேயே காயமடைந்தவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினேன். பின்பு நான் சம்பவம் நடைபெற்றஇடத்தைப் பார்வையிட்டேன். அதன்பின்பு எதிரிகளின் வீட்டிற்குச் சென்றேன். அங்கு அவர்களைக் காணவில்லை. அடுத்த நாளும் போய்த் தேடினேன். சந்திக்கவில்லை. வெள்ளிக்கிழமையன்று எதிரி கோட்டிற்குப் போகும்போது பாலத்தடியிற் கண்டு கைதியாக்கினேன். அப்போது முதலாமெதிரியின் காலில் காயமொன்றிருந்தது. கஷ்டப்பட்டே நடந்தார். ஏப்ரல்மீ 2-ந் திகதியன்று 4 மணியளவில் 1ம் எதிரி என்னிடம் முறைப்பட்டார். பின்பு முருகேசு கடையிற் காயமடைந்தவனைச் சந்தித்து நீ உன்னுடைய தாயாரை அடித்ததுடன் வீட்டுத் திறப்பையும் வைத்திருக்கிறாயாம் என நான் சொல்லக் காயமடைந்தவன் "நான் அவ்விதம் ஒன்றும் செய்யவில்லை. நான்தான் செய்தேனெனச்சொன்னால் கோட்டுக்குப் போகட்டும்" என்று சொன்னார். அப்போது அப்பலவாணருக்கருகே எதிரியும் நின்றார்."

குறுக்கு விசாரணையின்போது முன்னுக்குப்பின் முரணாகவும் மறதியினமாகவும் கவலையீனமாகவும் மேற்கூறிய சாட்சி கூறினர். பின்னர் P.S. 3543 எம். எஸ். ஜோசெப் சாட்சியங் கூறினர்.

இத்துடன் வழக்காளிபக்க விவாதம் முடிவடைந்தது.

எதிரிபக்க விவாதம்

கோவளம்வாசியும் இவ்வழக்கின் 1ம் எதிரியுமாகிய கணபதிப்பிள்ளை-கந்தையாகூறியவற்றின் சாராம்சம் வருமாறு :—

"எனக்கு 5 பிள்ளைகளிருக்கின்றார்கள். காயமடைந்தவன் பிள்ளையில்லாத மலடன். எனது தம்பியாகிய காயமடைந்தவனைப்பற்றியே விதானையிடம் முறையிட்டேன். எனது தாயார் என்னிடம் மகன் தன்னை அடித்ததாகவும் ஒரு அறையின் (குசினி) கதவை உடைத்ததாகவும் ஒரு அறையைப் பூட்டித் திறப்பைக் கொண்டு போனதாகவும் அந்த அறையினுள் கண்ணுக்குப்போடும் மருந்திருப்பதாகவும் சொன்னபடியால் நான் விதானையிடம் அப்படியே சொன்னேன். 1-ந் திகதியாகிய திங்கட்கிழமையன்று விதானையிடம் போய் தயவுசெய்து திறப்பை வாங்கிக்கொடுங்கள் என மன்றாடினேன். அதற்கு அவர் 2உ காலையில் வரும்படி கூறினர். அன்றைய தினம் காலையில் நான் போனதும் விதானை தான் ஓர் வழக்கு அனுவலாக யாழ்ப்பாணம் போகவிருப்பதாகவும் பின்னேரம் வரும்படியாகவும் சொன்னர். அப்படியே நான் பின்னேரம் போகும்போது விதானையை வழியில் சந்தித்து அழைத்துவந்தேன். முருகேசுவினது கடையில் காயமடைந்தவனைச் சந்தித்துக் கேட்டார். அப்போது அவன் அப்படிச் செய்தாலென்ன, வழக்கை வைக்கட்டும் என்று சொல்லிவிட்டு ஆறுமுகத்தின் வீட்டுப்பக்கமாகப் போய்விட்டான். நான் சிறிதுநேரம் சென்று எனது வீட்டிற்குச் சுப்பையா என்பவரின் மனைவியுடன் சென்றேன். வழியில் காயமடைந்தவன் தனது மாமனின் வீட்டினின்றும் வெளிப்பட்டுவந்து என்னடா விதானைக்குச் சொன்னாய் என்று கேட்க நான் சொன்னாலென்ன என்றேன். உடனே கையிலிருந்த குடையால் தலையிலடித்தவுடன் எனது கழுத்தில் பிடித்து இழுத்து விழுத்தினன். இருவரும் விழுந்தோம். பின்னர் எனக்குக் கடித்தான். நாங்கள் இழுபறிப்படும்போது காயம்பட்டவன் எனது விதைகளை 2 கையாலும் பிடித்து நெரித்துக் கசக்கினன். எனக்கு வேதனை உண்டாக்கியதன்மேல் நான் மடியிலிருந்த கத்தியை இடதுகையால் எடுத்துப் பல்லினாற் கடித்துவிரித்து இடதுகையாலேயே குத்தினேன். எத்தனை குத்துகள் குத்தினேனென்பது எனக்குத் தெரியாது. ஆனால் எனது விதையிற் பிடித்தபிடியை விடுமளவும் குத்தினேன். நான் அவனது கழுத்தில் குத்தவில்லை. நான் குத்தியிழுத்தபோது அவன் எனது விதைகளைக் கடிப்பதற்காகக் குனிந்து வாயைக் கொண்டுவர கத்தி அவனது கழுத்தில்பட்டது. அவன் எனது விதைகளைப் பிடிக்கும்போது 'விலகுமடா' என 2-ம் எதிரி கூறினர். எமது சண்டை முடிந்ததும் அதாவது கழுத்தில் ஏற்பட்ட காயம் உண்டாகியதன்மேல் காயமடைந்தவன் எனதுபிடியை விட்டான். அப்பிடியினால் நான் மிகவும் வருத்தப்பட்டேன். அவன் விதைப்பிடியை விட்டதின்மேல் நான் குத்தாமல் விட்டுவிட்டேன். அப்போது "சீவன்போகுது" எனக்கத்தினேன். இதன்மேல் அவ்விடம் வந்த சிவகுருநாகமுத்துவின உதவியுடன் (அவர் என்னைத் தாங்கிவர) நான் எனது வீட்டுக்குச் சென்றேன். அதன்மேல் வைத்தியர் சரவணமுத்துவிடம் சென்று மருந்து கட்டினேன். மருந்து கட்டியதனமேல் வைத்தியர் நடக்கக் கூடாதெனச் சொல்ல நான் அவரது வீட்டிலேயே இருந்தேன். பின்னர் 3-ம் நாளன்று காலையில் காத்தையில் கந்தசாமியுடன் கூடிக்கொண்டு விதானை வீட்டுக்குச்சென்று 10 மணி வரையில் காத்திருந்தேன். பின்னரும் மருந்து கட்டுவதற்காகச் சென்றேன். நான் வீட்டில் இல்லாதபோது பொலிஸ்விதானை என்னைத்தேடி வீட்டிற்குச் சென்றிருந்தாலும் சென்றிருக்கலாம். ஆனால் விதானையார் வீட்டுக்கு வந்திருந்ததாக என்னிடம் ஒருவரும் தெரிவிக்கவில்லை. நான் முறைப்பாடு கொடுப்பதற்காகக் கோட்டிற்குப் போனபோது விதானை கோட்டருகிலேயே என்னைக் கைதுசெய்தார். என்னை டாக்குத்தரும் சோதனைசெய்தார். காயமடைந்தவன் எனது தாயாரிடமுள்ள சகல காணிகளையும் எழுதித்தரும்படியாகவே அவருடன் சண்டைசெய்பவன். அவன் அதிக செலவு செய்பவன். அதனால் அனேக பணத்தை விரையஞ்செய்துவிட்டான். தாயார் என்னிடம் அறிவித்ததின்மேல் நான் அவரது வீட்டுக்குச் சென்று பார்வையிட்டேன். அப்போது குசினிக்கதவு உடைக்கப்பட்டும் வீட்டுக்கதவு பூட்டப்பட்டுமிருந்தது.

மீண்டும் குறுக்கு விசாரணையின் போது கூறியவற்றின் சாரம்சம் வருமாறு:—

"எனது தாயாருக்கே அவ்வீடுகள் சொந்தமானது. காயமடைந்தவன் அவ்வீட்டில் வசிப்பவனல்லன். அவன் தனது மாமனாரின் வீட்டுக்கு அணித்தாகப் பெண்சாதியினது சீதனக் காணியில் புதுவீடு கட்டி அதில் சதிபதிகளாகச் சீவித்துவருகிறான். கிளவியிடம் இருக்கும் பணம் பொருள்களைப் பறிப்பதற்காகச் சிலநாட்களில் அங்குவந்து போகும் வழக்கமுண்டு. எனது தாயாரைப் பிடித்துத் தள்ளியதால் அவரது தோள்மூட்டில் உரைஞ்சின காயமிருந்தது. எனக்குமுன்னாகப் போன சின்னத்தங்கத்துக்குக் காயக்காரன் சொன்னவைகள் கேட்டிருக்கும். தூரநின்று பார்த்துக்கொண்டு நின்றான், சின்னத்தங்கத்தையும் சாட்சியாகக் கூப்பிட்டிருக்கிறேன் காயக்காரன் குடையால் அடித்தது உண்மைதான். ஆனால் எனது தலையிற் காயமில்லை."

அதன்பின்னர் சிவகுரு-வேலுப்பிள்ளை என்பவர் எதிரியைத் தான் விதானைவீட்டில் கண்டதாகவும் அப்போது எதிரி சுகவீனமாகக் காணப்பட்டதாகவும் தான் போனபோது விதானை அங்கு இல்லையென்பதாகவும் கூறினர்.

அதனபின்னர் நியாயவாதி எஸ். டி. தம்பு அவர்களும் நீதியரசரும் யூரிமார்களுக்கு வழக்கின் விபரங்களை விரிவாக எடுத்துரைத்தார்கள். சிறிதுநேர ஆலோசனையின்பின் யூரிமார்கள் ஏகமனதாக 1-ம் எதிரி பாரதூரமான காயத்தை வருவித்ததற்காகக் குற்றவாளியெனவும் 2-ம் எதிரி குற்றவாளியல்லரெனவுங் கூறினர்கள்.

அடுத்தநாட் காலை கோடு கூடியதும் நீதியரசர் ஷை எதிரியாகிய கந்தையாவுக்கு 3 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

ஞாபகார்த்த நன்கொடை

ஊரெழு வாசரும் பிரபல கமத்தொழிலாளருமாகிய திருவாளர் க. வேலுப்பிள்ளை அவர்களின் ஆறாவது புதல்வன் திரு. நல்லதம்பி அவர்கள் சுரநோய் காரணமாகச் சென்ற 8-8-35 வியாழக்கிழமை இரவு மூன்று மணியளவில தேகவியோகமாயினர் என அறிந்து விசனமடைந்தாம். இவருக்கு இரு பெண் சகோதரிகளும் மூன்று ஆண் சகோதரர்களுமுளர். மோல்மேன் என்னுமிடத்தில் உத்தியோகம் வகித்திருக்கும் திரு. அ. சி. க. குமரையா அவர்களுக்கும், மலாய்நாட்டில் கிமாஸில் புகையிரதப்பகுதியில் உத்தியோகம் வகித்திருக்கும் திரு. சி. பொன்னையா அவர்களுக்கும் மைத்துனராவர். இவரது ஞாபகார்த்தமாக திருவாளர் அ.சி.க. குமரையா அவர்களால் "ஈழகேசரி"க்கு நன்கொடையாக உதவிய ரூபா இரண்டு வரப் பெற்றாம்.

திரு. நல்லதம்பி அவர்களையிழந்து துன்புறும் அவரது தந்தை தாய் பந்து மித்திராதியோர்க்கு எமது அனுதாபமுரியதாகுக. —ப.ர்.

சுற்றுடல்.

—"வாராந்தன்."

"சுற்றுடலில் கூறப்படும் விஷயங்கள் சிலவற்றைத் தென்னிந்தியாவிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் கவர்ந்துகொள்கின்றன"வென ஒருவர் என்னிடங் கூறினர். "அதனால் நமக்கென்ன குறைவு. "ஈழகேசரி"யை அப் பத்திரிகைகளும் பின்பற்றிக்கொள்கின்றன. ஆனால் யாழ்ப்பாணப் பத்திரிகைகள் "ஈழகேசரி'யைப் பின்பற்றிக் கொள்கின்றன வென்றால் ஒரு சமையம் ஒட்டகத்தையும் எலியையும், அல்லது பூனையையும் புலியையு மொப்பிடுவார்கள்" என்றேன். "இந்தியப்பத்திரிகைகள்சில ஒருசொல்லையாவதுமாற்றுதுசுற்றுடலில் சில பகுதியை எடுத்து வெளிப்படுத்திய போதும் "ஈழகேசரி"ச் சுற்றுடலிலிருந்தெடுத்ததாகக்குறிப்பிடவில்லை. அது பெரும் பிழைஅல்லவா?" என்றார். பிழையாகவிருக்கலாம். அதை தயைசெய்து அவர்களுக்குத் தெரிவித்துவிடுங்கள் என்று கூறிவிட்டகன்றேன்.

* * *

அவமானம்

அலகபாத்தில் பண்டிதர் கோஷாமிஸ்ரு என்னும் பத்திராசிரியர் நகர நீதிபதிமுன்தோன்றி, வேறொரு பத்திராசிரியர் தனது மூக்கை வெட்டிவிட்டதாக ஓர் பத்திரிகை பொய்யான புதினத்தை 'வெளிப்படுத்தியதால் தனக்கு அவமானமாக விருக்கிறதெனக் கூறி "ஐயா, நீங்களே பாருங்கள், எனது மூக்கில் அற்பமேனும் வெட்டுப்படவில்லை"யே யென்று கூறி நின்றார். இது அவமானம் மாத்திரமா.....இவருக்குஇதனால் மூளைநோய், பணச்செலவு, இனப்பகை, மானபங்கம்.....எத்தனையோ வெல்லாம் வந்துவிட்டதாம். இது போன்ற புதினம் ஒருவரை எவ்வளவு தூரம் அவமானப்படுத்தக் கூடும்? தெருவீதியில் வெளிதோன்றியவுடன் யாரும் இவரது மூக்கைத்தானே பார்ப்பார்கள். தன்மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனமாக வேண்டியதேதேவையென்றும்ஒருசிலர் கூறுவார்கள். இவருக்கு உண்மையில் மூக்கறுபட்டிருந்தால் எழுதிய பத்திராதிபருக்கும்இவர்சகுனமாகவேயிருப்பார்.

* * *

தற்கொலை வேருட்டு

சென்றகிழமையி லொருநாள் எமது காரியாலயத்திலிருந்தேன். ஓர்துரைத்தனப்பள்ளித்தலைமையாசிரியர் வந்து சிரேஸ்டபாடசாலைத் தராதரப் பரீட்சைப் பெறுபேற்றை"ஈழகேசரி"யில் படியாநிற்கையில் "அட, அவன் தட்டிப்போட்டான் தானே" என்றார். எனக்கொன்றும் விளங்கவில்லை. அவரை உற்றுநோக்கினேன் வழக்கத்திலும்பார்க்க அதிகமாகச் சிரித்தார். "என்ன?" வென்றேன். "நான் இந்தமாணவனைத் தகுதியற்றவனென உண்மையில் மதித்து பரீட்சைக்கு அனுப்ப மறுத்துவிட்டேன். அவன் பொலிஸ் நீதிபதியிடம்போய் முறையிட்டான். நீதிபதி முன்னும் நான் அனுப்ப முடியாதென மறுத்தேன். பின்னர் அம்மாணவன் பாடசாலையில் வந்து என்னைப் பரிந்துவேண்டி, பரீட்சைக்கு அனுப்பாவிடில் வயிரவ கோயிலிலேயோ எங்கேயோ தற்கொலைபுரிந்து விடுவதாக வெருட்டினான்.....நான் அதற்கு அஞ்சி அவனை அனுப்பினேன்" என்று தலைமையாசிரியர்விபரித்தார். 'தற்கொலை' யென்பதுமில்லாவிட்டால் இம்மாணவன் எப்படிச்சித்தியெய்துவது? இது தலைவிதி யல்லாது தலையாசிரியரின் பிழையன்று என்றே கூறவேண்டும்.

விலைக்கு மனைவிகள்

பெசவாரில் ஒருவரின் மனைவி இன்னொருவருடன் கூடிச்சென்று விட்டாளாம். அப்படியானால் சொந்தப் புருஷன் என்ன செய்வான்? அவன் அதிகதாமதமில்லாது அவளைச் சந்தித்துச் சுட்டுக்கொன்றுவிட்டான். சோரமாகக் கூட்டிச் சென்றவனுக்கு 500ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அவன் 500 ரூபாவுடன் தப்பிக்கொண்டது அவனது சாதகபலனே. நிற்க, இந்தப் புருஷனுக்கு மனைவி சும்மா வரவில்லை.....ஆயிரம்ரூபா கொடுத்தே வாங்கினான். மனைவி போனாலும் ஆயிரம் ரூபா இவனுக்கு சமாதானத் தலைவர்கள் கொடுத்தார்கள். இந்தப் பணத்தைக்கொண்டு புதிய மனைவியொருத்தியை இவன் சம்பாதித்துக் கொண்டான். இந்தத்தேசத்தில் வசிக்க இங்குள்ளவர் அநேகருக்கு விருப்பமாகவிருக்குமென்பதை இங்கு குறிப்பிடத் தேவையில்லை.

* * *

புதுமுறையான தேரிவு

வரும் பொதுத்தெரிவில் புதுவிதமாக வாக்கு எடுக்கப்படுமாம். தெரிவு நடக்குமிடங்களில்ஒரேயொருபெட்டி வைக்கப்படும். வாக்காளருக்குக் கொடுக்கப்படும் சீட்டுகளில் மாத்திரம் அபேட்ஷகர்களுக்குக் குறிக்கப்பட்ட நிறமும் அந்த நிறங்களின்மீது அவ்வவ் அபேட்சகர்களின் பெயர்களும் எழுதப்பெற்றிருக்கும். வாக்காளர் தாம் விரும்பியவரின் பெயருக்கே 'புள்ளடி' அடையாளமிட்டு பெட்டியிற் போடவேண்டும். இது மிகத் தொந்தரவான முறையென்றே கூறவேண்டும். வாக்காளரில் ஒருசிலர் அல்லது பெரும்பாலார் கல்வியற்றவர்களென்றால் காரியமில்லை. ஆனால் கல்வியின்மையோடு மடமையுமிருந்தால் பேசவும்வேண்டுமா?

* * *

ஐயோ! சிவப்புநாகம்!!

சென்ற பொதுத்தெரிவில் வாக்குச் சீட்டுகள் போடுவதற்காக வைக்கப்பட்ட பெட்டிகளுள் பலகார வகைகளும் தவால்களுமிருந்தது புதினமன்று. ஆனால் ஓரிடத்தில் ஒரு வயோதிபன், அங்கிருந்த மேல் உத்தியோகத்தர்,சீட்டுகள்போடுவதற்காக வைக்கப்பட்டிருந்த பெட்டிகளுள் பாம்புகளில்லையென்று சத்தியஞ்செய்தாலல்லாது அதற்குக் கிட்டப்போக முடியாதெனக் கூறிநின்றார். சத்தியஞ் செய்யப்பட்டது. கூட்டத்துள் மிகக் கவனத்துடன் சென்றார். சிவப்புப் பெட்டியொன்றுதெரிந்தது. "ஐயோ! சிவப்புநாகம்!! என்று ஓலமிட்டுக் கொண்டு திரும்பியோடி வெளியேறினான். இவைபோன்ற வாக்காளருள்ள நமது இலங்கைத்தீவில் வாக்குப் பெறுவதெப்படி? இவர்களின் வாக்கைப்பெற்று அரசாங்க சபையையடையும் அங்கத்தவர்கள்எப்படி? என் செய்யலாம்!

* * *

நீதிபதிகளின் நியமனம்

கொழும்பு டிஸ்திறிக் நீதிபதியாகவிருந்த திரு. L. M. மாட்டினெஸ் அவர்கள் சுப்பிறீங்கோட்டு நீதியரசராக நியமிக்கப்பட்ட நாட்தொடக்கம் டிஸ்திறிக் நீதிபதிப்பதவி காலியாகவேயிருக்கிறது. சுப்பிறீங்கோட்டிலும் ஏழாவது நீதியரசர் இன்னும் நியமிக்கப்படவில்லை. சட்டத் தலைவர் பதவிக்கு மொருவர் நியமிக்கப்படவேண்டியதாய் வரக்கூடும். புதிதாக சட்டக்காரியதரிசியாகவு மொருவரை நியமிக்கக் கூடும். ஒருசமையம் திரு. ஹெயிலி அல்லது ஆர்.எல்.பெரைரா விரும்பினால் சட்டததலைவர் பதவிக்கு நியமனம்பெறக்கூடும். பெரைரா சட்டத் தலைவராகக் கடமை பார்ப்பது யாவர்க்கும் விருப்பமா யிருக்கலாம். ஆனால் தற்போது அப்பதவியில் பதில கடமை பார்த்துவரும் இலங்கைக்கோன் தகுதியற்றவ ரல்லராயினும் இவரது மைத்துனராகிய கண்டிப் பதில் டிஸ்திறிக் நீதிபதி திரு. ஆர். எவ். டயஸ் அவர்களுக்குப் பின்னரே முடிக்குரிய நியாயவாதியாக நியமனம் பெற்றார். அதிக திறமை வாய்ந்து நீதிபதிப்பதவி பெறுவதிலும் பார்க்க முடிக்குரிய நியாயவாதியாகக் கடமை பார்த்து நிற்றலே உயர் பதவிக்குப் பொருத்தம் போலும்.

இந்தியச் செய்திகள்

அடுத்த இராசப்பிரதிநிதி

இப்போது இராசப்பிரதிநிதியாகவிருக்கும் விலிங்டன் பிரபுவின் நியமனகாலம் அடுத்த சித்திரை மாதத்துடன் முடிகின்றது. இப்போது பிரிட்டிஷ் அரசினர் அதன்பின் வரும் இராசப்பிரதிநிதியை நியமித்துள்ளார். புதிதாக நியமிக்கப்பட்டவராகும் லின்லித்கௌ பிரபு இந்தியருக்குப் புதியவரன்று. இவரை யாவரும் நன்கறிவர். இவர் பல உத்தியோகங்களும் வகித்துப் பெருமையடைந்தவர். இவர்க்கு இப்போது வயது 48. ஐரோப்பிய மகாயுத்தத்திலும் பங்கு பற்றியவர். இர்வின் பிரபு 1931ஆம் இராசப்பிரதிநிதியாக நியமனமான காலத்தில் இந்தியாவின்கமத்தொழில் நிலைமையை நன்கு பரிசீலனைசெய்து அறிக்கை வெளியிடும்படி நியமிக்கப்பட்ட சபையினரின் (Commission) தலைமையை வகித்தவர். இந்தியாவின் பிரதம இடங்களெல்லாம் சுற்றுப்பிரயாணஞ் செய்தவர். இந்திய ஏழைகளின் நிலைமையை நன்கறிந்தவர்.

இதுவரையில் ஒவ்வொரு இராசப்பிரதிநிதி காலத்திலும் ஒவ்வொரு பிரதம சம்பவங்கள் நடந்ததுண்டு. ரீடிங் பிரபு காலத்தில் சட்டமறுப்பியக்கம் வேகமாகத் தலைகாட்டியது. இர்வின் பிரபு இந்தியத் தலைவர்களைச் சிறிது நாடிநின்று சமாதானத்தை நாட்டினர். விலிங்டன் பிரபு முன்பின் பாராது சட்டமறுப்பியக்கத்தை நசித்தார். இந்தியத் தலைவர்களைத் துரும்பாகவும் மதித்தாரில்லை. இனிவரும் லின்லித்கௌ பிரபுவின் காலம் சமாதானத்தை வருவிக்குமா? இந்தியர்கள் யாவரும் ஏகோபித்து உதவாதெனக் கூறிய அரசியற்றிட்டத்தை அரசினர் புகுத்த முயல்வர். அதனால் அதிகம் கஷ்டங்களேற்படக் காரணமில்லாதிருக்கவில்லை. இவர் இந்திய தேசியத் தலைவர்களையும் நாடித் தமது கடமையை ஆற்றின் எல்லாம் இலகுவாய் முடியுமென்பதே எமது அபிப்பிராயம்.

ஆரிய சமாஜத் தலைவர் தாக்கப்பட்டனர்

கல்கத்தாவில் ஆரியசமாஜத்தின் தலைவரும் சமயத்தொண்டில் ஈடுபட்டுழைப்பவருமாகும் ஸ்ரீமான் பன்னலால் என்பவரைச் சென்ற வாரம் நள்ளிரவில் ஒருவர் சென்று கத்தியால் குத்திவிட்டு ஓடிவிட்டனர். இவர்க்கு உதவிபுரியசென்ற இவர் மனைவியும் தாக்கப்பட்டனர். மனைவியின் கையொன்றை வாளால் வெட்டிவிட்டனராம். இப்போது இருவரும் வைத்தியசாலையில் இருக்கின்றனர். ஸ்ரீமான் பன்னலால் பின் இறந்துவிட்டதாகவும் மனைவியார் சுகமடைந்து வருவதாகவும் கூறப்படுகிறது. சமயத்துவேஷந்தான் இதற்குக் காரணமோவென்றும் எண்ணப்படுகின்றது.

பத்திராசிரியர் மகாநாடு

இம்மாத நடுப்பகுதியில் இந்தியப் பத்திராசிரியர்களின் மகாநாடு கல்கத்தா நகரிற் கூட்டப்படுமாம். அங்கே பத்திரிகையைக் குறித்து அநேக விஷயங்கள் ஆலோசிக்கப்படவிருக்கின்றன. அரசினர் அநேக சட்டங்களை உண்டாக்கிப் பத்திரிகைகளின் வாய்க்குப் பூட்டுப் போட்டுள்ளார். கனம் C.F. அன்ட்றூஸ்அவர்கள் இவ்விஷயத்தில் தாம் லண்டன் சென்றவுடன் அக்கறை எடுப்பதாகக் கூறியுள்ளார். பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பத்திரிகைகள் பெற்ற சுதந்திரங்கள் மிக அதிகமென்றும், இந்தியாவில் அரசினரைப்பற்றி ஒரு குறையும் கூறவியலாதிருக்கின்றதென்றும் சொன்னார். பத்திரிகைகளை நசித்துவிட்டு அரசுபுரிதல் நாகரிகத்துக்கு மாறென்றுங் கூறினர். பத்திராசிரியர்களின் கூட்டத்திற்கு மிகக் கீர்த்திவாய்ந்த அரசியல்வாதியும், அலகபாத் "லீடர்" பத்திரிகையின் ஆசிரியருமாகிய திரு. C. Y. சிந்தாமணி அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

பத்துவருடச் சிறைத்தண்டனை

லாகூரில் சமீபத்தில் நடந்த கலகத்தின்போது ஒரு சீக்கியக் கனவானைக் கொலைசெய்த மகமதிய வாலிபன் சென்றவாரம் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டான். விசாரணையில் குற்றவாளியாகக் காணப்பட்டமையால் 10 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சந்தேகத்தின்பேரில் கைதியாக்கப்பட்டனர்

சிட்டகாங்ஜில்லா வாசியும், அநேக நாமங்களையுமுடையவனாகிய ஒரு வாலிபன் அராஜகக்காரன் என்ற சந்தேகத்தின்பேரில் கைதியாக்கப்பட்டான். அவனிடம் சில துண்டுப்பிரசுரங்களும், சில வீடுகளின் மாதிரிப்படமும், ஒரு ஈட்டியும், வேறு சில கடதாசிகளும் இவனது உடுப்புக்குளிருந்து எடுத்தனர்.

காங்கிரஸ் மகாசபையின் பொன்விழா

இவ்வருடம் மார்கழிமாதம் 26-ந் தேதி பொன்விழா கட்டாயமாகக் கொண்டாடப்படவேண்டுமெனக் காங்கிரஸ் நிருவாகசபையினர் முடிவுசெய்துள்ளனர். இதை நடாத்தி முடிப்பதற்கெனத் திருவாளர்கள் பட்டாபி சீதாராமய்யர், ஜெயராமதாஸ் தௌலத்ராம், K. F. நரிமன், காங்கிரஸ் தலைவராகிய பாபு இராசேந்திரபிரசாத் என்பவர்கள் அடங்கிய ஒரு நிருவாக சபை அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வெளியிட்ட அறிக்கை பின் வருமாறு:—

(1) மார்கழிமாதம் 26-ந் தேதியன்று இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் கொண்டாட்டம் நடைபெறும். குறிக்கப்பட்ட இடத்தில் எல்லாரும் கூடிக்கூட்டம்நடத்தவேண்டியதில்லை.

அன்று காங்கிரஸ்கொடி தொங்கவிடப்படும். பகிரங்ககூட்டம் நடத்தவேண்டும். காங்கிரஸ் தலைவர் வெளியிடும் அறிக்கை வாசிக்கப்படும். இரவில் கட்டிடங்கள்மீது வெளிச்சம் போடவேண்டும்.

(3) கதரும், மற்றும் கிராமப் பொருள்களும் காட்சியாகக் காட்டப்படவேண்டும். விளையாட்டுகளும் நடத்தப்படலாம்.

(4) மார்கழிமாதம் 26-ந் தேதி காங்கிரஸ், முதன்முதல் 1885-ம் வருடம் பம்பாயில் கூடிய கட்டிடத்தில் விசேட கொண்டாட்டங்கள் நடாத்தப்படலாம். அக் கட்டிடத்தைக் காங்கிரஸ்சபை விலைக்குப் பெற எண்ணியது. அது ஒரு தர்மஸ்தாபனக் கட்டிடமாகையால் விலைக்குப் பெறவியலாதாயிற்று.

ஒருவனுக்குச் செய்யத்தக்கது நல்வினை, செய்யத்தகாதது தீவினை.



வானந் துளங்கிலென் மண்கம்ப மாகி
லென் மால்வரையும், தானந் துளங்கித்
தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம்
படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்
சுண், நேமொன் றில்லா ஒருவனுக் காட்
பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னுகம்:
யுவஸு ஆடிமீ உஎஉ

இதுவரையும் கற்பித்த கல்வி!

சென்ற நூற்றைம்பது வருட காலமாக இலங்கை பிறிட்டிஷ் அரசினரின் பரிபாலனத்தின்கீழ் இருந்துவருகின்றது. அரசினர், ஆரம்பத்திலிருந்து கல்வியை நமது நாட்டில் பரவச்செய்வதற்குப் பல்வேறு வழிகளையும், முறைகளையும் அனுட்டானத்திற் கொண்டுவந்து உபயோகித்தனர். இவைகளால் நமது நாடு அடைந்த விசேஷ பயன் யாது? அறியாமை எமது நாட்டினைவிட்டு நீங்கிவிட்டதா? உயர்தரக் கல்வி உண்மையில் நிலைபெற்றுளதா? அறிவின்பொருட்டுக் கல்விகற்போர் தொகை அதிகரித்துளதா? உண்மைப் பெரியார் எத்தனைபேர் நமது நாட்டில் இருக்கின்றனர்? என்பவைகளை நாம் சிறிது ஊன்றி நோக்கின், இதுவரையில் நமது நாட்டிற் கற்பிக்கப்பட்டுவந்த கல்வி போலியாக முடிந்ததென்றே கூறவேண்டும். நமது நாட்டினை அரசுபுரியும் பிறிட்டிஷார், தமது அரசியல் நடைபெற்றால் போதுமென எண்ணி வந்திருப்பின், அதுவும் நூதனமாகாது.

இப்போது நமது நாட்டின் கல்விவிருத்தி உண்மைவழியிற் சென்று உபயோகப்படாததற்குக் காரணங்கள் யாவையென அறிவதும் மிக அவசியம். கல்வி விஷயத்தில் இவ்வித குறைகள் ஏற்பட்டதற்குப் பலரும் பலவிதமான காரணங்களைக் கூறுகின்றனர். இவற்றுள் எது உண்மையானதென்பதை நாம் நுணுகியறிவதும் பிரதானமான விஷயமாகும். உண்மைக்கல்வியை நம் நாட்டவர் கற்காது பிழையான வழியிற் சென்றாரென்பதும் வெளிப்படை. இதுவரையும் கற்றுக் கொடுக்கப்பட்ட கல்வி, மாணவர் தாமே புதிதாக விஷயங்களை அறிதற்கு உபயோகமற்றதாயிருந்தது. மற்றையோரைப் பின்பற்றுவதில் தீராக இருந்தோமேயன்றி, நம்முடைய தீவிர விவேகத்தைத் துணைக்கொண்டு புதுப்புது விஷயங்களில் சிந்தையைச் செல்லவிட்டோமில்லை. "பழைய குருடி கதவைத் திறவடி" என்றவாறு, உத்தியோகத்தைப் பெறலாமெனப் பாரம்பரையாக வந்த பழக்கத்தைக் கையாண்டுநின்ற நம்மவர்க்கு மீட்சியேது?

இவ்விதமாகக் கல்விமுறை பெரிதும் இழுக்குடன் கூடியதாயிருந்தமைக்குப் பிரதானமான காரணம், நாம் கற்கும் கல்வியன்று; கற்பிக்கப்படும் பாஷையே என்பதைப் பொதுவாக யாவரும் அங்கீகரிப்பர். சுதேசபாஷையை நாம் பொதுவாகப் புறக்கணித்து, அந்நியபாஷையை இதுவரையும் கற்றுவந்தமையால், நமது நாட்டில் உண்மை அறிவாளிகள் மிகச் சிலரேயாயினர். உத்தியோகப் பெருமை, பொருள் வருவாய் என்பனவற்றை நாடிக் கல்வி கற்கப்பட்டதேயன்றி, அறிவின்பொருட்டுக் கல்வி கற்கப்படவில்லை. தமது சொந்தப்பாஷையைப் புறக்கணித்து அந்நிய பாஷையைக் கற்று மேனிலையடைந்த நாடொன்றைச் சரித்திரங்களிற் காணலாமா? தற்போதைய கல்விமுறையால் இதுவரையும் நமது நாடு அடைந்த நன்மை ஒன்றாயினுமுளதா?

நமது அயல்நாடாகும் இந்தியாவில் எத்தனையோ பேரறிஞரும் கல்விமான்களும் சாஸ்திர விற்பன்னரும் இருக்கின்றனரே. அங்கே சர்வகலாசாலைகளும் பலவுளவே. தேசபாஷையும் மிகவும் ஆர்வத்துடன் கற்பிக்கப்படுகின்றதே. இந்தியாவின் எப்பாகத்திலும் வங்காளப் பிரதேசமே கல்வியில் அதியுன்னத நிலையடைந்த மாகாணமாகும். அந்நாடு கல்வியில் உயர்ந்த நிலையைப் பெற்றுத் திகழ்வதற்குக் காரணம் யாது? தேசபாஷையை அங்குள்ளோர் மிகவும் விரும்பிக்கற்றலே. கீழ்தர வித்தியாசாலைகளில் மாத்திரமன்று உயர்தரக் கல்விபயிற்றப்படும் சர்வகலாசாலை வகுப்புக்களிலும் கல்வி, தேசபாஷை மூலமாகப் பயிற்றப்படுகின்றதே. விஷயமிவ்வாறாக, அந்நாடு கீழ்நிலையில் எப்படியிருக்கும்? கல்கத்தா சர்வகலாசாலையினர் தேசபாஷையின் விருத்தியைநாடி இடைவிடாது கையாளும் முறைகள் போற்றப்பட வேண்டியனவே. மேல்நாட்டில் விருத்தியடைந்த இரஸாயனம், பௌதிகம், கணிதம் முதலிய சாஸ்திரங்களிலுள்ள எத்தனையோ நூல்கள் வங்காளிப்பாஷையில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றன. சென்றவாரம் கல்கத்தா சர்வகலாசாலையினர் ஒரு நிர்வாகசபையை 5000 புதிய பதங்கள் அமைத்தற்காக நிறுவியுள்ளார்.

இலங்கையில் இவ்விஷயமாகயாது செய்யப்படுகின்றது. ஏற்ற நூல்கள் கிடையாதென்பதாகச் சாட்டுக்கூறி, சுதேசபாஷைகள் புறக்கணிக்கப்படுகின்றன. இனிச் சர்வகலாசாலை ஒன்று இலங்கையில் ஏற்படும் வரையும் சுதேச பாஷைகட்கு ஏற்ற மதிப்புக்கிடையாதென்பதும் உண்மையே. சர்வ கலாசாலையெப்போது நிலைபெறுமெனத் திடமாகக்கூறலாமா? முடியாது. எல்லாஞ் சங்கடந்தான், மேலும் சுதேச பாஷையில் ஏற்ற புத்தகங்களும் மற்றும் உபகரணங்களும் கிடையாமையால் அதிகாரிகளும் ஆங்கில பாஷையின் விருத்தியையே நாடுகின்றனர். மாணவர்களின் இயற்கைக்கும் வாழ்க்கைக்கும் உதவாத அந்நியபாஷையைக் கற்பித்துச் சென்ற நூறு வருடங்களிலும் உண்மையானநன்மை எய்தாதாக, இனிப் பெருநன்மை வருமென எப்படிக் கூறுவது? ஆகையால் உண்மையாக நமது நாடு முன்னேற்றமடைய வேண்டில், அரசினரும் மற்றையோரும் ஒருங்குசேர்ந்து தேச பாஷைகளை ஆதாரமாகக்கொண்டே கல்வி விருத்தியை நாடவேண்டும். இது ஒரு பெரிய உண்மையாகும்.

பால்கட்டு

"குழந்தைகளுக்குப் பால்கட்டுதல்" என்றதலைப்பின் கீழ், "உண்மை விளம்பி" என்னும் ஒருவரால் எழுதப்பட்ட கடிதம், இப்பத்திரிகையின் மற்றோரிடத்தில் வெளியிடப்பட்டுள்ளது. நமது நாட்டில் "பால்கட்டுச் சட்டம்" அனுசரணைக்கு வந்தகாலத்தில் பலர் பலவாறு அபிப்பிராயங் கூறுவாராயினர். அமெரிக்கா முதலிய மேலைத்தேசங்கள் பலவற்றில் இச்சட்டம் நீக்கப்படவேண்டுமென்ற கிளர்ச்சியும் இப்போது தோன்றியிருப்பதாக அறியக்கிடக்கின்றது.

குழந்தை பிறந்த மூன்றுமாத எல்லைக்குள் பால் கட்டவேண்டுமென்னும் நியதி மிகக் கடினமானதென்பதை எவரும் அங்கீகரிப்பரென்பதே எமது துணிபு. பால் கட்டுபவர் குழந்தையின் தேகநிலைமையை அறிந்து, அதற்கேற்ற முறையில் பால் கட்டுவதாகத் தெரியவில்லை. தலைமைக்காரரின் நெருக்கடியினாலும், குற்றம் கொடுக்க நேரிடுமென்னும் பயத்தினாலும் பெற்றார் தங்கள் குழந்தைகளைக் கொண்டுவந்ததும், பால் கட்டுபவர் முன்பின் யோசனையின்றி நான்கு இடங்களிலும் குத்திவிடுகிறார். பச்சைக் குழந்தைகளின் சிறிய கையில் நான்கு இடத்திலும் பால்கட்டுவதினால் ஏற்படும் கஷ்டத்தைப் பற்றியாவது, பின்னால் அதற்குச் செய்யவேண்டிய சிகிச்சை முறைகளையாவது பெற்றாருக்குத் தெரிவிப்பதுமில்லை. இதனால், குழந்தைகளின் நிலை சிலகாலங்களில் மிகக் கவலைக்கிடமாயிருப்பதை நாம் காண்கின்றோம். இந்தப் பால்கட்டின் பயனாகச் சில பெற்றார் அதிக பணத்தைச் செலவிடவேண்டியும் ஏற்படுகிறது. தகுந்த முறையில் சிகிச்சை செய்வித்துக்கொள்ள அறியாத பெற்றார், "கழுதைப் புண்ணுக்குப் புழுதி மண் மருந்து" என்ற முறையில் நேர்விரோதமான சிகிச்சை முறைகளைக் கையாடிக் குழந்தைகளை இழந்து துன்புறுவதையும் பலரறிவர். ஆகவே, குழந்தைகளுக்குப் பால்கட்டுவிக்கும் பெற்றார், குழந்தையின் தேகநிலையை அறிந்து ஏற்ற காலத்தில் கட்டுவிக்க வேண்டுமென நாம் எச்சரிக்கை செய்கின்றோம். அரசினரும் பால்கட்டுவதாலேற்படும் நன்மை தீமைகளையும், சிகிச்சை முறைகளையும் துண்டுப் பிரசுர மூலமாகவேனும், வேறுவகையாகவேனும் பொதுசனங்களுக்குத் தெரியும்படி செய்வித்தல் வேண்டும். பால் கட்டுக்காரர், ஒரு குழந்தைக்குப் பால்கட்டி முடிந்ததும், அக்குழந்தையின் பெற்றாரிடம் அதற்குச் செய்யவேண்டிய சிகிச்சைகளைப்பற்றிக் கூறுதலும் மிக விசேடமாகும்.

உலக அரசியற் போக்கு.

சர்வதேசசங்கம் தலையிட்டதன் காரணமாக இத்தாலி, அபிஸீனியா என்னும் இரு நாடுகட்குமிடையில் சமரசம் வரக்கூடுமோவென யாவரும் எதிர்பார்க்கின்றனர். சர்வதேச சங்கத்தினரின் முயற்சி ஒருவாறாக, இத்தாலியர் தமது யுத்தாயத்தத்தைப் பன்மடங்கு வேகத்துடன் செய்துநிற்கின்றனர். 500 ஆகாயக்கப்பல்களை ஒருங்கனுப்பி அபிஸீனியாவைத் தகர்த்துவிடலாமென்பது இத்தாலியர் தீர்மானம். இப்போது யுத்தவீரருக்கு ஆகாயக்கப்பலை ஓட்டும் பயிற்சியே அதிகமாகநடக்கின்றது. அத்துடன் நில்லாது யுத்தகாலங்களில் உபயோகிக்கப்படாதெனச் சர்வதேசசங்கத்தினர் முடிவு செய்த நச்சுப்புகையும், கண்களைப் பார்வை குன்றச்செய்யும் புகையும் இத்தாலியரால் உடன்படிக்கையை மீறி உபயோகப்படுத்தப்படுமாம். o o o

பிரிட்டிஷ் அரசியலை நடத்தும் மந்திராலோசனைச்சபையினர் (Cabinet) இத்தாலி – அபிஸீனிய தகராற்றை நன்கு ஆலோசிக்கின்றனர். சர்வதேசசங்கத்துப் பிரதிநிதியாகும் சேர் சாம்யேல் ஈடின் ஜெனிவாவில் நடந்தவற்றை விரிவாகக் கூறினர். இத்தாலிய பத்திரிகைகள் பிரிட்டிஷாரை நியாயம் நீதியின்றி அவதூறாக எழுதுவதைக்குறித்துப்பிரிட்டிஷ் அரசினர் லண்டனிலுள்ள இத்தாலிய தூதர்மூலமாக இத்தாலிய அரசினர்க்குத் தெரிவித்துள்ளார். அபிஸீனியரைப் பிரிட்டிஷார் சார்ந்துநிற்பதாக இத்தாலியர் அபிப்பிராயங்கொண்டதேஇப்படிச் செய்வதற்குக்காரணமாயிற்று.

o o o

முஸோலினி தனது ஆகாயப்படையின் பெலனையே முற்றும் நம்பியுள்ளார். தரைப்படைகளும் அதிகமாக இறிற்றீறியாவுக்கு அனுப்பப்படுகின்றன. இத்தாலி-பிரான்ஸ் என்னும் இரு நாடுகட்குமிடையிலுள்ள எல்லைப்புறங்களில் வைக்கப்பட்ட படைகள் யுத்தகளங்கட்கனுப்பப்பட அவ்விடத்திற்குப் புதிய போர்வீரர் பழக்கப்பட்டு வைக்கப்படுகின்றனராம். யுத்தத்துக்காயத்தமாகஇப்போதுஇத்தாலியர் சார்பில் 100,000 போர்வீரர் இருக்கின்றனராம். இரகசியமாகப் பிரான்ஸ் தேசத்தவருக்கும் இத்தாலியர்க்கும் ஏதாவது உடன்படிக்கை ஏற்பட்டிருக்கலாமோவென ஊகிக்கப்படுகின்றது. சமாதான உடன்படிக்கை இல்லாவிடில் இத்தாலியர் பிரான்ஸ் எல்லையிலுள்ள பட்டாளத்தை எப்படி வேறிடத்துக்குக் கொண்டுபோக முயல்வர்? மேலும் இத்தாலிய படைவீரனொருவனுக்கு பிரான்ஸ் அரசினர் ஓர் உயர்ந்த பட்டமளித்தாராம். இதன் நோக்கம் யாதோ? இது என்னத்தைக் காட்டுகிறது. சர்வதேசசங்கத்தை இத்தாலியர் மீறிச் சண்டைக்குச் சென்றாலும் இத்தாலியர்க்கு மாறாகப் பிரான்ஸியர் போருக்குப்போகாரென்பதே.

o o o

அபிஸீனியாவிலும் ஆபிரிக்காவின் மற்றைய இடங்களிலும் நாடுகள் புதிதாகக் கண்டுபிடிக்கும் தொழிலில் (Exploration) நெடுநாளாக ஈடுபட்ட மெஸ் கோடன் மக்கிறீ என்ன சொல்கிறார்:— "யுத்த மேற்படின் யார் வெல்வாரென கஷ்டப்பட்டு யோசித்துப் பார்க்க வேண்டியதில்லை. இத்தாலி வெற்றியடைதற்கு என்ன தடை? இவ்வளவு நிச்சயம் எப்படியெனச் சிலர் வினவக்கூடும். இத்தாலி, பிரான்ஸ், இங்கிலாந்து என்னும் மூன்று அரசினரும் தம்முள் எவருடனாவது யாராவது யுத்தங் கிளப்பில் அந்நாட்டிற்கு ஆயுதங்கள் விற்பதில்லையென ஒரு தீர்மானஞ் செய்துள்ளார். இது வெற்றி பெறுதற்கு பெரும் உதவியாகுமே. மேலும் அபிஸீனியாவில் ஒருகோடி சனங்கள் உளர். இவர்கள் எல்லாரும் யுத்தவீரர் என்போம். இத்தாலியில் 5 கோடி சனங்கள் உள. இவர்கள் எல்லாரும் யுத்தவீரர் என்போம். இத்தாலியில் 5 கோடி சனங்கள் இருக்கின்றனரே. அபிஸீனியரிடம் புதிய முறைத் துப்பாக்கிகளும் பீரங்கிகளும் கிடையாது. அபிஸீனியாவின் இயற்கையமைப்பு அந்நியர்க்கு பெரிதும் ஏற்றதாயில்லை என்றும் கூறப்படுகிறது. அடில் அபேபாவைக் கிட்டிச் சேர்தல் கஷ்டமென்றும் சொல்கின்றனர். இதுவெல்லாம் பொய்க்கதை. நீர்ப் பஞ்சம் ஏற்படுமென்பதும் பொய். வேண்டிய ஆறுகளும் குளங்களும் அங்கேஉள." o o

இத்தாலியர் பிரமாண்டமான ஆயத்தங்கள் செய்ய அபிஸீனியர் நித்திரை கொள்ளவில்லை. அபிஸீனியர் முதன் முதலாக இத்தாலியரது நாடாகும் சொமாலிலண்டு நாட்டினைத் தமது பாட்டாளத்தைக் கொண்டு தாக்குவர். அதன் பின்னரே வடக்கே நோக்கி இறிற்றீறியாவை நாடிச் செல்வர். ஒழித்திருந்து யுத்தஞ் செய்வோர் அதிகமாகப் பழக்கப்பட்டிருக்கின்றனர். மழை காலத்தில் அபிஸீனியாவில் நூறு மைல்கள் தாண்டிச் செல்ல 15 தினங்கள் செல்லுமாம். ஜெர்மனியர் சமீபத்தில் முகத்தில் நச்சுப்புகை தாக்காது அணிவதற்கு ஏற்ற 3000 முகமூடிகள் அபிஸீனியாவுக்கு அனுப்பியுள்ளார். விரைவில் இன்னும் 20000 மூடிகள் வந்து சேருமாம்.

யுத்த ஆயத்தங்களை நிற்பாட்டும்படி சர்வதேச சங்கம் இத்தாலியர்க்குக் கட்டளையிட வியலாததினால் அவமானமடையலாயிற்று எனச் சிலர் கூறுகின்றனர். ஆனால் யுத்தத்தை இன்னும் சில நாட்களுக்குப் பின் போட்டுச் சமரசத்தைக் குறித்துப்பேச இடமேற்பட்டுவிட்டதேயென பிறிட்டிஷாரும் பிரான்சியரும் உவகையடைகின்றனர். குறிக்கப்பட்ட காலத்துள் சர்வதேச சங்கத்தினர் கட்டளையிட்டபடி நடவாவிடின், சர்வதேச சங்கம் தான் செய்யவேண்டியதைச் செய்யுமென சேர் சாமுவேல் ஈடின் கூறுகின்றார். அப்படிச் சங்கம் செய்துவந்தால் பெரிய மதிப்பு இச்சங்கத்துக்கிருக்குமே.

o o o

அபிசீனியாவிற்கு வேண்டிய யுத்த ஆயுதங்களும் தளபாடங்களும் கொடுக்கயப்பானியருடன் அபிசீனிய அரசினர் ஓர் உடன்படிக்கை செய்துள்ளாராம். மேலும் யப்பானிலிருந்து யுத்த நிபுணர் விரைவில் அபிசீனியா சென்று வேண்டிய உதவிகளையும் செய்வாராம்.

"அரசாங்கசபை அண்ணத்தைகள் செய்யும் அக்கிரமம்"

சுயநலப் பாதுகாப்புச் சட்டம்

கிராமப் புனருத்தாரண விளக்கம்

தற்காலக் கல்வி முறையில் இலங்கையரும் ஆங்கிலேயரும் கொண்டுள்ள அபிப்பிராய பேதம்.

(கோழும்பு நிருபர்)

கொழும்பு, ஆகஸ்ட் 9

அரசாங்கசபை அங்கத்தினர்களின் விசேட உரிமைகள் சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் மசோதாவின் சாராம்சத்தைச் சென்றவாரக் கடிதத்திவ் தெரிவித்தோம். அங்கத்தினர்களுக்கு அவமானம் விளைக்கக் கூடிய செய்திகளை எவராவது வெளியிட்டால் அவரை அழைத்து விசாரணை செய்து தண்டனை விதிப்பதற்கு இம்மசோதா அரசாங்கசபைக்கு அதிகாரம் அளிக்கிறது.

தங்களுடைய மானத்தைக் காப்பாற்றுவதற்கு விசேட அதிகாரம் வேண்டும் அரசாங்கசபை அங்கத்தினர், எவ்வளவு அவமானமாக நடந்து வருகிறார்களென்பதையும் ஏற்கனவே பெற்றுள்ள விசேட அதிகாரங்களை எவ்வாறு துஷ்பிரயோகஞ் செய்து வருகிறார்களென்பதையும் இவ்வாரம் வெளிவந்த சில விபரங்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கவேலைகள் சம்பந்தமாய் இலவசமான தந்திகளனுப்புவதற்கு அரசாங்கசபை அங்கத்தினர்கள் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் அனுப்பும் தந்திகள் அரசாங்க சம்பந்தமுடையனவா அல்லவா என்கிற சந்தேகம் தபாற்பகுதித் தலைவருக்கு ஏற்படின், அவர் அத்தந்திகளைப் போக்குவரத்து நிர்வாகசபையாருக்கு அனுப்பிவைப்பார். நிர்வாகசபையார் அத்தந்திகள் அரசாங்க அலுவல்கள் சம்பந்தமானவையா அல்லவா என்பதை முடிவுசெய்வார். ஏறக்குறைய 50 தந்திகளைத் தபாற்பகுதித் தலைவர் சமீபத்தில் போக்குவரத்து நிர்வாகசபையாருக்கு அனுப்பியிருக்கிறார்.

இத் தந்திகளிற் சில பின்வருமாறு:—

(1) "எனது கடிதங்கள் யாவற்றையும் கொண்டுவரும்படி ஆயாளிடம் சொல்லு."

(2) "பத்தரை மணிக்கு மோட்டார் காரை அனுப்பிவை."

(3) "யூபிலிக் காட்சிக்காக எனக்கு 6 ஸ்தானங்களை ஒதுக்கிவை.

(4) "மிக அவசரமான வேலை. தயவுசெய்து நாளை வந்து பார்."

(5) "சனிக்கிழமை இரவு ரயிலில் நான் இந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டு .....க்குச்செல்லுகிறேன்."

மேலே கூறப்பட்டவைபோன்ற 50 தந்திகளைக்குறித்துப் போக்குவரத்து நிர்வாகசபையார் முடிவுசெய்வார்கள். அவைகள் அரசாங்கசம்பந்தமற்றவையென்று முடிவுசெய்யப்படின் அவைகளின் செலவு தொகை அங்கத்தினரிடம் கேட்கப்படும்.

ஆனால் அவர்கள் செலவுதொகையைச் செலுத்தவேண்டுமென்ற நியதியில்லை. ஏனெனில் நிர்வாகசபையின் தீர்மானம் அவர்களைக் கட்டுப்படுத்தமாட்டாது.

இலவசத் தந்திகள் சம்பந்தமாகத் தற்பொழுது இருந்துவரும் ஏற்பாடு திருப்திகரமானதாயில்லையென்று அரசாங்க கணக்குப்பரிசோதனைத் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

ஓர் புதிய மந்திரி

டக்டர் தாஸ் குப்தா என்பவர் கொழும்பு சர்வகலாசாலைக் கல்லூரிப் பொருளாதார சாஸ்திர ஆசிரியர். இவர் பொருளாதார சாஸ்திரத்தில் ஒரு பெரிய நிபுணர். இவர் சமீபத்தில் மேல்மாகாண ஐக்கிய சங்க மகாநாட்டில் பேசியபொழுது பின்வருமாறு கூறினார்:—கிராமங்களின் செல்வநிலைமையைப் பின்வரும் வழிகளில் மேம்படுத்தலாம்:—ஏற்கனவே இருந்துவரும் ஆதாய மூலங்களைத் திருத்தியமைத்தல், புதிய தொழில்களை ஆரம்பித்தல், விவசாயப் பொருள் விற்பனைசம்பந்தமாகச் சிறந்த வழிகளைக் காணுதல், கடன் சுமையைக் குறைத்தல், நல்லமுறையில் கடன்வசதி ஏற்படுத்துதல், கல்வி, சுகாதாரம், வைத்தியவசதி முதலியவற்றில் கவனம் செலுத்துதல், கிராம வாழ்க்கையையும் அரசியல் நடவடிக்கைகளையும் தூய்மைப் படுத்துதல்.

கிராமப் புனருத்தாரண வேலை சம்பந்தமாக மேலே கூறப்பட்டவிஷயங்கள் யாவும் அடங்கிய ஒருவிரிவான திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். இவ்விஷயங்கள் தற்பொழுது ஒரு தனி அதிகாரியின்கீழ் இருக்கவில்லை. இவ்விஷயங்களைக் கவனிப்பதற்காகக் கிராம அபிவிருத்தி மந்திரியென ஒரு புதிய மந்திரியை நியமித்தால் நலமாயிருக்கும்.

இலங்கையர் அபிப்பிராயம்

நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள பிரபலகல்லூரிகளிலொன்றான அர்ச். தொமஸ்கல்லூரியில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. இக்கல்லூரியின் பிரதமாசிரியரான சங்கை ஆர். எஸ். டீ. சேரம் ஒருபெரிய கல்வியாளுகக் கருதப்படுபவர். ஒக்ஸ்வோர்ட் சர்வகலாசாலையில் மிகவும் சிறந்தபட்டங்களைப்பெற்றவர். இவர் ஒரு இலங்கையர். இவருக்கு முன் இக்கல்லூரியிலிருந்த பிரதமாசிரியர்கள் யாவரும் ஐரோப்பியர். நேற்று முன் தினம் நடந்த பரிசளிப்பில் பேசும்பொழுது இவர் தற்காலக் கல்வி முறையைப்பற்றிக் குறிப்பிட்டார். ஆங்கிலக்கல்லூரிகளில் படிக்கும் பாலர்கள் விஷயத்தில் ஒரேகாலத்தில் ஆங்கிலப்படிப்பும் சுயபாஷைப் படிப்பும் ஆரம்பிக்கப்படுகிறதென்றும், இந்தப் புதிய முறை அனுஷ்டானத்துக்குவந்தபின் மாணவர்களின் ஆங்கில மொழிவன்மைகுறைந்து விட்டதென்றும் இருபது வருடங்களுக்கு முன் கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் எவ்வளவு திறமையிருந்ததோ அவ்வளவு திறமை இப்பொழுதுள்ள மாணவர்களுக்கு இல்லையென்றும் கூறினார். இவர் மேலுங் கூறியதாவது:—"எட்டுவயதுச் சிறுவர்களுக்கு இருபாஷைகளை ஒரேகாலத்தில் படிப்பிப்பது சரியல்ல..... இதனால் அவர்களுடைய மனம் குழம்பிவிடுகிறது..... இதுபோன்ற கல்லூரிகளில் ஆரம்ப வகுப்புகளில் சுயபாஷையைச் சம்பாஷணைமூலம் கற்பித்தால் போதுமென நான் நினைக்கிறேன். ஆங்கிலத்தில் எழுதவும் வாசிக்கவும் அவர்கள்கற்றபின் சுயபாஷை அரிச்சுவடியை அவர்களுக்குக் கற்பிக்கலாம்..... மற்றக் கல்லூரிகள் விஷயத்தில் இந்த முறை பொருத்தமற்றதாயிருக்கலாம். அவைகள் முதலில் சுயபாஷையையும் பின்னர் ஆங்கிலத்தையும் படிப்பிக்கவிரும்பலாம்" இதுஒரு இலங்கையருடைய அபிப்பிராயம்.

ஆங்கிலேயர் அபிப்பிராயம்

சங். ஆர். எஸ். டி. சேரம் அவர்களின் பேச்சு வெளிவந்திருக்கும் அதேபத்திரிகையின் இன்னொரு பக்கத்தில் திரு. ரீ. டபிள்யு. ஹெக்லி என்ற பிரபல ஆங்கிலேயரின் கடிதம் ஒன்று பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இவரும் தற்காலக் கல்வி முறையைத்தான் குறிப்பிட்டிருக்கிறார். யப்பானியரைப்போல ஒவ்வொருவரும் 7 வயது முதல் 14 வயதுவரையும் தங்கள் தங்கள் சுயபாஷைமூலமாகக் கல்வி பயிலவேண்டுமென்றும் அப்படிப் பயில்வதால் மாணவர் விஷயங்களை விரைவில் கற்றுக்கொள்ளுவார்களென்றும் சமீபத்தில் பிரபல சேர் சந்திராய் கூறிய வசனங்களை இவர் இலங்கைக் கல்வி அதிகாரிகளுக்கு அர்ப்பணஞ்செய்கிறார். பிரபல சேர் சந்திராயின் யோசனையை முற்றாக ஆதரிக்கிறார்.

இந்த இருவரின் யோசனைகளையும் நாம் 'ஈழகேசரி' வாசகர்களுக்கு அர்ப்பணஞ்செய்கிறோம்.

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டு விசாரணை—2.

பத்தைமேனிப் பள்ளர் கொலை

மணப்பேச்சால் பிணமான சங்கரன்

முருகனுக்கு ஆறுவருடக் கடுழியச் சிறை

யாழ்ப்பாணம், 8

அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த பத்தைமேனி என்னுமிடத்தில் அவ்வூர் வாசியாகிய இராமன்-முருகன் என்பவன் சென்ற பங்குனிமாதம் 29-ந் திகதி கதிரன்-சங்கரன் என்பவனுக்குப் பொல்லால் அடித்து அவனது மரணத்துக்குக் காரணமாயிருந்தானெனத் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி திரு. நிகால் குணசேகரா வும், எதிரியின் சார்பாக நியாயதுரந்தரர் திரு. சாம் ஏ. சபாபதியின் அனுசரணையின்பேரில் நியாவாதிகள் திரு. சி. சபாரத்தினம், திரு. எஸ். தம்பு துரைசுவாமி என்பவர்களும் விவாதித்தார்கள்.

முதலாவதாக, டாக்டர் கே. இராசா அவர்கள், இறந்தவனது காயத்தைப்பற்றியும், எதிரியின் காயத்தைப்பற்றியும் சாட்சியங் கூறினார். அதன்பின் பத்தைமேனி வாசியாகிய கறுவல்-கனகன் என்பவன் கூறிய சாட்சியத்தின் சாராம்சம் வருமாறு:—

'நானே டாக்குத்தருக்குச் சங்கரனின் பிரேதமெனக் குறிப்புக்காட்டினேன். இப்பொல்லை (காண்பித்து) நானே விதானையிடம் கொடுத்தேன்.'

யாழ்ப்பபாணம், 9

இறந்தவனின் தம்பியாகிய கதிரன்-கணபதி கூறிய சாட்சியத்தின் சாராம்சம் வருமாறு:—

"எதிரி எனது சகோதரியை மணமுடித்தவன். நாங்கள் எல்லோரும் ஒரே வளவில் வெவ்வேறு வீட்டில் வசிக்கிறோம். எதிரி தனக்கும் எனக்கும் சொந்தமான ஓர் பெண்ணை எனக்கு விவாகம் பேசினான். நான் சம்மதிக்கவுமில்லை; மறுக்கவுமில்லை. இந்த விவாகம் எனது சகோதரனாகிய இறந்தவனுக்கு விருப்பமில்லை. சம்பவம் நடந்தவன்று 7 மணியளவில் நான் மிளகாய்த் தோட்டத்தில் தண்ணீர் கட்டிக்கொண்டு நின்றேன். சிறிது தூரத்துக்கப்பால் இறந்தவன் புகையிலைத் தோட்டத்தில் தண்ணீர் கட்டினார். கிணற்றடியில் அண்ணனின் மனைவி அன்னமுத்துவும், அவளுடைய தம்பி சண்முகமும் நின்றார்கள். அந்நேரத்தில் எதிரி தனது வீட்டின் பிற்பக்கத்திலிருந்து கத்தி தீட்டிக்கொண்டிருந்தான். அப்போது இறந்தவன் என்னை நோக்கி நான் இருக்கத்தக்கதாக நீ மச்சானின் எண்ணத்துக்கோ கல்யாணம் முடிக்கப்போகிறாய் எனப் பேசினான். நான் மௌனமாக நின்றேன் அப்பெண் கூடாமையாலும் எதிரி சம்பந்தம் பேசியமையாலுமே இறந்தவன் சம்மதப்படாதிருந்தான். இதனைக்கேட்ட எதிரி தீட்டுத்தடியுடன் ஓடிவந்து நீ என்னடா சொல்லுகிறாய்? எனக்கேட்க, இறந்தவன் திரும்பிப்பார்த்தான். பின் இறந்தவன் மண்வெட்டியையும் எதிரி தீட்டுத்தடியையும் ஓங்கினார்கள். எதிரி மண்வெட்டியைத் தடியால் தட்டினார் மண்வெட்டி சறுகலாக தடி எதிரியினது தலையில்பிடித்தது மண்வெட்டியும் இறந்தவனது கையினின்றும் கீழே வீழ்ந்தது. பின்பு எதிரி இறந்தவனது தலையில் ஓர் அடியும் தோளில் ஒரு அடியுமாக இரண்டு அடி அடித்தான். அதன்பின் காயமடைந்தவன் கீழேவீழ்ந்தான். உடனே நான் எதிரியினது இடுப்பைக் கட்டிப்பிடித்து இழுத்து அப்பால் விட்டேன். எதிரி வீட்டைநோக்கித் தீட்டுத்தடியுடன் சென்றார். நான் அண்ணனைத் தூக்கிக்கொண்டு போனேன். சண்முகம் உதவிசெய்தான். இரண்டொரு மணி நேரத்தின்பின் விதானைவந்தார். நான் ஆஸ்பத்திரியில் வாக்குமூலங்கொடுத்தேன். மீண்டும் குறுக்கு விசாரணையின்போது சாட்சி முன்னுக்குப்பின் முரணாகவும் யாவரும் சிரிக்கக்கூடிய விதமாகவும் சாட்சியங் கூறினான்.

அதன்பின்னர் பத்தைமேனிப் பகுதிப் பொலிஸ்விதானை சின்னப்பு-நடராசா கூறியவற்றின் சாராம்சம்:-

"சம்பவம் நடைபெற்றவிடத்திற்கு நான் 7½ மணியளவில் போனபோது எதிரியினது முத்தத்தில் இறந்தவனையும் இம் மண்வெட்டியையும் தீட்டுத்தடியையும் கண்டேன். இறந்தவன் அறிவில்லாது கிடந்தமையால் உடனே மோட்டாரிரதத்தில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றேன். அங்கு கணபதியின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்தேன். திரும்பிவந்து மற்றையோரது வாக்குமூலங்களைப்பெற்றேன். சம்பவம் நடைபெற்றவிடத்தில் புகையிலைக்கன்றுகள் சிதறுண்டு கிடந்தன.

அதன்பின்பு பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் A. I. வைமன் சாட்சியங் கூறினார். இத்துடன் வழக்காளிபக்க விவாதம் முடிவுற்றது.

எதிரிபக்க விவாதம்

எதிரியாகிய இராமன்-முருகன் கூறிய வாக்குமூலத்தின் சாராம்சம் வருமாறு:—நான் சம்பவம் நடைபெற்றவன்றுகாலையில் கள்ளுச் சேகரஞ் செய்வதற்காகச் சென்றபோது, இறந்தவன் நீதானோடா கல்யாணம் பேசுகிறவன். எனப் பேசினான் உடனே நான் உனக்குச் சம்மதமானால் நீ செய்யலாம் ஆனால் வீணாக என்னைப் பேசக்கூடாது என்றேன். உடனே அவன் கையிலிருந்த மண்வெட்டியைக் கழட்டிவிட்டு ஒரேஒரு அடி அடித்தேன். தற்பாதுகாப்பின் நிமித்தமாகவே அப்படிச் செய்தேன். எதிரியைக் குறுக்குவிசாரணை செய்யப்பட்டது.

கொலைக்குற்ற மல்லாத இந்நிலைபரத்தில் எதிரி கொலைக்குற்றமல்லாத கைபிழைபாட்டுக் குற்றத்திற்குக் குற்றவாளியென ஒப்புக்கொண்டான். யூரிமார்களும் ஏகமனதாக அப்படியே தெரிவித்தனர்.

நீதியரசர் எதிரிக்கு 6 வருடக் கடுழியச் சிறைத்தண்டனைவிதித்தார்.

இல்லறத்தில் வாழ்பவன் பிரமசாரி, வானப்பிரஸ்தன், சன்னியாசி இம்மூவர்க்குந் துணையாவான்,

பலதும்

சுன்னாகத்தில்:—அத்துவக்காத்து திரு. நா. குமாரசிங்கமவர்களும் திரு. ச. அம்பிகைபாகன் பீ. ஏ; அவர்களும் விடுமுறையில் சுன்னாகத்தில் வந்து நிற்கிறார்கள்.

365 நாய்கள்:—கண்டியில் இரண்டு கிழமைக்குள் 365 நாய்கள் சுடப்பெற்றனவாம் ஒரேயிரவில் மாத்திரம் 40 நாய்கள் சுடுபட்டனவாம்.

2000, நபா களவு:— லுதியானாவென்னுமிடத்து உயர்தரநீதியரசரின் வீட்டில் 2000 ரூபாவும் நீதிமன்றத்துக்குரிய பிரதானமான உறுதிகளும் களவாடப்பட்டனவாம்.

பூகம்பம்:—டெல்கியில் தற்போதும் சில சல விடங்களில் பூகம்ப அதிர்ச்சி காணப்படுகின்றதாம். சென்ற கிழமை 27 வீடுகள் அதிர்ச்சியால் வீழ்ந்தனவாம்.

கோட்டு விடுமுறை:—தற்போது பொலிஸ் கோடுகளைத் தவிர மற்ற நீதிமன்றங்கள் ஆகஸ்ட் விடுதலைக்காக மூடப்பட்டிருக்கின்றன.

ஆனைத்துப்பாக்கி:—கண்டியில் ஆட்சி செய்த கடைசி அரசருடைய யானை உருவத்தைக் கொண்ட துப்பாக்கி தற்போது இங்கிலாந்தில் இலங்கை அரசினர் சார்பாக Dr. போல பீரிஸ் அவர்களால் 150 தங்கப்பவுனுக விலைக்கவாக்கப்பட்டிருக்கிறது.

இராசப்பிரதிநிதி:—இந்திய இராசப்பிரதிநிதியாக மனனர்பிரான் லின்லித்கோ பிரபுவை நியமனஞ் செய்திருக்கிறார். வரும் சித்திரைமாசம் வரையில் விலிங்டன் பிரபு கடமைபார்ப்பார்.

அதிசயமான தென்னை:—தாராபுரத்தில் ஓர் தென்னைமரத்தில் ஒன்பது புதிய மரங்கள் முளைத்திருக்கின்றனவாம். இது அபசகுனமென வெண்ணி சொந்தக்காரர் புதிய மரங்களை வெட்டிவிட்டபோதிலும் திரும்பவும் புதிதாக முளைத்திருக்கின்றனவாம்.

புதிய நீதிபதி:—கண்டியில் அத்துவக்காத்தாக வருந்த திரு. சீ. எஸ். இராசரத்தினமவர்கள் நுவரெலியா டிஸ்திறிக் நீதிபதியாக நியமனம் பெற்றிருக்கிறார்.

சட்டப்பரீட்சை:—சென்ற கிழமை வெளியிடப்பட்ட சட்டப்பரீட்சைப் பெறுபேற்றில், பிறக்டர் முதலாவது பரீட்சையில் 49 பேரும் அப்புக்காத்து முதலாவது பரீட்சையில் 5 பேரும் சித்தியெய்தியிருக்கிறார்கள்.

பொலிஸ்நீதிபதி:—யாழ்ப்பாணத்துக்குஇன்னுமொரு பொலிஸ் நீதிபதி நியமிக்கப்படுவாரெனவும், அவர் ஊர்காவற்றுறையிலும் மல்லாகத்திலும் கடமை பார்ப்பாரெனவுங் கருதப்படுகிறது.

கலம்பகம்

மலேரியா நிபுணராகிய கர்னல் ஸி. ஏ. ஜில் என்பவரின் அறிக்கை இம்மாதக் கடைசியில் வெளியிடப்படுமாம்.

o o o

கொஸ் கொடையைச் சேர்ந்த ஹீகெல்லே என்னுமிடத்தில் நடைபெற்ற பஸ் விபத்துக் காரணமாக மீம்பிபட ஹெலமச்சோ என்னும் பெண் உயிர்துறந்தாள். வேறு இருவர் காயமுற்றனராம்.

o o o

அரசாங்கசபைக் கூட்டத்தில் அனேக விஷயங்கள் முடிவு செய்யப்பட வேண்டியிருப்பதால், அடுத்த ஆண்டு வரவு-செலவுத்திட்ட விவாத காலத்திலும், அதற்குப் பின்னும் அரசாங்கசபைக் கூட்டத்தைத் தினமும் காலை 10 மணிமுதல் இரவு வெகு நேரம் வரை நடத்துவதென மந்திரி சபையார் முடிவு செய்திருக்கின்றனராம்.

o o o

1934 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 28-ந் உ களனி ஆற்றில் தலையில்லா முண்டம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது சம்பந்தமாகக் கொலை செய்தார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இரு எதிரிகளுள் 1-ம் எதிரியாகிய கொட்டியாவில்லையைச் சேர்ந்த கர்நேலிஸ் பெரேரா என்பவருக்கு மரணதண்டனை விதிக்கப்பெற்றது. 2-ம் எதிரி விடுதலை செய்யப்பட்டாராம்.

o o o

கல்கத்தா நகர சபையில் அங்கத்தவராகவிருந்த ஸ்ரீஜத் சரத் சந்திரபோஸ் அவர்கள் விடுதலையடைந்ததை முன்னிட்டு அவரை வரவேற்று உபசரிப்பதற்காக கல்கத்தா நகரசபையில் 1000 ரூபா அனுமதிக்கப்பட்டிருக்கிறதாம். o o

தற்போது பிறிட்டிஷ் காமன்ஸ் சபையில் தலைவராகவிருப்பவர் பொதுத் தேர்தல் நடக்கும்போது மீண்டும் போட்டியின்றித் தெரியப்பட வேண்டுமென்பது பிறிட்டிஷ் அரசியலில் ஒரு முறையாக இருந்துவருகிறது. ஆனால், இனி நிகழவிருக்கும் பொதுத் தேர்தலில் ஷை தலைவர் பதவிக்குத் தொழிற் கட்சியினர் போட்டியிட உத்தேசித்திருக்கின்றனராம்.

o o o

கொழும்பு-முகத்துவாரம் றெப்மாண்ட் வத்தையைச் சேர்ந்த மனுவேல் பர்ணாந்து என்னும் செம்படவன், மீன்பிடிக்கச் சென்றவிடத்தில் கடலில் விழுந்து உயிர்துறந்தார். இவரது பிரேதம் கொள்ளுப்பிட்டிக்கும், பம்பலப்பிட்டிக்குமிடையிலுள்ள கடற்கரையில் ஒதுக்கப்பட்டிருந்ததாம்.

o o o

மஞ்சுக்கோகரில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது காரணமாக 2200 பேர்வரையில் நீரில் மூழ்கி உயிர் துறந்தனராம்.

தற்போது இந்தியாவிலிருக்கும் சீமென்ற் கம்பனிகளை வாங்கிப் பம்பாயில் பெரிய ஒரு கம்பெனியை வைத்து நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டவருகிறதாம்.

o o o

பிறிட்டிஷ் பிற்போக்குக் கட்சியைச் சேர்ந்த திரு. சேட்சுஹில் லோயிட் பிரபு, சேர். ஹென்ரி பேஜ்கிராப்ட் என்பவர்கள் இந்தியாவுக்கு வந்து பாட்டியாலாமகாராசாவின் விருந்தினராக இருப்பார்களாம்.

o o o

இந்தியா, இலங்கை, பிலிப்பையின் தீவு முதலிய விடங்களில் குஷ்டரோக நிவாரண வேலைகள் எவ்விதம் நடைபெற்று வருகின்றன என்பதைப்பற்றி நேரில் அறியும் பொருட்டு எகிப்திய அரசினரால் அனுப்பப்பட்ட டாக்டர் முஸ்தபாகமால் என்பவர் தற்போது இலங்கைக்கு வந்து குஷ்டரோக வைத்தியசாலைகளைப் பார்வை செய்து வருகிறாராம்.

o o o

டோராடேன் என்னுமிடத்துக்கு 2000 மைல் தூரத்துக்கப்பால் பூகம்பம் ஏற்பட்டிருக்கிறதாக டோராடேன் என்னுமிடத்தி லுள்ள பூகம்பம்காட்டும் கருவி மூலம் தெரிந்ததாம்.

o o o

தூத்துக்குடி என்னுமிடத்தில் ஒரு பெண் நெற்றியில் கொம்புள்ள ஒரு ஆண் குழந்தையைப் பெற்றிருக்கிறாளாம்.

o o o

நாகூர் என்னுமிடத்தைச் சேர்ந்த ஷேக் இஸ்மாயில் ராவுத்தர் என்பவர் 126 வயது வரை சீவித்துச் சென்றமீ 30உ மரணமடைந்தாராம்.

o o o

தருமத்தின் பொருட்டுத் தெருத்தெருவாகச் சென்று கொடி விற்பனை செய்வதைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டமொன்று இயற்றப்பட்டிருக்கிறது. இச்சட்டம் அரசாங்க சபையினாதும், தேசாதிபதியினதும் சம்மதியின்பின் அனுசரணைக்குக் கொண்டுவரப்படும். இச்சட்டத்தை மீறுவோர் 50 ரூபாவுக்கு மேற்படாத அபராதமோ, 3 மாதச் சிறைவாசமோ விதிக்கப் பெறுவாராம்.

o o o

ரூஷிய பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்த நீர்மூழ்கிக் கப்பலொன்று கடற்பயிற்சி பெறும் 55 மாணவர்களுடன் பின்லந் குடாவில் பாறையில் மோதி மூழ்கியதால் அதிலுள்ள அனைவரும் உயிர்துறந்தனராம்.

மாணவனின் பரிதாபமரணம்

யாழ்ப்பாணம் 6.

சென்பற்றிக் கல்லூரி மாணவனும் ஆனைப்பந்தியைச்சேர்ந்த எல். துரைராசா என்பவரின் புதல்வருமான 17 வயதையுடைய பாலசிங்கம் சில மாணவர்களுடன் காங்கேசன்துறையில் ஓர் கட்டுமரத்தில செல்லும்போது கட்டுமரம் புரண்டதெனவும், மற்ற மாணவர்கள் நீரில் அமிழ்ந்தியபோதும் பின்னரும் கட்டுமரததைப்பிடித்து ஏறிக்கொண்டார்களெனவும், குறிக்கப்பட்ட இம்மாணவன் கரைக்கு நீந்திச் செல்லும்போது திரைகளால் மோதுண்டு மறைந்துவிட்டாரெனவும் அறிகின்றோம். பிரேதம் இதுவரை கண்டுபிடிக்க முயற்சித்தும் காணவில்லையெனவும் கூறப்படுகின்றது. ந. நி.

கூலிக்கு விட்டவருக்கு 50 ரூபா அபராதம்

வண்ணார்பண்ணை வாசியாகிய கார்த்திகேசு-நாகலிங்கம் என்பவர் சொந்தப்பாவிப்புக்கு உரியதான தனது மோட்டார்வண்டியைக் கூலிக்கு விட்டாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 50 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றார்.

எல்லோரும்

நட்க்ஷேத்திர
(ஷ்ட்டார்) அடையாளமுள்ள
உருக்கினாற் தயாரிக்கப்பெற்ற

(றிஜிஸ்ட்டேர் செய்யப்பட்டது)

பாத்திரங்களையே
வாங்குகிறார்கள்

இதனை வாங்குவது:
இதன் பெயருக்கும் மதிப்புக்குமன்று. ஆனால்,
இதன் நெடுங்காலப் பாவிப்புக்கும்
உயர்தரமான வேலைப்பாட்டிற்குமே!!
இலங்கையில் எவ்விடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லா விதமான இரும்பு, பித்தளைச்சாமான்களும் ஜர்மன் உள்ளூர் கைவாளிகளும், கேத்தல், தோசைக்கல் முதலிய மற்றும் இதர சாமான்களும் கிடைக்கும். விலை சகாயம்.
(178) 5-8-34—8-35.

இறக்குமதி தனி ஆட்களும் வியாபாரிகளும்:
அ. மு. சீ. சீனிமுகம்மது தம்பி
அன் பிறதர்ஸ்,
122, மூன்றும் குறுக்குத்தெரு,
கொழும்பு.

விளக்குமாற்றால் அடித்த சகோதரி நிலத்திலடித்துக் கொல்லப்பட்டாள்

கேகாலையைச்சேர்ந்த வடமெல்தேனிய வென்னுமிடத்தில் விஜயரத்தினா என்னுமொருவர் சென்ற திங்கட்கிழமை இரவு பத்துமணியளவில் வீட்டுக்கு வந்து தண்ணீர் கேட்டபோது அவனது சகோதரியாகிய நந்தாவதியென்னும் ஐந்துவயதுக் குழந்தை விளக்குமாற்றால் அவனுக்கு அடித்தாளெனவும் அவன் அக்குழந்தையின் செய்கையைப் பொறுத்துக் கொள்ளாது அவளைத்தூக்கி நிலத்திலடித்துக் கொலைசெய்தா னெனவும் ஓர் செய்தி கிடைத்திருக்கின்றது. நீதிபதி திரு. J. N. வேதவனமவர்கள் மரணவிசாரணையின்பின் எதிரியை விளக்கமறியலில் வைத்திருக்கும்படி கட்டளையிட்டு வழக்கை 9.ந் தேதிக்குத் தவணையிட்டாராம்.

இலங்கை ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி (யாழ்ப்பாண)ப் பரீட்சைப்பேறு. (1935)

Pr. A. M. பரீட்சை

1. K. நடராசா (3-ம் பிரிவு)
2. S. S. நாதன் ,,
3. A.J. இராஜேந்திரம் (3-ம் பிரிவு)

S. A. M. பரீட்சை

1. K. கந்தையா (2-ம் பிரிவு)
2. S. V. சீனிவாசகம் (2-ம் பிரிவு)
3. V. விஜயரத்தினம் ,,
4. C. கந்தையா (3-ம் பிரிவு)
5. A. கிருஷ்ணர் ,,
6. K. தர்மலிங்கம் ,,

I. A. M. பரீட்சை

1. K. பொன்னம்பலம் (1-ம் பிரிவு)
2. J. நவரத்தினம் (3-ம் பிரிவு)
3. K. குமாரசுவாமி ,,

வட்டு-சுப்ரமணிய வித்தியாசாலையின் கைத்தொழிற் பாடசாலைத் திறப்புவிழாவும் பெற்றோர்தினக்கொண்டாட்டமும்

நிகழும் யுவஹு ஆவணி மாதம் 30உ (14-8-35) புதன்கிழமை பி. ப. 4 மணி 30 நிமிஷம் தொடக்கம் கைத்தொழிற்பாடசாலைத் திறப்புவிழாவும் பெற்றோர்தினக் கொண்டாட்டமும் நடைபெறும்.

அத்தருணம் ஸ்ரீமான் வை. துரைசுவாமி பி. ஏ. அவர்கள் கைத்தொழிற் பாடசாலையைத் திறந்துவைப்பார். கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபர் அவர்களின் தலைமையின்கீழ் பெற்றோர்தினக்கொண்டாட்டம் நிகழ்த்தப்பெறும். திரு. எம். தம்பிப்பிள்ளை தலைமைத் தமிழ் வித்தியாதரிசி அவர்கள் "நாட்டுச் சீவியக் கல்விமுறை" என்னும்விஷயத்திற் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

விளம்பரம்

சிரேஷ்ட பாடசாலைத் தராதரபத்திரவகுப்பு (S.S.C.)

சுன்னாகம் மயிலணிச் சைவவித்தியாசாலையில், இவ்வகுப்பிற் சேர்ந்து படிக்க விரும்பும் மாணவர்கள் தங்கள் விண்ணப்பப் பத்திரங்களை 19-8-35க்கு முன் ஷை பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு அனுப்பற்பாலர். இவ்வகுப்பினர்க்கு யா. ஆ. தி. பா. வி. சங்கப் பிரவேச பரீட்சைக்குரிய பாடங்களும் கற்பிக்கப்படும். விடுதியாயிருந்து கற்க விரும்பும் மாணவர்கட்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்படும்.

பொ. பொன்னம்பலம்
தலைமை ஆசிரியர்
மயிலணிச்சைவவித்தியாசாலை,
சுன்னாகம், 5-8-35.
(20) 11-8-35—1

துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு, மில்வாழ்வா னென்பான் றுணை.

சிறுவர் பகுதி

சேர். உவால்றர் ரூலி

சி. த.

(முற்றொடர்)

மேரிராணியின் மகனாகிய ஸ்கொத்லாந்துதேச மன்னன் ஆறாவது ஜேம்ஸ் என்பவன் இங்கிலாந்து தேசத்துக்கு முதலாவது ஜேம்சாக அரசனானான். இவன் ரூலிமீது வெறுப்பே காட்டினான். ரூலியுமோ வணங்காத்தலையனாக விருந்தான். ரூலியுடைய பணத்திலும் செல்வாக்கிலும் பொறாமைகொண்ட பலர் அவருக்கு விரோதமாக அரசினரிடம் கோள் மூட்டினார்கள்.

ஜேம்ஸ் அரசனான சில மாதங்களுக்குப்பின்; ராசதுரோகமான சதியாலோசனையி லீடுபட்டாரென்ற குற்றம் ரூலிமீது சுமத்தப்பட்டது. விளக்கம் நடந்தபோது குற்றத்தை ருசுப்படுத்தக்கூடிய சாட்சிகள் ஒன்றும் கிடைக்கவில்லை. என்றாலும் ரூலி குற்றவாளியாகவே தீர்மானிக்கப்பட்டுக் கொலைத்தண்டனைவிதிக்கப்பெற்றான். ஆனால் ஜேம்ஸ் அரசன் அத்தீர்ப்பை வாசிப்பதற்குத்தயங்கி, அவரை லண்டன்கோபுர மறியற்சாலைக் கனுப்பினான். அங்கே ரூலி 13 வருடங்கள் இருந்தார். சிறைச்சாலையில் ரூலி நல்லபயனையுடைய வேலைகள் செய்தார். விஞ்ஞானசாஸ்திரம், வைத்திய சாஸ்திரம் முதலியவற்றை யங்கே நன்றாகக்கற்றார். கடல்நீரைச் சுத்தநீராக்கும் வகையையு மங்கே கண்டுபிடித்தார். யுத்தத்தைப்பற்றியும் நூல்கள் எழுதினார். கப்பல் கட்டுதலைப்பற்றியும் நூல்கள் வெளியிட்டார். எல்லாராலும் வியந்து பாராட்டப்பெற்ற உலக சரித்திரத்தையும் வெளியிட்டார். கோபுரத்திலிருக்கும்போது தான் விடுதலையடைதற்குப் பலவாறு முயன்றார். தன்னை விடுதலைபண்ணிவிட்டால் தான் கனடா தேசத்துக்குப் போய் மட்டற்ற பொன் கொண்டுவருவேனென்றும், தவறினால் தன்னை நடுக்கடலுக்குள் எறியலாமென்றும சபதங்கூறினார். தான் வெற்றியடைவேனென்ற நம்பிக்கை யவருக் கவ்வளவு திடமாக இருந்தது.

கடைசியாக 1616-ம் ஆண்டில் ஜேம்ஸ் ரூலியை விடுதலைசெய்தான். கனடாதேசத்துக்குப் போகும்படி விடுத்தான். ஸ்பானிய அரசனோடு சிநேகபான்மையி லிருக்கவிரும்பி, ஸ்பானியக் கப்பல்களைத் தாக்கக்கூடாதென்று கடுமையான கட்டளையும் அரசனால் இடப்பட்டது. ரூலி இதற்குடன்பட்டார்.

கயனாவை யடைந்ததும், ரூலி நோய்வாய்ப்பட்டார். ஆகவே அவரது ஆட்கள் அவரையின்றியே உள்நாடேகினர். இவர்கள் போகும்போது ஸ்பானியராற் றாக்கப்பட்டனர். ரூலியுடைய மகன் கொலைசெய்யப்பட்டான். ஆகவே ஆங்கிலேயரும் ஸ்பானியரைத தாக்கினர். ரூலியுடைய ஆட்கள் ஒரு சுரங்கத்தையும் கண்டுபிடிக்கவில்லை. எனவே ரூலி அவர்களைய் மழைத்துக்கொண்டு துக்கத்துடன் இங்கிலாந்து திரும்பினர். அவர் மறுபடியும் கோபுரத்திலடைக்கப்பட்டனர். தங்களுக்குச் செய்யப்பட்ட குறும்புக்காக ரூலியைக் கொலை செய்ய வேண்டுமென்று ஸ்பானியர் கேட்டனர். ஆகவேயொரு விசாரணை நடந்தது. ரூலிமீது குற்றஞ்சாட்ட முடியவில்லை. எனினும், ஸ்பானியரைத் திருப்திசெய்ய விரும்பிய ஜேம்ஸ் பழைய குற்றத்தையெடுத்துக் காட்டிக் கொலைத் தண்டம் விதித்தான். ரூலியின் விடுதலைக்காக ஜேம்சின் மனைவியும் பாடுபட்டாள். ரூலியின் மனைவி மக்களும் மனுப் பத்திரங்கள் அனுப்பினர். ஒன்றும் வாய்க்கவில்லை. ஒரு ஐப்பசி மாதம் ரூலி தூக்குமரத்துக்கு அழைத்துக் கொண்டு செல்லப்பட்டனர். ரூலி மிகவும் உற்சாகத்தோடும் குதூகலத்தோடும் நடந்து சென்றார். பெருஞ் சனத்திரள் இக்காட்சியைக்காணக் குழுமியிருந்தது. தூக்குமர மேடையிலேறியதும் ரூலி சனங்களைநோக்கி, "அன்பர்களே நீங்கள் எனக்காகச் செபம்பண்ணுங்கள். நான் ஒரு நீண்டபிரயாணத்திற்போகின்றேன். உங்களுக்குப் பிரியாவிடை கூறுகின்றேன்," என்று கூறினார். பின்பு கோடரியை வரவழைத்து அதன் ஓரத்தைத் தடவிப்பார்த்துவிட்டு, இது நல்லதொரு கூரான மருந்துதான். இது எல்லா நோய்களையுங் குணமாக்கவல்லது; என்று கூறினார். கண்களை மூடிக்கட்டுவதையவர் வெறுத்தார். முழந்தாளில் நின்றுகொண்டு வெட்டும்படி சமிக்கைகொடுத்தார். கொலைபாளி சிறிது தாமதித்தான். "நீ ஏன் பயப்படுகிறாய்? வெட்டு வெட்டு," என்று ரூலி உரத்த சத்தமாகச் சொன்னார். பின்பு கொலையாளி வெட்டினான். இரண்டுவெட்டோடு உடல்வேறு தலைவேறாய் விட்டன. இங்ஙனமே, ரூலி துணிவோடு மரணத்தையடைந்தார். அவர் ஒரு பெரிய தளபதியாகவும், ஒரு நல்ல யுத்தவீரனாகவும், ஒரு விவேகமுள்ள புத்திசாலியாகவும், புலவனாகவும், உரைநூலாசிரியனாகவும் விளங்கினார்.

ரூலியைப்பற்றிய ஒரு சங்கதி நினைவில் வைத்திருத்தல்வேண்டும். அவர்தான் குடியேற்றநாட்டு சக்ராதிபத்தியத்தை நிறுவியவர். இந்த முயற்சியில் அவர் சித்தியடையா விட்டாலும், அவர்பின்வந்தோர் அவரது எண்ணங்களைப் பூர்த்திசெய்து அவர் கனாக்கண்டுகொண்டிருந்த சக்கிராதிபத்தியத்தை யுண்மையானதாக்கினர்.

2 ரூத்தல் அபினுக்கு 1000 ரூபா

புத்தூர் வாசியாகிய இலகர்-கந்தையா என்பவர் 2 ரூத்தல் அபினுடன் சுன்னாகம் புகைரதஸ்தானத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் மார்க்கத்தில் ஆனையிறவில் மதுபரிசோதகரால் கைது செய்யப்பட்டவிடத்துத் தனது உண்மையான பெயரைக் கொடாது இராமலிங்கம்—கணபதிப்பிள்ளை எனப் பொய்ப் பெயர் கொடுத்தார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டு 1000 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றார். அபராதமிறுக்கத் தவறினால் 3 மாதக் கடுஞ் சிறைத் தண்டனை யனுபவிக்கவேண்டுமாம்.

—நமதுநிருபர்.

உன் ஆடைகள் எப்பொழுதும் சுத்தமாயும் புதிதாகவும் காணப்படுகிறதே, அவைகளைப் பார்த்தால் எனக்கு மெத்தவும் ஸந்தோஷம். வண்ணானிடம் அடிக்கடி அனுப்புவதினாலேயோ?

"உண்மையே! ஆனால் ஸன்லைட் ஸோப்பினாலேயே துணிகளை வெளுக்கும்படி சொல்லியிருக்கிறேன். ஸன்லைட் சோப்பில் வெளுக்கும் தன்மை அதிகமாக இருப்பதினால்தான் அவ்வளவு நன்றாகத் துணிகளை பரிசுத்தமாக்குகிறது."





ஒருமாதம் சென்றபின்:

"நல்ல புத்திமதி புகட்டினாய். என் வண்ணானும் ஸன்லைட்டையே இப்பொழுது உபயோகிக்கிறான். துணிகள் முன்னிலும் பன்மடங்கு வெண்மையாக இருக்கின்றன."

"இன்னும் உன் ஆடைகள் நீடித்தகாலம் உழைக்கும். ஸன்லைட் துணிகளைக் கெடுப்பதில்லை."

இப்பொழுது அவள் ஆடைகள் ஸன்லைட் ஸோப்பினாலேயே வெளுக்கப்படுகின்றன.

ஸன்லைட்டின் சிறந்த வெளுக்கும் தன்மையால் துணிகள் மிகவும் நன்றாக சலவை செய்யப்படுகின்றன. அதனின்றும் புறப்படும் அபரிமிதமான வெள்ளிய நுரை வெகு சுலபமாக வெகு நாள்பட்ட அழுக்கையும் துவைக்கவேண்டிய சிரமமில்லாமலே வெளிப்படுத்திவிடும். ஸன்லைட் ஸோப்பினால் வெளுக்கப்படும் துணிகள் சாயம் மாறுவதில்லை. அழுக்கும் அறவே ஒழிந்துவிடும். துணிகளுக்கு ஓர்விதமான மினுமினுப்பும் உண்டாகிறது. எல்லாவிதமான பொருள்களையும் ஸன்லைட்டால் சுத்தம் செய்யலாம், ஒவ்வொரு வீட்டிலும் எப்பொழுதும் ஒரு பெட்டியாவது இருக்கவேண்டியது அவசியம். அதன் விலையும் மலிவு!

SUNLIGHT SOAP

1-S 1108-288 A

LEVER BROTHERS LIMITED, PORT SUNLIGHT, ENGLAND

TAMIL

பெண்கள் பகுதி

ஓடியாடித்திரியும் வயதைப் பிள்ளைகள் அடைந்தபோது—அதாவது இரண்டு வயது தொடங்கி ஆறுவயது வரையும்—தாய்மார் பிள்ளைகளைக் காப்பாற்றுவதில் அதிகநேரத்தைச் செலவிடவேண்டியிருக்கிறது. அப்படித்தான் பிள்ளைகள் கவனிக்கப்பட்டும் அப்பிள்ளைகள் ஏதாவது கல்வியறிவைத் தாய்மார்களிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்களா? இல்லையே. இப்பருவம் பிள்ளைகளுக்கு மிக விசேஷமான காலமாகும். பிள்ளைகள் விஷயங்களை விளங்க ஆரம்பிக்குங்காலம் இதுவே. விஷயாட்டுடன் விஷயங்களையும் பிள்ளைகள் அறிகின்றனர். இவ்வயதினையுடைய பிள்ளைகட்கு அமரிக்காவில் அநேக வித்தியாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இப்பள்ளிக்கூடம் தாய்மாரின் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்றன. தாய்மார் தமது முறைப்படி இவைகளை வந்து மேற்பார்வைசெய்வர்.

* * *

இவ் வித்தியாசாலைகளில் கற்பிக்கப்படுவது யாது? விளையாட்டுச் சாமான்கள் அநேகம் இங்கே சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. படங்கீறுதற்கு பலநிறச் சோக்குகள்உள. இடைநேரங்களில் பிள்ளைகட்கு பால்குடிக்கக் கொடுக்கப்படும். சிறிது நேரம் கம்பளங்களில் பிள்ளைகள் படுத்திருந்து ஆறுதலைப் பெறுவர். சிறுபோது விளையாட்டும் பழக்கப்படும். கதைப்பாடங்கள் கற்பிக்கப்படும். பிள்ளைகட்கு ஏற்ற மேசை கதிரைகள் பாவிக்கப்படும். இவ்வித வித்தியாசாலைகளால் பிள்ளைகள் அடையும் பயன் சிறிதன்று.

* * *

லண்டன் நகரின் நகர பரிபாலன சங்கத்தின் கீழ் உத்தியோகம் வகிக்கும் பெண்கள் விவாகமானவுடன் தமது பதவியினின்று விலகவேண்டுமென்ற பிரமாணம் இதுவரையும் இருந்துவந்தது. இப்போது அச்சட்டம் நீக்கப்பட்டது. பெண்கள் விவாகமானபின்னும் உத்தியோகத்தைநடத்த உத்தரவு கொடுக்கப்பட லாயினர். இச்சட்டத்தை சென்ற பன்னிரண்டுவருடமாக நீக்கமுயன்றும் இப்போதுதான் சித்திவந்தெய்தியது. வித்தியாசாலைகளிலென்ன மற்றும் உத்தியோகங்களுக்கென்ன விவாகமானவர்கள் ஆசிரியராகவும் உத்தியோகத்தராகவு மிருப்பதால் பெருநன்மை ஏற்படுமாம்.

* * *

கல்வி, பெண்களை உயர்ந்தநிலைக்குக் கொண்டுவரும் என எத்தனையோ பேரறிஞர் கூறியுள்ளார். இந்தியாவில் பெண்கள் கல்விமுறை, ஐரோப்பியரைப் பின்பற்றியே வகுக்கப்பட்டிருக்கிறது. இந்தியரின் அரசியல்முறை, சமுதாயவாழ்க்கை, பொருளாதாரமுறை என்பவற்றைச் சிறிதும் நோக்காது கண்மூடித்தனமாக அந்நியநாட்டவரைப் பின்பற்றினால் தீமைகளே வந்தெய்தும். இவ்விஷயத்தை நன்கு ஆராய்ந்து நடத்தப்படும் கல்லிக்கழகங்கள் இந்தியாவில் மிகச்சிலவே. தற்போதைய கல்விமுறை சிறிதும் உபயோக மற்றதாய் முடிகின்றது. தேசத்தின் விருத்திக்கிசையக் கற்றுக் கொடுக்கப்படாத கல்வியால் என்ன பிரயோசனம்?

* * *

மிக்க கியாதி பெற்ற ஒக்ஸ்போட் சர்வகலாசாலையில் எத்தனையோபட்டங்கள் பெண்களுக்குஅளிக்கப்படாதிருந்தது. இப்போது மேற்படி சர்வகலாசாலையினர் தாம் அளிக்கும் எல்லாப் பட்டங்களையும் பெண்களும்பெறும் உரிமையுடையரென முடிவுசெய்யப்பட்டுளது.

* * *

கீழைத் தேசங்கள் மேனிலையை அடையவேண்டுமென விரும்பும் எவரும் பெண்கள் ஏற்ற உயர்ந்தகல்வியைக் கற்கவேண்டுமென்பதை மறுக்கமாட்டார். பழைய நாட்களில் உயர் நிலையிலிருந்த இந்தியர் கீழ்நிலையைத் தற்போது அடைந்தமைக்குக் காரணம் யாது? பெண்களின் கல்வியைப் பராமுகமாகவிட்டதினாலேயே. பெண்கள் கீழ்நிலையிலிருக்க உயர்ந்த பதவியை அடைவதென்பது ஒருபோதும் முடியாத காரியம். தேசத்தின விருத்தியை நாடிப் பெண்கள் செய்யவேண்டிய தொண்டுகள் பலவுள. * * *

ஐரோப்பாவில் பெண்கள் நிலை மிகப் பரிதாபத்துக்கிடமாயிருக்கிறதாம். பிரதானமாக ஜேர்மனி, இத்தாலி, அவுஸ்திறியா என்னும் நாடுகளில் பெண்களின் நிலைமையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டது.

இத்தாலியில் முற்காலத்தில் பெண்கள் சிறப்பாக மதிக்கப்பட்டுவந்தனர். இப்போது அடிமைகளாகவும் அறிவிற் குறைந்தவராகவும் கவனிக்கப்படுகின்றனர். பெண்களது பெருமையைக் காப்பாற்ற இத்தாலியில் முன்னிருந்த பாதுகாப்புகள் யாவும் முஸோலினியின் ஆதிக்கத்துக்குக்கீழ் நீங்கிவிட்டன. பெண்கள் தமது சுதந்தரத்தையும் உரிமைகளையும் இழந்துவிட்டனர். பெண்களுக்கு இன்னல்செய்தோர்க்கு இதுவரையும் விதிக்கப்பட்ட தண்டனை நீக்கப்பட்டது.

ஜேர்மனியிலோ விஷயங்கள் இன்னும் பழுதான நிலையையடைந்துவிட்டன. பெண்களுக்கு அரசியலில் சிறிதும் சுதந்திரம் கிடையாது. அரசாங்க உத்தியோகங்களிலிருந்து துரத்தப்பட்டனர். இற்றைக்கு 300 வருடங்கட்கு முன் பெண்கள் ஜேர்மனியில் எவ்வாறிருந்தனரோ அந்த நிலையில் இப்போதும் விடப்பட்டுள்ளார்.

கடிதம்

குழந்தைகளுக்குப் பால் கட்டுதல்

'ஈழகேசரி'ப் பத்திராசிரியர் அவர்கட்கு:

ஐயா,

ஒருபிள்ளை பிறந்து மூன்றுமாதங்களுக்குள் பால்கட்டப்பட வேண்டுமென்னும பிரமாணமிருப்பதை நாமனைவருமறிவோம். ஆனால் அநேக பிள்ளைகளுக்கு மூன்றும்மாதம் முடிவதற்குள் பால்கட்டுப்படுவதில்லை யென்பதும் எம்மவருள் அநேகருக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். அரசாட்சியார் மூன்றுமாதப் பிளளைகளெல்லாருக்கும் பால் கட்டுவித்துப்போடும்படி தலைமைக்காரரை எவ்வளவோ கடுமையாக நெருக்குகிறார்களென்று கேள்விப்படுகிறோம். தலைமைக்காரர் பெற்றாரைத் தங்கள் பிள்ளைகளுக்கு உரிய காலத்திலே பால் கட்டுவித்துப் போடும்படி நெருக்கும்பொழுது, அவர்கள் முன்பிறந்த தமது பிளளைகளுக்கு அரசாட்சியாருடைய பிரமாணத்துக்குப் பயந்து பால் கட்டுவித்ததன்பயனால் தாம்பட்ட கஷ்டங்களையும் பிள்ளைகளடைந்த அவஸ்தைகளையும் நினைத்து ஏதோ சில நியாயங்கள் சொல்லி ஒரு வயதுமுடியும் வரைக்குமாது தமது பிள்ளைகளுக்குப் பால கட்டுவிக்காமல் பின்போடுவது எவருக்கும் தெரிந்தவிஷயம். பால்கட்டுவது எவ்வளவோ விசேஷமான காரியமென்று மற்றவர்களுக்குக் கூறும் எத்தனையோ கல்விமான்கள்கூடத் தந்தரமாய்த் தமது பிள்ளைகளுக்குப் பால்கட்டுவிக்கும் காலத்தைப பின்போட்டு வருகிறார்கள். அவர்கள் அப்படிச் செயவதற்குப் போதிய நியாயமுண்டு.

பால் கட்டுபவர்களின் கவலையினத்தாலோ அவர்கள்பாவிக்கும் பாலின பிழையாலோ அல்லது வேறேதாவது நியாயம்பற்றியோ இந்த நாட்களில் பால்கட்டப்படும் பிள்ளைகளிற் சிலர், பால்கட்டி இரண்டு மூன்று நாட்களின்பின் தொடக்கம் சிலவேளை கிழமைக்கணக்காகப்படும் கஷ்டமும் அவஸ்தையும் விபரிக்கும் தரத்தன்று. கடுங்காய்ச்சலோடு, பால்கட்டின இடங்களிலும் பக்கங்களிலும் பொங்கி அவிந்து கைமுழுவதும் வீங்கி, பிள்ளைகள் வலிப்பு நோ முதலியவைகளினால் வருந்துவதைப் பார்த்துச்சகிக்க முடியாமலிருக்கிறது. சிலர் இந்தக்கஷ்டங்களைப்பற்றி முன்னரே அறிந்திருக்கிறபடியால், பால்கட்டுவித்து முடிந்தவுடன் வீட்டுக்குப் போகும் பொழுதே எலுமிச்சமபுளியைப் பால்கட்டின இடங்களுக்கு நன்றாய்த் தேய்த்துப்பூசிப் பச்சைத்தண்ணீரால் கழுவிவருகிறார்கள். இப்படிச் செய்வதினால் பிள்ளைகளுக்குக் காய்ச்சல் வருவதுமில்லை. பொங்கி அவிந்து கை வீங்கித் தொல்லைப்படுத்துவதுமில்லை. ஆனால் அப்படிப்பட்ட பிள்ளைகள் பால்கட்டுவதினால் அடையத்தகும் பயனைப் பெறுவதில்லை. சில பிள்ளைகள் பால்கட்டின இடத்தில் பொங்கி அவிந்து வரும்பொழுது, இரவில் அல்லது பகலில் தகப்பன் தாய் அல்லது வேறுயாரும் பக்கத்திலில்லாத பொழுது பால்கட்டின இடங்களில் தாங்கள் விரும்பியபடி மிகவும் கடிமையாகக் கைநகங்களால் சொறிந்து விறாண்டி விடுகிறார்கள். இப்படிச் செய்வதனாலும், தங்களுடைய கஷ்டத்தையும பிள்ளைகளுடைய வருத்தத்தையும் நீக்குவதற்காகச் சிலபெற்றார் அறிவீனங்காரணமாகப் பால்கட்டிப் பொங்கிவரும்பொழுது சில நேரங்களில் இலைகளையும் வேறுசில கூடாத பொருள்களையும் சேர்த்தரைத்துப் பூசுவதனாலும் பிள்ளைகளுக்கு முன்னிருந்த வருத்தம் பன்மடங்கதிகமாகின்றது.

தலைமைக்காரர் அரசாட்சியாரின் நெருக்கத்தினால் பால்கட்டாத பிள்ளைகளைத் தேடிப்பிடித்து அவர்களுடைய பெற்றாருக்குக் குற்றம் கொடுபடுமென்று பயமுறுத்திப் பால்கட்டுவித்துப்போடப் பகீரதப்பிரயத்தனம் செய்கிறார்கள். ஆனால், பால்கட்டுவது என்னத்திற்காக, அதனாலடையத்தகும் பயன்களென்ன, பால்கட்டின பிள்ளைகளுக்குக் காய்ச்சல் முதலிய வருத்தங்கள் வருவதற்கு நியாயமென்ன, வந்தால் செய்யவேண்டியதென்ன, பால்கட்டின இடங்களிலும் பக்கங்களிலும் பொங்கி அவிந்து கஷ்டப்படுத்தினால் அதற்குச செய்யவேண்டியதென்ன என்னும் இன்னோரன்ன விஷயங்களைக் குறித்துப் பால்கட்டுபவர்கள் அல்லது வைத்திய நிபுணர்களுடைய உதவியோடு பெற்றாருக்குக் ஒருவிதமான குறிப்புகளும் கூறுவதைபபற்றி நாம் கேள்விபபடவில்லை. அது அவர்களுடைய கடமையல்லாமலிருந்தாலும பால்கட்டப்படும் பிள்ளைகள் படும் அவஸ்தைகளைப் பற்றிக் காலத்திற்குக் காலம் அவர்கள் அரசாட்சியாருககு அறிவித்தால் தேவையான ஒழுங்குகள் நிச்சயமாய்ச் செய்யப்படும்.

பால்கட்டும் விஷயத்தைப்பற்றி நாமறியவேண்டிய அனைத்தையும் பூரணமாக அறிந்தவர்களைக்கொண்டு அரசாட்சியார் துண்டுப்புத்தகங்கள் அச்சிடுவித்து, இந்த விஷயத்தில் அறியாமைநிறைந்த இவ்வூர்ச் சனங்களுக்குக் கொடுப்பது பெரும் நன்மை பயத்தற்கு ஏதுவாகும். அனேக படித்தவர்கள்கூடப் பால்கட்டும் விஷயத்தைப் பற்றி அறியவேண்டியவற்றுள் ஒரு சிலவற்றையாவது அறியாதவர்களாயிருக்கின்றார்களென்பதை அரசாட்சியார் மறந்து போகக்கூடாது. சனங்களுக்குப் பால்கட்டும் விஷயத்தைப்பற்றித் தெரியாமலிருப்பது நூதனமல்ல. ஏனென்றால் பொது சனங்களுக்குப் பிரயோசனப்படத்தக்கதாகப் பால்கட்டும் விஷயத்தைப்பற்றி இதுவரையும் நாமறிந்தவரையில் ஒரு புத்தகவாயிலாகவாவது பத்திரிகைமூலமாகவாவது விஷயத்தை நன்றாயறிந்தவர்கள் எழுதினதாயில்லை. இதன்பயனாகவே அனேக பிள்ளைகள் பால் கட்டி 2, 3 நாட்களின் பின்தொடக்கம் சிலவேளை கிழமைக்கணக்காய் அல்லது மாதக்கணக்காய் அல்லும்பகலும் அவஸ்தைப்படுகிறார்கள். குழந்தைகள் அவஸ்தைப்பட்டால் அது பெற்றோருக்கு மவஸ்தையாகவே முடியுமென்பது சொல்லாமலே விளங்கும். தலைமைக்காரருடைய நிலையும் பரிதபிக்கத்தக்கதே. அவர்களுடைய நிலை மத்தளத்துக்கு ஒப்பிடக்கூடியதாயிருக்கிறது. ஒருபக்கத்தில் அரசாட்சியாருடைய நெருக்கடியையும் மற்றப்பக்கத்தில் ஊரவர்களுடைய ஏச்சு, சாபம் முதலியவைகளையும் பொறுத்துக்கொண்டு தங்களுடைய கடமைகளையும் தவறாது செய்யவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

பிறந்து 3 மாதத்திற்குள் பிள்ளைகளுக்குப் பால்கட்டுவித்துப்போடவேண்டுமென்னும் பிரமாணம் மிகவும் கொரேமானதும் அவசியமற்றதுமென்பதே அனேகருடைய அபிப்பிராயம். அத்துடன், அனுகூலமாய் 2 இடத்தில்மாத்திரம் பால்கட்டினால் போதுமானதென்பது அனேக வைத்திய நிபுணர்களுடைய துணிபு. அப்படியிருக்கவும் ஒரே கையில் 4 இடத்தில் அல்லது 2 கையிலும் ஒவ்வொன்றிலும் 2 இடத்தில் பால் கட்டுவது ஒரு சிறிதேனும் அவசியமற்ற செய்கையாகும். தொற்றுநோய்கள் இவ்வூரில் பரம்பும் காலங்களில் 50 வருடங்களுக்கு முன் பால் கட்டுவித்தவர்களுக்குக் கூட 2 இடங்களில்மாத்திரம் பால்கட்டுவது போதுமானதென்று சொல்லிக் கட்டுவது நாமனைவரும் நன்கறிந்த விஷயம். அப்படியிருக்கவும் பால்மணம் மாறாத பாலர்களுக்கு 4 இடங்களில் பால்கட்டி அவஸ்தைப்படச்செய்வது காருண்யமற்ற செயலாகும். அரசாட்சியார் இந்த விஷயத்தில் போதிய கவனம்செலுத்தி ஒருகையில் 2 இடங்களில்மாத்திரம் கவனமாகக் குழந்தைகட்குப் பால் கட்டினாற் போதுமானதென்று பால் கட்டுபவர்களுக்கு அறிவித்தல் அவசியமாகும். அதுவுமன்றிக் குழந்தைகட்குப் பால்கட்டவேண்டிய வயதையும் 3 மாசத்திற்குள் செய்யப்படவேண்டுமென்னும் பிரமாணத்தை பின்னும் சில மாதங்களாவது சென்றபின் பால்கட்டுவிக்கலாமென்பதாய் மாற்றுவது அரசாட்சியாருக்குக் குழந்தைகளிலிருக்கும் அனுதாபத்திற்குப் பெரும் அறிகுறியாகும்.

சிறுபிள்ளைகளுக்குப் பால்கட்டுவது நன்னோக்கங் கருதியேயென்பது மறுக்கொணா உண்மை. ஆனால் பால்கட்டும் வயது கட்டவேண்டிய முறை, பால் கட்டியபின் பெற்றார் அல்லது பாதுகாவலர் கவனிக்க வேண்டிய விதிகள் ஆதிய விஷயங்களில் அரசாட்சியார் இனிமேலாவது போதிய சிரத்தையெடுத்துச் சனங்களுக்கு உதவி செய்வார்களென்பது எமது நம்பிக்கையாகும். அப்படிச் செய்வதால் அரசாட்சியார் எத்தனையோ குழந்தைகளின் அவஸ்தைகளை அகற்றுபவர்களாகவும், பெற்றோரின் கஷ்டங்களை நீக்குபவர்களாகவும் கருதப்படுவதுமல்லாமல் அவர்களுடைய துதியையும் மனமார்ந்த நன்றியையும் பெறுபவர்களுமாவார்கள்.

உண்மை விளம்பி,
தெல்லிப்பழை

6-8-35.

இந்திய வங்கி லிமிற்றெட்
THE INDIAN BANK Ltd.
[Incorperated in British India in 1907]

ஷை வங்கியின் கிளை ஸ்தாபனம் ஒன்று சென்ற யூன்மீ 13உ வியாழக்கிழமைதொடக்கம் யாழ்ப்பாணம் பெரியகடையில் எஸ். கே. கந்தையாச் செட்டியார் கட்டட மேல்மாடியில் ஸ்தாபிக்கப்பட்டுச் செவ்வனே நடைபெற்று வருகிறதென்பதை யாவருக்குந் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

(2) 2-6-35.

அறிவித்தல்

தமது தேட்டத்தைக் காசாக வைத்திருந்து விரையஞ்செய்பவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

கிளிநொச்சியில் நீர்ப்பாய்ச்சலும் மற்றும் சகல வளங்களும் அமையப் பெற்ற 150 ஏக்கர் நெறகாணி விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. ஒருமித்தோ அன்றி 10 ஏக்கர் துண்டுகளாகவோ விற்கப்படும். முழு விபரத்திற்கும் எழுதவும்.

No. 30, C/o The Eelakesari,
Chunnakam.

(15) 4-8-35—2

நூற்றொகுப்பாசிரியர்களின் திருவிளையாடல்கள்

(திரு. வீ. நடராசன் அவர்கள்,
இயற்றமிழ்ப்போதகாசிரியன், அ. மி. பாடசாலை, மீசாலை தெற்கு.)

தற்போது இலங்கையில் அரசினர் உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளெல்லாவற்றிலும் பெரும்பாலும் இந்தியர்களாற் றொகுக்கப்பட்டனவும், இயற்றப்பட்டனவுமாகிய புத்தகங்களே இலக்கியபாடப்புத்தகங்களாகப் பெருவழக்கிலிருக்கின்றன. இலங்கையர்களா லியற்றப்பட்ட புத்தகங்களும் சிலவுள. இலங்கை வாசிகளாகிய சுதேசிகளால் இயற்றப்படும் புத்தகங்கள் பெரும்பான்மையும் அரசினரின் அங்கீகாரம் பெறுகின்றில. இந்தியர்களா லியற்றப்படும் புத்தகங்கள் எவ்வளவு எழுத்துப் பிழைகளும் மற்றும் பிழைகளும் நிறைந்துள்ளனவாயிருப்பினும் அவை ஒரு ஆக்ஷேபமுமின்றிப் பாடப் புத்தகங்களாக அரசினரா லங்கீகரிக்கப்படுகின்றன. இதன்காரணம் யாதென்பதை விளங்கிக்கொள்ளுதல் மிகக் கஷ்டமான காரியமா யிருக்கின்றது. இலங்கையிலுள்ள பாடப்புத்தக அங்கீகார சபையார்க்கு இலங்கை வாசிகளா லெழுதப்படும் புத்தகங்களிலுள்ள குற்றங்கள் தினையளவாயினும் அவை பனையளவாகவும், இந்தியர்களா லெழுதப்படும் புத்தகங்களிலுள்ள குற்றங்கள் பனையளவாயினும் அவை தினையளவாகவும் புலப்படுவதாகத் தோற்றுகின்றது. இல்லாத குற்றங்களும் ஆரோபிக்கப்படுகின்றன. ஒரு புத்தகத்தில் அங்கீகாரம் பெறுதற்குத் தகுதியின்மையை யுண்டாக்கும் விஷயங்களைவையென அரசினரைக் கேட்பின், அவர்கள் "அக்கேள்விக்கு மறுமொழி சொல்லமுடியாது" என மறுத்துவிடுகின்றனர். பாடப்புத்தக அங்கீகார சபையாராற் காட்டப்படும் குற்றங்கள் இவையிவை யென்பதை நூலாசிரியர்கட்கு அறிவிப்பதனால் வரும் இழுக்கென்னையோ? அதையவர்களறிவிப்பார்களேயானால் அவ்வாறாய பிழைகள் மேல் அவர்கள் எழுதப்புகும் புத்தகங்களில் நுழையா வண்ணம் பார்த்துக்கொள்வாரே. அங்கீகார சபையார் தம்மாற் காட்டப்படும் குற்றங்கள் நேர்மையான குற்றங்களா யிருக்கும் பட்சத்தில் ஏன் அவற்றை வெளியிடுதல் கூடாதென்பது கேள்வி. ஒரு குற்றத்தைக் கற்பித்து அதைப் பரமரகசியமாக வைத்திருப்பது அவரின் கோழைத்தனத்தை அல்லது நேர்மையீனத்தையே புலப்படுத்துகின்றது. எங்கள் வித்தியாதிகாரியோ ஒரு ஆங்கிலேயர்; தமிழறிவற்றவர்; தமிழ்ப் பாடப் புத்தக விஷயத்தில் அங்கீகார சபையார் அவரையெவ்விடமு மாட்டிக்கொள்ளலாம். ஆனபடியால் நாம் இக் குற்றங்களை வித்தியாதிகாரிமேலன்றி அங்கீகாரசபையார் மேலேயே ஏற்றவேண்டியதாகின்றது.

புத்தக அங்கீகாரசபையார் "இலங்கையர்களா லெழுதப்பட்ட புத்தகங்க ளதிகமாக வில்லாமையால் இந்தியர்களுடைய புத்தகங்களையே பெரும்பாலும் நியமிக்கவேண்டி யிருக்கின்றது" என்கிறார்களாம். அவர்சொல்வதும் ஒருவகையிற் பொருத்தமானதே. ஆனால் இலங்கையர்கள் பெரும்பான்மையும் எப்படி நூலியற்றுந் தொழிலிற் பிரவேசிக்கலா மென்பதான் கேள்வி. எழுதப்படும் நூல்கள் பெரும்பான்மையாய் அங்கீகாரம் பெறினன்றோ எழுதவல்லுநரும் பெரும்பான்மையான புத்தகங்களை யெழுதி வெளியிடுவார்கள். எழுதுவனவற்றிற்கெல்லாம் ஒவ்வோர் குற்றங் கற்பித்து விலக்கி அவர்களை நஷ்டப்படுத்தி விடுவதாயிருந்தால் யார்தான் அவ்வேலையிற் பிரவேசிப்பார்கள். இலங்கையர் பெரும்பான்மையான புத்தகங்களை எழுதி வெளியிடாமைக்குக் காரணம் இதுவேயன்றிப் பிறிதில்லை. எழுதும் புத்தகங்களிற் குற்றங்களிருக்கின்றமையால் அவை அங்கீகாரம் பெறவில்லை என்பரேல் அதுவும் ஆராயப்படவேண்டியதுதான். முற்காலத்திருந்த புலவர் பெருமக்களாய ஆறுமுகநாவலர், சபாபதிநாவலர் முதலிய மூதறிவாளர்களா லெழுதப்பட்ட நூல்களிலேயே பிழைகாண்பதருமை. தற்காலத்தெழும் பெரும்பான்மையான புலவர் நூல்களிலெல்லாம் சில பிழைகளாவ தில்லாமற்போகா. அபிப்பிராயபேதங்கொண்டாவது பிழை கற்பிக்கப்படலாம். ஆயின் குற்றமோ குணமோ கூடியதென்பதே ஆராயப்பட வேண்டியதாகும். "குணநாடிக் குற்றமுநாடி யவற்றுண், மிகைநாடி மிக்ககொளல்" என்றார் பொய்யாமொழிப்புலவரும்.

இலங்கை வாசிகளாகிய நாங்கள் பெரும்பான்மையும் இந்தியர்களின் புத்தகங்களையே பாவிப்பதாயிருந்தால் இலங்கையிற் றகுதியான புத்தகங்களை யாக்கக்கூடியவர்க ளில்லையென்பது புலப்படாதா? இது எமக்கு வசையாகாதா? இதையேன் நம் அங்கீகார சபையார் கவனியாது விடுகின்றார்களோ தெரியவில்லை. எல்லாரும் தங்கள் தங்கள் சுதேசப் பொருட்களையே கையாளவேண்டுமெனச் சுபவாட்சிப்பிரியர் வாய்ப்பறையறைந்து திரியுமிக்காலத்தில் நாம் பாடப்புத்தகங்களுக்காக இந்தியாவை எதிர்பார்த்திருப்பது முறையாகுமா என்பதை நம் அங்கீகார சபையோர் ஏன் கவனிக்கவில்லையோ தெரியாது. யாழ்ப்பாணத்தார் வீரமெல்லாம் சொல்லளவாயேயொழிதல் வெட்கத்துக்கிடமான காரியமே. சுதேசிகளா லெழுதப்படும் நூல்கள் பெரும்பாலும் பிழைகள் நிறைந்தனவா யிருப்பின் அவற்றைத் துருவியாராய்ந்துணரும் நுண்ணறிவாளர்களாகிய அங்கீகார சபையாராவது பிழையில்லாத நூல்களையெழுதி வெளிப்படுத்தி நம்நாட்டிலும் நூல்களையெழுதி வெளிப்படுத்தத்தக்க ஆற்றலுடையார் பலரிருக்கின்றார் என்பதை எல்லோருக்குங் காண்பித்தால் எங்களெல்லாரின் மரியாதையையும் அது காப்பாற்றுவதா யிருக்குமே. ஆனால் "சொல்லுதல் யார்க்குமெளிய வரியவாஞ், சொல்லியவண்ணஞ் செயல்" எனப் பொய்யாமொழிப்புலவர் புகன்றிருக்கின்றாரே. அதற்கென் செய்யலாம் என்பதும் ஒரு கேள்வியாகின்றது. நிற்க,

இலங்கையர்களாற் றொகுக்கப்பட்ட அல்லது எழுதப்பட்ட பெரும்பான்மையும் பிழையற்றவைகளுளவென்பதையும், இந்தியர்களாற் றொகுக்கப்பட்ட அல்லது எழுதப்பட்ட புத்தகங்களிலும் பெரும்பான்மையும் பிழைகளுள்ளவை யிருக்கின்றவென்பதையும் மேல் ஆராய்ச்சிசெய்து காட்டுகின்றேன். தற்போது இவ்வீழ கேசரிப் பத்திராதிபரா யிருக்கும் ஸ்ரீமான் நா. பொன்னையா அவர்களாற் றொகுக்கப்பட்ட 'தமிழ்மஞ்சரி' என்னும் புத்தகம் பெரும்பான்மையான பிழைகளற்றதா யிருந்தும் அரசினர் அதனை அங்கீகரிக்க மறுத்துவிட்டனரென்பது கேள்வி.

இனித் தற்போது பிழையற்றதென அரசினரால் அங்கீகாரமபெற்றுப் பிரவேச வகுப்புக்குப் பாடப்புத்தகமாக வைக்கப்பட்டிருக்கும் தமிழ்மணி மாலை என்னும் புத்தகத்திலுள்ள செய்யுட்பகுதிகளில் அதன் ஆக்கியோன் செய்திருக்கும் திருவிளையாடல்களைச் சுருக்கிக் காட்டுகின்றேன்.

(க) தமிழ்மணிமாலை 2-ம் புத்தகம்: 1. கடவுள் வாழ்த்து, 1. தாயுமானவர் பாடல் பரிபூரணானந்தம் என்றதின்கீழ் "ஆழாழி கரையின்றி" என்னுஞ் செய்யுளில் "வடஅனனிற் கவில்லையோ" எனப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. வடஅனல் எனப் பதச்சேதஞ்செய்த அவர் அச்செய்யுளிலுள்ள ஆழாழி, கரையின்றி, நிற்கவிலையோ, ஆலமமுதாகவிலையோ என்றற் றொடக்கத்துச் சொற்றொடர்களையும் ஆழ் ஆழி, கரை இன்றி, நிற்க இ(ல்)லையோ, ஆலம் அமு(து)ஆக இ(ல்)லையோ எனபனபோற் பிரித்துக் காட்டுதலல்லவோ முறைமையாகும். அப்படிப் பிரித்துக்காட்டாமைக்குக் காரணமென்னையோ? மாணவரின் விளக்கவிலேசுகருதிப் பிரிக்கப்பட்டதென்பரேல் நன்று, வடவனல் என்னுந் தொடரை வட அனல் எனப் பிரிக்கவறியா மாணவனொருவன் அனனிற்கவில்லையோ என்னுந் தொடரை அனல் நிற்கவில்லையோ எனப் பிரிக்க எப்படி வல்லுநனாவன். வசனநடையிலும் அவ்வாறு பிரித்தல் முறைமையன்றாகவும் செய்யுணடையில் அவ்வாறு பிரித்தல் முறையினமாகாதா? இனிப் "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினானே" என்னும் விதியைத் துணைக்கொண்டு நன்னூலிலுள்ள "இஈ யை வழி யவ்வு மேனை, உயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையு, முயிர்வரி னுடமபடு மெய்யென் றாகும்" என்னுஞ் சூத்திரத்தைப் பதிப்பாசிரியர்கள் நீக்கவிடுதல் நன்று. காலமும் இலக்கணம் வேண்டாமென்னுங் காலந்தானே. ஆனால் மத்திய வகுப்புக்களாகிய ஆறும் ஏழாம் வகுப்புகளுக்குரிய இலக்கியபாடப் புத்தகங்களில் அவற்றினாசிரியர்கள் செய்யுள்களை இவ்வாறாகச் சிதைத்துப் பிரித்துக் காட்டவிலலை. அவற்றை மாணக்கர் எவ்வாறு கற்பரோ தெரியாது. அவற்றைப் பிரிக்கப் பயின்றுகொண்ட மாணக்கர்களுக்கு இவற்றைப் பிரித்துக்கோடல் கடினமான காரியமல்லவே. இவரில் யார் தீக்ஷண்ணிய புத்தியுடையார்? பிரியாது விட்டவர்களா? பிரித்துக் காட்டியவர்களா? புத்தி வகுப்பேறவேறக் கூர்மையுறுமா? அன்றி மழுங்குமா? இவர் பதிப்பிலுள்ள செயயுளகளில் இவ்வாறான சிதைவுகள் பலவுண்டு. உதாரணமாக ஒன்றைமாத்திரம் காட்டியிருக்கின்றேன.

(உ) III காதை. 1 தெய்வயானையம்மை திருமணம் என்னும் பகுதியிலுள்ள உ-ம் செய்யுளில 2-ம் அடி "செப்போது கொங்கை மகடூஉ மணஞ்செப்பன் முன்னி" என்பதாகும். இதை அவர் "கொப்போது கிள்ளை மகடூஉ மணஞ் செப்பன் முன்னி" எனச் சிதைவுறத் திருத்தியிருக்கின்றார். இத்திருத்தம் எதன்பொருட்டுச் செய்யப்பட்டது. கச்சியப்பசுவாசாரியருடைய செயுளிற் சந்தவின்பமில்லையென்பது கருதியா? அன்றேற் பொருட்பொருத்தமில்லையென்பது கருதியா? அவர் திருத்திய திருத்ததிலும் பார்க்கச் சந்தவின்பத்திலும் பொருட்பொருத்தத்திலும் பழையவடியே சிறந்திருக்கின்றது. திருத்தியதால் யோனையுஞ் சிதைவுற்றது.

கொங்கையென்னுஞ்சொல் ஆண்டு வந்தமையால் அதைத் தவிர்த்தற் பொருட்டுத் திருத்தினே மென்பராயின் அவர் நியாயம் நன்று நன்று. அச்சொல்லை அமங்கலச்சொல் அன்றி இடக்கர்ச்சொல்லென எந்நூலாவது தவிர்த்ததுண்டா? முன்னூல்களிற் றவிர்க்கப்படாவிடினும் இக்காலவியல்புக்கேற்பத் திருத்தப்பட்டதென்பராயின் தற்காலமும் கொங்கையென்னும் உறுப்புளராய காலமாயே யிருத்தலின் ஆதுவும் பொருந்தாது. கொங்கையென வோருறுப்பு மங்கையர் மார்பிலில்லாதகாலமொன் றேற்படுங்கால் அச்சொல்லையும் வழக்கினீக்கலேயன்றி அவ்வுறுப்புளதாய தற்காலத்தனை நீக்கல் முறையன்றென்க. தற்காலத்து முலையென்னுஞ் சொல்லைப் பரந்தவறிவுடையார் சிலர் இடக்கர்ச்சொல்லாகக்கொள்ளுதலைக் கண்டுங் கேட்டுமிருக்கின்றேன். கொங்கையென்னுஞ் சொல்லு மந்நிலையெய்தியதை இப்போதே காண்கின்றேன். நிற்க, கொங்கையென்னுஞ் சொல்லைப்பாவித்தல் அரசினர் பிரமாணத்திற்கு விரோதமாகுமென அவர் எண்ணியிருந்தால் அச்செய்யுளை முற்றாய் நீக்கிவிட்டிருக்கலாமே. இவர் சரித்திரத்தைத் தொடர்புறக் காட்டாதவர்தானே. மேலும் அமங்கல மொழியினியல்பை, இடக்கர்ச் சொல்லினியல்பை யறியாத மூடசிகாமணியாய, வெட்கங்கெட்ட கச்சியப்பசிவாசாரியராற் பாடப்பட்ட நூலிலுள்ள பாடலை எடுத்தாள்வதும் முறையாகாதே. இதை நம் தொகுப்பாசிரியர் கவனியாதுவிட்டது பெரு மடைமையேயாகும். அவர் அவ்வளவினுமமையாது மற்றோர் செய்யுளையும் மனம்போனபடி திருத்தியிருக்கின்றார். அதில் முலை முதலிய சொற்கள் வரவுமில்லை. காரணம் அவரைத்தான் கேட்டறியவேண்டும். அச்செய்யுள் வருமாறு: ஷ தெய்வயானையம்மை திருமணம் ச-ம செய்யுளில ௩-ம் அடி "கந்தே புரைநின் பெருங்காதல் அளித்தி" எனத் திருத்தப்பட்டிருக்கின்றது. "கந்தே புரைநின் பெருந்தோளிற் கலத்தி" என்பது பழைய பாடமாகும்.

(ங) நீதிமஞ்சரியில் எ-ம் செய்யுள் "நாவொன்றே நற்செல்வம் நல்கும் நலமுற்ற, நாவொன்றே சுற்றம் நயக்கும்—நாவொன்றே" என்பதாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதில நயக்கும் நாவொன்றே என்புழி ஆசிரியத்தளைதட்டு வெண்பாச் சிதைவுறுதல்காண்க. "வெள்ளைத்தன்மைகுன்றிப், போஞ்சீர் கனிபுகிற் புல்லாதயற்றனை பூங்கொடியே" என்பது காரிகை. இஃது நூலாசிரியரின்பிழையோ அன்றித் தொகுப்பாசிரியரின் பிழையோ என்பது தெரியவில்லை. இதையெழுதும்பொழுது சென்றவருடத்து இலக்கியப் புத்தகமாகிய "செந்தமிழ் இலக்கியக்கோவை"யிலுள்ள ஒருவெண்பாவும் நினைவுக்கு வருகின்றது. அது வருமாறு:

(ச) செந்தமிழ் இலக்கியக்கோவை. 3. சாவிததிரி வெண்பா. எ-ம் செய்யுள் "கணவன் மனைவி யிவர்காணில் உயிருடம்பாம், கணவனிறந்தால் மனைவி கட்டைப்பிணம்" என்பதாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதில் "உயிருடம்பாங் கணவனிறந்" என்புழிக் கலித்தளை தட்டு வெண்பாச் சிதைவுறுதல் காண்க.

(ரு) நீதிமஞ்சரி ௯-ம் செய்யுள் "அறிவில்பெரியா அறுதொழிலாளர், நெறியில்பெரியர் நிருபர்" என்பதாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

இதில் அறிவில் பெரியர், நெறியில் பெரியர் என்பன வேற்றுமைச் சந்தியா? அல்வழிச்சந்தியா? அல்வழிச்சந்தியாயின் ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சமாய் அறிவில்லாத பெரியர், நெறியில்லாத பெரியர் என்னும் பொருளையே தரும். வேற்றுமைச்சந்தியாயின் லகரம் றகரமாகத் திரிந்தே வருதல்வேண்டும். அன்

(தொடர்ச்சி அடுத்தபக்கம் பார்க்க)

பிதிரர்க்குந் தெய்வத்திற்கும், விருந்திற்கும் இனத்திற்குந், தனக்குந், தருமஞ் செய்தல் நிலைமையான தருமமாம்.

நாடகப் பகுதி.

தருமபுத்திரர் அல்லது துரோபதி துகில்.

(மானிப்பாய். திரு. தா. சுவாமிநாதன் அவர்கள்.)

[உரிமை ஆக்கியோனுக்கே உரியது.]

அங்கம்-1. காட்சி-1.

இடம்:—துரியோதனன் கொலு மண்டபம்.

நாடக பாத்திரங்கள்:—திருதராட்டிரன், விதுரன், வீட்டுமன், சகுனி, கன்னன், துரியோதனன், துச்சாதனன், விகர்ணன் முதலியோர் இருக்கின்றனர்.

கன்னன்:—அரசே! குவளைமாலையையணிந்த தருமபுத்திரன் இயற்றிய இராசசூயயாகத்தைப் போல இப்பூமியிலுள்ள வேந்தர்க்குள்ளே யார் புரியவல்லார்! இவனுடைய வாழ்க்கைக்குச் சமானமான தெங்கிருக்கின்றது! இவனுடைய பெருமையைக் கெடுத்துவிடாது நாமிருந்தால் நியாயமாகுமா?

சகுனி:—சரிதான்; சிங்கம் வெளிப்படாது குகைக்குள் அடங்கியிருக்குங் காலத்தில் யானையானது வெளிப்பட்டுத் தனது வீரத்தையும் பெருமையையுங் காட்டுமல்லவா? "பூனையில்லாவீட்டில் எலி நடனமாடு"மாப் போலவே தருமனுடைய செய்கைகளுமிருக்கின்றன.

துச்சாதனன்:—இரவின் கண்ணே நிலாவைச் சொரிகின்ற திங்களானவன், பகலின்கண்ணே யெறிக்கின்ற கதிரோனுக் கெதிர் நிற்பானா? மற்றும் சாமான்ய வேந்தர்க்கிடையில் தருமன் மேம்பட்டு விளங்குவானாயினும், தங்களுக்கு முன் விளக்கின் மின்மினியைப்போல மாறிவிடுவானல்லவா?

துரியோதனன்:—தம்பிமாரே! மற்றும் அரசர்களே! இந்திரன் முதலான தேவர்கள் வந்து சபையை அலங்கரித்து நிற்கவும், எண்ணில்லாத மன்னர்கள் வந்துநின்று ஏவற்றொழிலைப் புரியவும், மந்திர முனிவர் வேதநெறி பிறழாது யாகத்தையியற்றியவேளையில் அத்தருமனே தலைவனாகவிருந்து விளங்கினன். இன்னும் சிறிதுகாலம் செல்வதற்குமுன் எமது வாழ்வையும் கவர்ந்துவிடுவான் போலிருக்கின்றது. காலிற் றைத்து வேதனைசெய்யக்கூடிய முட்செடியை முளையிலே களைந்துவிடவேண்டாமா? ஆகையாற் றாமதம் செய்யாது யாம் அவனோடு யுத்தம் புரிந்து சகல செல்வங்களையும் கவர்ந்துவிட வேண்டும். இதைக்குறித்து உங்களபிப்பிராயங்களைக் கூறுங்கள்.

துச்சா:—இப்பொழுதே யுத்தத்திற்குச் செல்லவேண்டும். யாக மண்டபத்திற் பளிங்காற் செய்த ஓரிடத்தை நீர்வாவியென்றெண்ணி எங்களண்ணா உடுத்த வுடையைத் தூக்கிக்கொண்டு சென்றதைக்கண்டு வீமனும் துரோபதியும் நகைத்தனரல்லவா? அன்றியும் வேள்வியைப் பார்க்கச்சென்ற பலநாட்டு மன்னர்களோடு நாமும் ஒருவராய்க் கலந்துநின்றோமேயல்லாது, எங்களை ஓர் பொருளாய் மதித்து உபசாரம்செய்தவனா அந்தத் தருமன்! எல்லாப் பெருமையும் தன்னை ஈன்றவனை இகழ்ந்துவிட்டு நந்தன்மேற் பிரியங்கொண்டவனாகிய அந்த வெண்ணெய்திருடிக்கல்லவா கொடுக்கப்பெற்றது. இப்போ அந்தத் தருமன் தனது வலிமையையும், அம்மேகமேனியானுடைய மேன்மையையும் விளக்குதற்கன்றோ இந்த வேள்வியைப் புரிந்தனன். இவ்வேளையில் மாயக்கண்ணன் மாத்திரி துணைவனும், நகுலன் சகாதேவன் மாமனும், மத்திரநாட் டரசனுமாகிய சல்லியனோடு போர்செய்யச் சென்றிருக்கின்றான். இவன் அங்கில்லாத தருணத்தில் நாமனைவரும் திரண்டு சென்று பஞ்சவரை எதிர்ப்போமானால் ஒருகைபார்த்துவிட்டுத் திரும்பிவிடலாம். அன்றி "நித்தமுங் கத்தினாற் செத்தலைப் பாம்பு" என்றல்லவா கூறுவர்.

துரியோ:—ஆம், இதுவே தகுந்த புத்தி. அந்தவெண்ணெய்வாய்க்கள்வன் இப்போ இவர்களுக்குத் துணையாகமாட்டான். ஆகையால் அவன் திரும்பிவரமுன் எல்லோரும் பஞ்சவரை எதிர்ப்பதற்காய்ப் புறப்படுங்கள்.

கன்னன்:—வணங்காமுடியோய்! சீனியென்றோலைபி லெழுதிவிட்டால் மாத்திரம் தித்திப்பைக் கொடாது. எனது கொடிய வில்லை வளைத்து ஓர் பாணம் விடுவேனாயின் எம்மையெதிர்ப்பவர்களில் யார்தான் யமனுலகுக் கேகாதுவிடுவர்?

சகுனி:—மருக! கன்னனன்றித் தேவர்கள் வந்தெதிர்த்தாலும் தருமனை வெல்லமுடியாது. வலிமைமிக்க சராசந்தன், பகன், இடும்பன் முதலியோரைத் தனது பராந்தபுயங்களினால் வெற்றியடைந்தவன் வீமனல்லவா! வில்லேந்திய கரத்தோடும் பிராமண வடிவம்பூண்டு அரச சபைக்குச் சென்று வில்லிழுத்துத் துரோபதிக்கு மாலைசூட்டியவன் அரிச்சுனனல்லவா! ஆகையாற் பாண்டவரோடு போர்செய்து வெற்றியடைவேனென்ற உனது எண்ணங் கைகூடாது. அவர்களை வஞ்சகச்சூதாடியே வெற்றியடையவேண்டும். அன்றி, "ஏட்டுச் சுரைக்காயுங் கறிக்குதவு"மா?

துரியோ:—மாமா! தாங்கள் கூறிய மொழிகளைக்கேட்டு என் மனமானது குளிர்ந்தது. இப்படி வாருங்கள் மாமா! இப்பொன்னாசனத்திலமருங்கள். (சகுனி சென்று பக்கலிலமர்ந்தனன்) மாமா! பஞ்சபாண்டவரைச் சூதாடி வெற்றியடைய வேண்டுமென்றீர்களே. அக்கருமத்தை எங்ஙனம் முடிக்கப்போகின்றீர்கள்.

(தொடரும்)

நூற்றொகுப்பாசிரியர்களின் திருவிளையாடல்கள்.

(முன்பக்கத் தொடர்ச்சி.)

றேல் "ளவேற்றுமையிற்" றடவும் என்னுஞ் சூத்திரம் நன்னூலினின்று மகற்றப்படல்வேண்டுமே. செய்யுள்களினுஞ் சேட்டையா? இலக்கியம் என்பதன் கருத்தின்னதென விளங்கியிருக்குமேயானால் அவர் நிச்சயமாக இப்படியான சேட்டைகள்செய்தேயிருக்கமாட்டார். இலக்கணத்தில் மரபுமொன்றுதலை அவரறிந்திலர்போலும். அவர் செய்யுட்பாகத்தில் இவைபோற் செய்திருக்கும் சிதைவுகள் அளப்பில் ஆண்டுக்காண்க.

கிராதார்ச்சுனீயம்.

1936-ம் ஆண்டிற்குரிய
சிரேட்டபாடசாலைத்
தாராதரப்பத்திர வகுப்பிற்குரியது.

விலை சதம் 60.

தனலக்குமி புத்தகசாலை,
சுன்னாகம்.

"ஐய வினா விடைகளின் ஆராய்ச்சி"

[திரு. க. தம்பாபிள்ளை அவர்கள்,
ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலை, கொக்குவில்மேற்கு.]

(முற்றொடர்)

இனிக் கண்மலர் என்பதும், 'கண்மலரினின்றும் பெருகிய கருணைநீர்" என நீர்க்கு அடையாகலின், நீர் பெருகியோடற்கு 5-ம் வேற்றுமை நீக்கப் பொருளாயியைவது கண்ணேயன்றி மலரன்று. என்னை? மலரினின்றும் தேன் பெருகிற்றென்னலாமேயன்றி நீர் பெருகிற்றென்றல் பொருந்தாமையின் என்பது.

ஆகவே, முடிக்குஞ் சொல்லோடியைபுபடுமாற்றாற் கைத்தல+மலர் கண்மலர் என்னுந் தொகை நிலைத்தொடர்களிற் பொருள் சிறந்த இடம் நிலைமொழியாமென்பது அறியப்பட்டது. ஏனை வருமொழிகள் பொருள் சிறவாது அடைமொழி நீர்மையவாம். எனவே அதற்கேற்ப விரிக்குங்கால் 'மலர்போன்ற கைத்தலம்' 'மலர்போன்றகண்' என உவமைத்தொகையாக விரித்தற்கு இயையுமேயல்லாமல் பண்புத்தொகையாக விரித்தற்கு இயையாமை தெளிக. இடவகையால் நிலைமொழி பின்மொழியென்றும், வருமொழி முன்மொழி என்றும் கூறப்படுமாதலின், இவையிருதொடரும் பின்மொழி நிலையலாகிய உவமத்தொகை எனப்படும். இதன் விரிவை: தொல்காப்பியம் - எச்சவியலில் "அவைதாம், முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்" என்னும் சூத்திரவுரையிற் சேனாவரையர் 'பொருணிற்றலாது வினையோடியையுமாற்றான் மேற்பட்டுத் தோன்றுதல். வேங்கைப்பூ என்புழிப் பூவென்னும் முன்மொழிக்கட் பொருணின்றது; அது நறிதென்னும் வினையோடியையுமாற்றான் மேற்பட்டுத் தோன்றியவாறு கண்டுகொள்க" என்றித் தொடக்கத்தனவாக விரித்துரைத்தனர். நச்சினார்க்கினியர் அச்சூத்திரத் தங்ஙனே தோன்றவுரைத்து "வேற்கண் முன்மொழி நிலையல்-பெண்ணணங்கு என்பது அணங்குபோலும் பெண்ணென்பதாகலிற் பின்மொழி நிலையலாம். இவை உவமத் தொகை" என உவமத்தொகை பின்மொழி நிலையலாய் வந்தமைக்கு உதாரணமுங் காட்டினர். இதனையே பிரயோக விவேக நூலார்,

"'அடிமலர்'; 'பெண்ணணங்கு' எ-ம் வடமொழியில் 'புருட வியாக்கிரம்' எ-ம், பின்மொழி யொப்பென்னும் உவமோத்தா பதகர்மதாரய சமாசம் வரும்" என்றார். [ஆண்டுப் பின்மொழி யொப்பு என்றதில், பின் என்றது காலவகையாற் பின்.] (பிரயோக விவேகம் 22-ம் பாட்டு)

இனி, தஞ்சைவாணன் கோவையுரையில் சொக்கப்ப நாவலரும் "தென்பாற்றிலக மன்னன்" என்னும் 28-ம் செய்யுளிலும், "விடவார் கணைவிழி" என்னும் 170-ம் செய்யுளிலும் முறையே பெண்ணணங்கு என்றது பின்மொழி நிலையல்; 'அணங்குபோலும் பெண்', என்று பொருள் கூறுக." என்றும், "அணங்குபோலும் பெண் என்றுரைத்ததுடன் பெண்ணங்கு-பின்மொழி நிலையல்" என்றும் விசேடமும் கூறிப்போந்தனர்.

(ஆ) இனி இத்தொடர்களில் அமைந்த அணி உவமையே, உருவகமெனல் பொருந்தாது. என்னை? உவமையணியில் உவமேயப்பொருளோடியையுபட்டுத் தொடர்தற்குரிய முடிக்குஞ் சொல்லும் உருவகத்தில் உவமானப் பொருளோடு இயைபுபட்டுத் தொடர்தற்குத் தக்க முடிக்குஞ் சொல்லும் நிற்றல் மரபாகலான் என்பது. இத்தன்மையை ஓர் உதாரணத்தில் வைத்து விளக்குவாம்.

'சிங்கவேறு போன்ற ஸ்ரீ இராமன் மதயானைகள் போன்ற அரக்கர்களைக் கொன்றான்' என்பது உவமையணி. இதில் 'இராமன் அரக்கர்களைக் கொன்றான்' என்பது வாக்கியத்தின் சுருங்கிய உருவம். இங்கே உவமேயப் பொருளின் புலப்பாடும் [உவமேயப்ரதீதி] உவமானப் பொருள் அடைமொழி நீர்மையாய் உவமேயப் பொருளில் மறைதலும் காணலாம்.

"ஸ்ரீ இராமனாகிய சிங்கவேறு அரக்கர்களாகிய மதயானைகளைக்கொன்றது" என்பது உருவகஅணி. இதில் "சிங்கவேறு மதயானைகளைக் கொன்ற"தென்பதே சுருங்கிய வாக்கிய உருவம். இங்கே உவமேயமாகிய இராமனும் அரக்கரும் முறையே சிங்கவேற்றிற்கும் யானைகட்கும் அடைமொழிநீர்மையாய் அவற்றின் கண்மறைய உவமானப்பொருளாகிய சிங்கவேறும் யானைகளுமே சிறந்து புலப்பட்டு (-உவமானப்ரதீதி) 'கொன்றது' என்னும் தமக்குத் தகுதியான அஃறிணை வினையாகிய பயனிலையோடியைந்தபடி காண்க. "புனையாழியங்கைப்புயல்" என்னுந் தஞ்சைவாணன் கோவைச் செய்யுளில் "இன்னுயிரே, யனையான் அருட்புனலால னங்கானலம் ஆற்றுதற்கே" என்புழி 'அருளாகிய நீரால் காமமாகியதீயை அவித்தற்கு"என்ற உருவக அணியிலும் இவ்வாற்றைக்காண்க.

இனி உருவகஅணி கருதியே "கைத்தலமலரால் மார்புறத்தழுவிக் கண்மலர்க் கருணைநீராட்டி" என்னும் இரு தொடர்களும் எழுந்தன என்னில், ஈரிடத்தும் மலரென்னும் உவமானப்பொருளோடு முறையே 'தழுவி, நீர்' என்னும் இரு முடிக்குஞ் சொற்களும் இயைபுபடுகின்றனவா? என்னுங் கடா எழும். அங்ஙனம் இயைபுபடாமையின் உவமையணியே ஈண்டைக்குப் பொருந்துவதாதல் தெளிக. மேலும் சொல்லிலக்கணமாய மேற்காட்டிய தொகைநிலைத் தொடரிலக்கணமும் ஈண்டு இவ்வுவமையணிக்கே சாதகமாய் இதனையே வற்புறுத்தி நிற்றலுங் காண்க.

இனி ஐயவினாவுக்கு விடையெழுதிய திரு. சி. வல்லிபுரமவர்கள் "உவமையிலும் பார்க்க உருவகத்தின் கண்ணேயே உவமேயப் பொருட்குச் சிறப்புக் கூடுதலால், அப்பெற்றி இனிதுணர்ந்து உவமையணியாகவும் உருவக அணியாகவும் கொள்ளக் கிடக்கும் "கைத்தலமலர்" "கண்மலர்" என்னும் இரு தொடர்களையும் உருவகமென்று கூறிய பண்டிதர் அவர்கள் உரை சிறந்து விளங்குதலுங் காண்க" என்றனர். இப்பொதுவிதியை வடநூலினுந் தமிழ்நூலினும் பயிற்சியுடைய திரு. வித்துவான் அவர்கள் அறியாது சென்றார்எனல் தகாது. வித்துவானவர்கள் கூறியவாறு உவமையணியாகக்கோடலே பொருந்தும் என்பதை வேறுபிரகாரத்தாலும் ஆராய்ந்து காட்டுதும்.

கண்ணன்கனிவாகிய ஈண்டைக் கதாசந்தர்ப்பத்தினுக்கு ஏற்பது யாது என உற்றுநோக்குழியும் உவமையணியே பொருந்துவதாதலை யாவரும் தெளியலாம். என்னை? வில்லிபுத்தூரார்க்கு இங்கே கிருஷ்ணபிரான் அல்லது விஷ்ணுமூர்த்தியின் கையழகு கண்ணழகு முதலியவற்றைப் புகழ்ந்து புனைந்துரைத்தல் நோக்கமன்று. மற்றென்னையெனின், "இந்திராதி தேவர்கட்கும் பணியத் தக்க மேலான பெரிய கடவுள், மகா தவத்தினர்க்கும் காண்டற்கரிய திருமால் ஒரு மானுடனாகிய கன்னனுக்கு எளிவந்து காட்சிகொடுக்கவும், தமதருமைத் திருக்கரம் மார்பு இவைகளால் மானுடன் மேனியைத் தீண்டித் தழுவவும், அன்புக் கண்ணீர் விட்டு மனமுருகிப் பாராட்டவும் வந்தது அவனது கொடைவீரத்தாலன்றி மற்றொன்றாலன்று; அவ்வீரகையால் இங்ஙனமாய பாக்கியம் பெற்றான் கன்னன்" என்று திருமாலது அத்தியுந்நதநிலையும், கன்னனது எளிவந்த நிலையும், அவனை இங்ஙனம் உந்நதநிலைக்கு ஆளாக்கிய ஈகையின் மேன்மையுமாகிய இவை ஒருங்கு தோன்றக் கூறலே கவியின் நோக்கமாகும். ஈண்டைக்கு உகந்ததும் அதுவே. கவி ஈண்டு கண்ணபிரானை "மூவருமொருவனுமூர்த்தி" என்றதுமிது பற்றியே. 'பாவிகம்' என்னும் பொருளணியின் பாங்குமிதுவே. இச் செய்யுளில் இங்ஙனம் அரும்பிய கவியின் பாவம் [கருத்து] அடுத்துவரும் "அருந்தழன் மாகமம் புரிந்தும் கடவுட்கங்கை ஆதியாம் புனல் படிந்தும் அணிலயோகத்திருந்தும் அணிமலர் தூவிப் பூசை நேர்ந்தும் எக்குமாகியவுன்னை யிதயத்துள்ளே திருந்தநிலைபெறக்கண்டும் போகமெல்லாம் சிறுக்கி யனைத்துயிர்க்கும்செய்யவொண்ணாப் பெருந்தவங்கள் மிகப்பயின்றும் பெறுதற்செட்டாப் பெரும்பயனின் றிருவருளாற் பெறப்பெற்

தேவை

தராதரப்பத்திரமுடைய ஆசிரியை ஒருவர் தேவை. அரசினரிடமிருந்து சம்பளத்தை நேராகப் பெறலாகும்.

Kayts 1-8-35 } மனேஜர், சரவணை 'நாகேஸ்வரி'

றேனே'' என்பது முதல் மூன்று செய்யுளில் மலர்ந்து மிளிர்தலுங் காண்க. ஒரு நாயகி தான் விரும்பிய தலைவனது அழகைப் புகழ்ந்து புனைந்துரைக்கு மிடம்போன்றவிடத்தாயின், உவமையினும் உருவகம் உவமேயப் பொருட்குச் சிறப்புத் தருமென்ற நியாயம் மேற்கொண்டு அதற்கியைய இன்னதொடர்க்கு இன்னணம் உரைகூறிப்போதல் தகும். அப்படிப்பட்ட இடமன்றிஃதென்க.

(3) கருணைநீர்:- வினாநிகழ்த்தியவர் இத்தொடரில் உருவக அணியில்லையென்றார். விடைநிகழ்த்தியவர் ''உருவக அணியில்லையென்ற மறுப்புப் பொருந்துமேற்கொள்க'' என்றார். முன்னதே நமது கொள்கை. கருணையால் உண்மையாகவே கண்ணீர்விட்டனர் கண்ணபிரான் ஆதலின், போலியாகிய [-நற்பிதமான]நீரை யுணர்த்துமியல்புடைய உருவகஅணி ஈண்டைக்குப் பொருந்தாது. அன்றியும் 'நீர் போன்ற கருணையால்' என்னும் உவமையணியும் பொருந்தாது. என்னை? ஆட்டி என்னும் முடிக்குஞ் சொல்லோடு 'நீர்' இயையுமேயொழியக் கருணை இயையாமையின் என்க.

இன்னும் விடையாளர் வினாவாளர் மீது ''(அ) என்னும் பிரிவில் 'கைத்தலமலர், கண்மலர்' இவை உவமைத் தொகையா? பண்புத்தொகையா? என வினாவியவர்தாமே (ஆ) என்னும் பிரிவில் இத்தொடர்களில் அமைந்த அணி உவமையணியா? உருவகவணியா? எனவும் வினாவல் கடாவன்மையறிக'' என வினாவழுக் கற்பித்தார். அஃது அங்ஙனமன்று, வழுவற்ற வினாவே என்பது காட்டுதும்.

சொல்லிலக்கணம் கண்ணுக அறியத்தகும் சொன்முடிபு பொருண்முடிபுகளை அணியிலக்கணம் காட்டுமா? தொகைநிலைத் தொடரில் யாண்டுப் பொருள் சிறந்து நிற்கும்? இத்தொடர் முன்மொழி நிலையலோ? பின்மொழி நிலையலோ? முன்மொழி நிலையாயிற் பண்புத்தொகையாமன்றே? பின்மொழி நிலையாயின் உவமத்தொகையாமன்றே? என் றின்னோரன்ன ஐயங்களை அணியிலக்கணம் தீர்க்காமையின் சொல்லிலக்கணம் கொண்டு ஒரு தலை துணியும் நெறி யாங்ஙன்? என்று அதனையறிய முதல் வினாவை நிகழ்த்தினார்.

இனி அணியிலக்கணம் கூறும் அணிகளின் ஒற்றுமை வேற்றுமை, இயல்புகள் ஆதியவற்றை அணியிலக்கணங் கண்ணுகக்கொண்டு ஆராய்ந்து முடிவுகாணலாமேயன்றி அவற்றைச் சொல்லிலக்கணங் கொண்டு துணிதல் இயலாதன்றே. அது பற்றி இரண்டணியில் ஒருதலை துணிதற்குரிய அணியிலக்கண நியாயங்கள் யாவை? என்று (ஆ) பிரிவின் வினாவும் நிகழ்த்தற்குரியதேயாம். என்னை? முதல் வினாவின் விடை இரண்டாம் வினாவின் விடையை யாண்டும் முற்ற முடியாதாகலின், அவ்வினா கூறியது கூறலாகிய பயனில் வினாவுமன்று, அசம்பாவிதத்தைக்கடாவிய ஏனை வழுவாய வினாவுமன்று ஆதலின் என்க. அணியிலக்கணம் கண்ணுக உணரத்தக்க பொருளைச் சொல்லிலக்கணம் கண்ணுக அறியலாமென்பரேல்,

''செய்ய அடிக்கமலத் தாலத் திருந்திழையாள், பைய நடந்து பசும்பொழிலற் —றூய்ய, அலர்கட் குவளையினு னேங்கிய கத் தன்பிற், சிலசொற் றனளே தெரிந்து'' என்னுஞ் செய்யுளில், ''அடிக்கமலம்'' ''கட்குவளை'' என்பன உருவக அணியா? பிறிதணியா? என்பதைச் சொல்லிலக்கணம் கண்ணுகத் தாம் ஆராய்ந்து, யாமும் காணக் காட்டுவாராக.

இங்ஙனமே எடுத்துக்கொண்ட வினாவகத்து மென்பது.

''எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர்வில் லெனினில் லாகும்''

என்றார் குமரகுருபர சுவாமிகளும்.

இக் கட்டுரையால் 'இப் பாரதச் செய்யுளின் ஒவ்வொரு தொடரினிலக்கணமும் அணியிலக்கணமும் நுட்பமாக ஆராய்ந்தே நல்லன கொண்டு அல்லன களைந்து திரு. வித்துவானவர்களின் உரை செல்லாநின்றது' என்பதை வினாவாளர் இனிது உணர்வாராக. விடையாளரும் அங்ஙனமே உணர்வாராக.

சாதுவைக் கொலைசெய்த சகோதரிகள்.

பிதற்றலை நம்பிப் பிள்ளையை பலிகொடுத்த பேதை.

டெல்கியில் ஓர் மலைநாட்டைச் சேர்ந்த இரு சகோதரப் பெண்கள் மீது,80 வயதுள்ள ஓர்சாதுவைக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

1932-ம் ஆண்டில் இந்த இரு பெண்சகோதரிகளும் குறிக்கப்பட்ட 80 வயதுச் சாதுவிடஞ் சென்று அவரது தவத்தால் தங்களிருவருக்கும் ஆண்மகவு பிறக்கச் செய்ய வேண்டுமென வேண்டியபோது, சாதுவும் அதற்கிசைந்து அவர்களிடத்தில் 150 ரூபாபெற்றுக்கொண்டு மறைந்துவிட்டாராம். பகத்ராம் என்னுமிச் சாதுவின் கேள்விப்படி இப் பெண்கள் ஒரு ஆண் குழந்தையையும் தேவர்களுக்கெனஎண்ணி பலிசெய்துவிட்டார்களாம். ஆனால் அவர்களிலொருவருக்காவது ஆண்பிள்ளைபிறக்கவில்லைபாம். சிலநாட்களின்முன் இந்தச்சாது திரும்பவும் அந்தக் கிராமத்துக்கு வந்தபோது இவர்கள் கோபாவேசத்தினால் இவரைக் கத்தியால் வெட்டிக் கொலைசெய்துவிட்டார்களாம்.

இரண்டுரூத்தல் அபினுக்கு ஆயிரம் ரூபா.

யாழ்ப்பாணம் 9.

சென்றசெவ்வாய்க்கிழமையாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி திரு. K. ஆள்வாப்பிள்ளை முன்பாக புத்தூரைச்சேர்ந்த இராமலிங்கம் கணபதிப்பிள்ளை யென்பவர் இரண்டு ரூத்தல் அபின் ரயிலில் கொண்டுசென்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணையின்பின் குற்றவாளியாகக்கண்டு எதிரிக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ந-நி.

இறந்த எதிரி மீண்டுங் கோட்டில்.

யாழ்ப்பாணம் 6.

1934-ம் ஆண்டுக்கு தமதுமோட்டார்காருக்கு லைசென்ஸ் பெறவில்லையென்று நகரசங்கத்தலைவர் திரு. R. R. நல்லையாவால் ஸ்ரீமதி நாகலிங்கம் சுப்பையா என்னும் பெண் மீது குற்றஞ் சாட்டப்பட்டது. கட்டளை கொடுக்கும் சேவகன் எதிரி இறந்துவிட்டாரெனக் கூறியதன்பேரில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால்,எதிரி பருத்தித்துறையில் வசித்துவருகிறாரெனவறிந்து மீண்டும் வழக்கு தொடர்ந்தபொழுது எதிரி கோட்டில் சமுகமாயினர். ந-நி.

அராலி வாணிவிலாச சபையாரின் இரங்கற் கூட்டம்

நிகழும் யுவஹு ஆடிமீ ககூ-ம (3-8-35) சனிவாரத்தன்று பிற்பகல் 7-மணியளவில் கமலாசனிவாசிகசாலை மண்டபத்தில், ஷை சபையின் அங்கத்தவரும் அராலிதெற்கு சரஸ்வதி வித்தியாசாலை ஆசிரியருமாகிய கனம். கந்தப்பு என்பவர் ஆடிமீ 7-ம்உ தேதி கவியோகம் அடைந்ததையிட்டு ஷை சபையார் ஓர் இரங்கற்கூட்டம் நடத்தினர். கடிதம்.

மாற்றம்

மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் துவஜாரோகணம் திருக்கணித பஞ்சாங்கத்தில் ஆவணிமீ கஅ-ம செவ்வாய்க்கிழமை என்றிருத்தலை ஆடிமீ உக-ம திங்கட்கிழமையென மாற்றப்பட்டிருக்கிறது.

மேலும் ஆடிமாதம் ௩0-ம (14-8-35) புதன்கிழமை ரதோற்சவமும் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

மீசாலைதெற்கு 5-8-35 } த. சிதம்பரப்பிள்ளை

ஜோதிட விளம்பரம்

ஜாதகம் எழுதுவித்துக்கொள்ள விரும்புவோர் தங்கள் தங்கள் இஷ்டப்படி சுத்தமாகவும் சீக்கிரமாகவும் செய்வித்துக்கொள்ளலாம்.

கிரகஸ்புடம், பாவஸ்புடம், தசவர்க்கம், அஷ்டவர்க்கம், கிரகசமயம், கிரகபலன், அஷ்டவர்க்கபலனும், காலதெசை, பிராணதெசை, சீவதெசை, மனோதெசை, மிருத்துதெசை, இவைகளும், மகாதெசை அந்தரபலனுக எழுதியுங் கொடுப்பதற்கு ரூபா 60.
ஷை ஒருதெசைக்கு அந்தரபலனும் மிகுதி புத்திபலனுமெழுத ரூ.35.
ஐந்துவருஷ அந்தரபலனும் மிகுதி புத்திபலனும் எழுத ரூபா 10.
முற்றும் புத்திபலனும் சுருக்கமான பிறபலன்களும் எழுத ரூபா 5.
குறிப்பு எழுத ரூபா 1. விவாகப் பொருத்தம் பார்க்க ரூபா 2.

கோவில், வீடு, கிணறு முதலிய கிருகசம்பந்தமான கருமங்களும் எம்மிடம் செய்வித்துக்கொள்ளலாம்.

ஜாதகம், குறிப்பு, ரேகை முதலியனமூலம் தற்காலம் நடக்கும் பலாபலன் அறிய விரும்புவோர் ரூபா 1 கொடுத்தல்வேண்டும்.

☞ ஜாதகம் எழுதுவித்துக்கொள்ள விரும்புவோர் பிறந்த ஊர், வருஷம், மாதம், தேதி, நேரம், ஆண், பெண் முதலியவற்றின் சரியான விபரத்துடன் மேற்காட்டிய விலாசத்திற் பாதி முற்பணமாக அனுப்பவேண்டும்.

K. Vaithilingam,
Astrologer,
Urelu, Jaffna.

க. வைத்தியலிங்கம்,
சோதிடர், ஊரெழு,
சுன்னாகம், யாழ்ப்பாணம்.

(188) 9-9-34

விலை நிதானம்! நயம் சரக்கு!

எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கெங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்

மு. குமாரசாமிப்பிள்ளை கடையில்

கெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
கயிற்றுவகைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்

விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.

திறம் இங்கிலீஷ்மேக்குடைகளும், யப்பான்குடைகளும் குறைந்த விலையில் ஏராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மு. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(22) 19-2-34.

சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை

நிகழும் யுவஹு ஆடிமீ 23உ புதன்கிழமை ஷை சுவாமிகளது குருபூசை பொன்னாலைக்கட்டுவன் சைவ வாலிபர்சங்கத்தால் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்று பகல் பொன்னாலைக்கட்டுவன் ஆயிக்கடவைச் சித்திவிநாயகப் பெருமானுக்கு அன்னாபிஷேகமும் ஏழைகளுக்கு அன்னதானமும் செய்யப்பெற்றன. அந்தணர் அறுவர் நிரையேயிருந்து சிவபூசை செய்தகாட்சி யாவர் மனதையும் கவர்ந்தது. மாலை 5 மணியளவில் பொன்னாலைக்கட்டுவன் சந்தியில் வலிகாமம் வடக்கு கிழக்கு மணியகாரன் திரு நா. வேலுப்பிள்ளை அவர்களும் ஊரவர்களுமாக திரு. சு. நடேசபிள்ளை அவர்களை வரவேற்று; மேளவாத்திய சகிதமாக அழைத்துக்கொண்டு அவ்வூர் அரசினர் பாடசாலையை அடைந்தனர். அங்கே யாழ்ப்பாணம் கச்சேரி இரண்டாவது முதலியார் பிரமஸ்ரீ. சி. சோமசுந்தரஐயர் அவர்களுடைய தலைமையில் கூட்டம் ஆரம்பமாயது. தேவாரம் ஓதி முடிந்ததும், திரு. நடேசபிள்ளை மீது பாக்கள் பாடப்பெற்றன. வந்தனோபசாரப்பத்திரம் காரியதரிசியால் வாசிக்கப்பட்டது. பின்னர் அவைத்தலைவரின் ஆரம்ப உரையின் பின் திரு. நடேசபிள்ளை அவர்கள் தம்பிரான் றோழர்'' என்னும் விஷயத்தையிட்டுச் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். பின்னர்; பரமேஸ்வராக்கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ நவநீதகிருஷ்ணபாரதி அவர்கள் சுந்தரர் கவித்துவம் என்பதுபற்றிப் பேசினர்; பிரம்மஸ்ரீ. செ. பாலசுப்பிரமணியஐயர் அவர்களாலும் காரியதரிசி திரு. அ. தர்மதுரை அவர்களாலும் குறிகள் கூறப்பட்டன. கூட்டம் தேவாரத்தோடு, மாலை 9½ மணியளவில் நிறைவெய்தியது. (கடிதம்)

புகையிலைக் கைத்தொழில்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள புகையிலைக் கமக்காரர்கள், புகையிலைச்சுருட்டு முதலாளிகள். பலவிதமான புகையிலையில் வியாபாரஞ்செய்யும் வர்த்தகர்கள் யாபேரும் ஒருங்குகூடி, வடபகுதி கிருஷிகத் தலைமை உத்தியோகஸ்தர் திரு. W.R.C. போல் அவர்களைத் தலைமையாகக்கொண்டு 13-8-35 செவ்வாய்க்கிழமை 4 மணிக்கு திருநெல்வேலி அரசினர் கிருஷிக கலாசாலையில் ஓர் மகாசபை கூடப்படும். அத்தருணம் புகையிலைச் செய்கை அபிவிர்த்தி, வியாபாரம் என்பனவற்றைப்பற்றிய புதுயோசனைகள் மிக நுட்பமாக ஆராயப்படும்.

புகையிலைக் கைத்தொழிலில் நன்னோக்கம் உடையவர்கள் யாவரும் இக்கூட்டத்திற்குச் சமுகமளிக்கும்படியும் சமுகமளிக்க வசதியில்லாதவர்கள் தங்கள் புதுயோசனைகளை அறிவிக்கும்படியும் வேண்டப்படுகின்றனர். கடிதம்

பாவத்திற்குப் பயந்து பொருளைத்தேடிப் பங்கிட்டுண்ணு மொருவன் சந்ததியானது குறைதலில்லை.

Registered as a Newspaper. 16 Pages

"The EeLAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 } Chunnakam, Jaffna, 11th August 1935, Sunday. { No. 6

பவுண்மார்க் ஓடுகள்



இப்பொழுதும் விசேடமாக மதிப்புப்பெறும் பவுண்மார்க் ஓடுகள் இவைகளே.

எப்பொழுதும் நல்ல பதிப்பாக்கமுடைய ஓடுகள் மாளிகைகளில் வேயப்படுபவையாகும்.

இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பேலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும் படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதெனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.

இங்ஙனம்

சி. வீரகத்திப்பிள்ளை அன்டு சன்ஸ்

(இவை விற்குமிடங்கள்)

யாழ்ப்பாணம் { பெரியகடை, பறங்கித்தெரு } சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்

பருத்தித்துறை ....
வல்வெட்டித்துறை
காங்கேயன்துறை

காரைநகர் .... சி. க. ஆறுமுகம்பிள்ளை

ஊர்காவற்றுறை .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ்

(103) 23-9-34.

அகில இலங்கை

ஆதாய ஏலச்சீட்டுக் கம்பனி

THE LANKA BENEFIT CO.,

GRAND BAZAAR, VANNARPONNAI, JAFFNA.

தலைமைக் காரியாலயம் :
பெரியகடைத்தெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

கிளைக் காரியாலயங்கள்:
சங்கானை, காங்கேசன்துறை, சுன்னாகம்

பின்வரும் வகுப்புகள் இப்போ அமைக்கப்படுகின்றன

A	4-ம் வகு.	1000/- ரூபா	40/- ரூபா	வீதம்	25	மாதத்திற்கு
B	8-ம் ,,	500/- ,,	20/- ,,	,,	25	,,
C	12-ம் ,,	250/- ,,	10/- ,,	,,	25	,,
D	7-ம் ,,	125/- ,,	5/- ,,	,,	25	,,
BMC	2-ம் ,,	250/- ,,	10/- ,,	,,	12½	,,
WC	3-ம் ,,	250/- ,,	5/- ,,	,,	50	கிழமைகட்கு
WD	4 ,,	125/- ,,	5/- ,,	,,	25	,,
தினசரி	6&7ம் ,,	100/- ,,	1/- ,,	,,		

வேண்டிய விபரங்கட்குக் கீழ்க்காணும்விலாசத்திற்கு எழுதி அறிக.

மனேஜர், அகில இலங்கை ஆதாய ஏலச்சீட்டுக் கம்பனி
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(175) 5-8-34

திருநெல்வேலி ஒற்றுமைநிதி

(வரைவுளது)

அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 500,000

ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி
ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்.

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.

வேண்டிய இடங்களில்
கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.

தேசீயகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும் ஆதலால்

முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.

இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறோம்
உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும்
சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

வ. சோமசுந்தரம், காரியாதிகாரி.

(203) 18-11-34—11-35

பவளகாந்தன் அல்லது கேசரிவிஜயம்

குறைந்த விலை! நிறைந்த பொருள்!

17 அத்தியாயங்கள் 550 பக்கங்கள்

விலை ரூபா 2.

தனலக்குமி புத்தகசாலை
சுன்னாகம்

சாலாமிசிரி லேகியம்

இந்த லேகியத்தை நான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரபுக்கள் மாத்திர மல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுநலத்தைக் கருதியே இப்போது இதைப்பற்றி விளம்பரப் படுத்தினோம்.

இது சாலாமிசிரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாக, பீதாஞசாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவானி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம் அப்ரக் பஸ்பம், பவள பஸ்பம், வெள்ளி பஸ்பம், அயக்காந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துள் உண்டாயிருக்கும் பக்க வாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டு வந்தால் மேற் சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இதன் விலை ராத்தல் ஒன்றுக்கு ரூபா. 20. அரை ராத்தல் ரூபா 10. கால் ராத்தல் ரூபா 5. தாபற்செலவு வேறு.

சிங்கப்பூர், பினங்கு, முதலிய தொடுவாய் ராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணியார்டர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தாங்குடி போஸ்ட், மட்டக்களப்பு, சிலோன்.
Kattankudi P. O. Batticaloa, Ceylon

(25) 21-1-34.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்—மயிலிட்டி தெற்கு "திருமகள் நிலைய" த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் "தலையாட்டி" யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1935-ம் வரு ஆகஸ்ட்மீ 11-ந உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.